Registered as a News paper in Ceylon

விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 12 | மார்கழி 5 | ஷவ்வால் 20 | ( 20—12—70 ) | ஞாயிற்றுக்கிழமை | இதழ் 311

**முக்கிய அறிவித்தல்**

மில்க் வைற் நீல சோப் போல் வேறு சோப்புகள் விற்பனைக்கு வருவதால் மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை கவனித்து எங்கள் விற்பனை வான்களில் வாங்குங்கள். வழமை போல் மில்க் வைற் நீல சோப் மேலுறைகளை சேகரித்து பரிசுகளைப் பெறுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

தபால் பெட்டி இல 77 யாழ்ப்பாணம்.

# காங்கேசன் துறைமுக வேலை ஆரம்பிக்க நடவடிக்கை

## உல்லாசப் பிரயாண உதவி அமைச்சர் உறுதி

மாவிட்டபுரம், ஞாயிறு தற்பொழுது வேலைகள் நிறுத்தப்பட்டுள்ள காங்கேசன்துறைதுறைமுகவேலைகள் பற்றி ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்து விரைவில் வேலைகளை ஆரம்பித்துவைக்க நடவடிக்கை எடுப்பதாக உல்லாசபிரயாண கப்பல்துறை உதவிமந்திரி திரு விக்கிரமசிங்கா காங்கேசன்துறையில் நேற்று வாக்குறுதியளித்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உதவிமந்திரி விஜயம் செய்தபோது உதவிகாரியதரிசி திரு விஜயவர்த்தனவும் வந்திருந்தார். மேலதிக அரசாங்கஅதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம், உதவி அரசாங்க அதிபர் திரு. ரி முருகேசம்பிள்ளை, காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. வி பொன்னம்பலம், காங்கேசன்துறை பட்டினசபைத்தலைவர் திரு. கே. ஜெயபாலசிங்கம், திரு. அல்பிரட் துரையப்பா, நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உதவியமைச்சர் மேலும் பேசுகையில், கீரிமலை, வளலாய் ஆகிய இடங்களில் குறைந்த செலவில் உள்ளூர் மக்கள் பயனடையத்தக்கதாக, உல்லாசப் பிரயாணிகள் விடுதிகள் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினர்.

உதவிமந்திரி கீரிமலை வளலாய் ஆகிய இடங்களுக்கு சென்று, உல்லாசப்பிரயாணிகள் விடுதிகள் அமைக்கப்படவிருக்கும் இடங்களைப் பார்வையிட்டார் அதன் பின் காங்கேசன்துறை பட்டினசபைக்கு விஜயம்செய்து அங்கு நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டார்.

விடுதிச்சாலை அமைக்கும் கோரிக்கைபற்றி தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. சிதம்பரநாதன் பேசுகையில், கீரிமலைக்குஅப்பால் நிறுவும்படி கேட்டுக்கொண்டார். காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் பாவித்துவந்த வீடுகளை உல்லாசப்பிரயாணிகள் விடுதிச்சாலைகளாகப் பாவிக்கலாம் என்றகருத்தும் தெரிவிக்கப்பட்டது.

சரக்குகளை இறக்குமதிசெய்யலாம் என்ற கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

ஆசிய ஹாக்கி

### பாகிஸ்தான் வெற்றி

பாங்கொக், டிசம்பர், 19 பாங்கொக்கில் இன்று இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் ஒரு கோலைப் போட்டு பாகிஸ்தான் வெற்றிபெற்றுள்ளது. ஆட்டம்விறுவிறுப்பாக நடைபெற்றது. இந்தியா கோல்போடக்கூடிய பல சந்தர்ப்பங்களை இழந்துவிட்டது.

### இலங்கை டாக்டருக்கு இந்தியா அழைப்பு

யாழ்ப்பாணம். ஞாயிறு தமிழ் நாட்டில் அமைக்கப்படவிருக்கும் கண்பரிசோதனை முகாம்களில் பங்குபற்றுமாறு கண்வைத்தியநிபுணர் டாக்டர் ஆர். பரராசசிங்கம் அழைக்கப்பட்டுள்ளார்.

மதுரை வைத்திய கல்லூரியினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக் கண்பரிசோதனை முகாம்களில் தினமும் வைத்திய நிபுணர்களால், பார்வை அளிக்கும் நூற்றுக்கணக்கான சத்திரசிகிச்சைகள் நடாத்தப்படும்.

இலங்கை தேசிய சங்கம் குருட்டுத்தன்மையைத் தடுக்கும் நோக்கமாக இதே போன்ற கண்பரிசோதனை நிலையங்களை இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பின்தங்கிய கிராமங்களில் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய முன்னணி ஒற்றுமை

# பிற்போக்கு சக்திகளை முறியடிக்க உதவியது

## சமசமாஜ விழாவில் பிரதமர்

கொழும்பு, சனி "இந்நாட்டின் பிற்போக்கு சக்திகளை முறியடிப்பதற்கு ஐக்கிய முன்னணி ஓர் சபை நிறுவியுள்ளது. முற்போக்கு சக்திகள் ஒன்றுபட்டு இருக்கும்வரை பிற்போக்கு சக்திகள் தலையெடுக்க முயாது. மேமாதம் நடந்த பொதுத்தேர்தல் மூலம். ஐக்கிய முன்னணி இந்நாட்டில் பெரும் சாதனையை நிலைநாட்டிவிட்டது".

இவ்வாறு கொழும்புநகர மண்டபத்தில் நடந்தலங்கா சமசமாஜக்கட்சியின் 35வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில் கூறினர்.

விகாரமாதேவி பூங்காவில் நடந்த இவ்விழா தொடர்பாக இன்று நடந்த கூட்டத்திற்கு நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தலைமை வகித்தார். சமசமாஜ பிரமுகர் பலரும் உரைநிகழ்த்தினர்.

யாழ், ஆஸ்பத்திரியில்

# டாக்டர் வழங்கும் பாஸ்களை காவலாளிகள் புறக்கணிப்பு?

## நோயாளிகள் கவனிப்பாரற்று அவதி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ள ஆபத்தான நோயாளிகளுடன் நிற்பதற்காக டாகடரினல் வழங்கப்படும் 'பாஸ்'களை காவலாளிகள் சிலர் நிராகரிக்கிறார்களாம்.

இதுபோன்ற சம்பவம் ஒன்று இம்மாதம் 18-ந் திகதி இரவு நடைபெற்றது. 'பாஸ்'களுடன் வருபவர்களையும் உள்ளே அனுமதிக்க வேண்டாமென வைத்திய சுப்பிரின்டனல் உத்தரவிடப்பட்டுள்ளதாகக் கூறி, பாஸ்களும் காவலாளியால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் புகார் கூறப்படுகிறது. காவலாளிகளின் இத்திடீர் நடவடிக்கையினல் நேற்று முன்தினமிரவு பலர் அவதிக்குள்ளாயினர். நோயாளிகளுடன் நின்று வெளியே சென்ற பல உறவினர்களான உதவியாளர்கள் உள்ளே செல்ல முடியாமல் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதுபற்றி வைத்திய சுப்பிரின்டன் டாக்டர் அருட்பிரகாசத்திடம் நமது பிரதிநிதி விசாரித்தபோது. நோயாளிகளுடன் நிற்பதற்காக வழங்கப்படும் பாஸ்களுடன் எந்தநேரமும்உள்ளே செல்லமுடியாதென்றும், பாதுகாவலராக நிற்பவர்கள் மாறிமாறிநிற்கவேண்டுமானல் ஆஸ்பத்திரி இடைவேளையின்போது மாறிக் கொள்ளவேண்டுமென்றும் கூறினர். ஆயினும் பாஸ்களுடன் வருபவர்களைஉள்ளே செல்ல அனுமதிக்கவேண்டாம் என்று உத்தரவிடப்படவில்லை என்றும் அவர் சொன்னர்.

இவ்விதம் பாதிக்கப்பட் ஒருவர் ஆஸ்பத்திரி வைத்திய சுப்பிரின்டனிடமும் யாழ். மாவட்ட சுகாதார அத்தியட்சகரிடமும் புகார் செய்துள்ளார்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நிர்ணய சபை

# "சட்டத்திற்கு முரணானது; பிரிவிக் கவுன்சில் ஏற்காது"

**— எஸ். ஜே. வி**

**அரசியல் நிர்ணயசபையும், அரசியல் அமைப்பு விதிகளும், சட்டபூர்வமானதா? இல்லையா? என்பது பற்றிச் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த மூன்று தலைவர்களின் கருத்து இங்கே தரப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், கம்யூனிஸ்ட் கட்சி வடபிரதேச தலைவர் திரு. வி. பொன்னம்பலம் ஆகிய மூவரின் கருத்துக்கள் இவை. கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு வெளியீடான 'இளம் தென்றல்' என்ற மலரில் வெளியான கருத்தே இவை.**

**திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்**

"கடந்த பொதுத்தேர்தலின் பின் அமைக்கப்பட்டுள்ள அரசியல் நிர்ணய சபையையே இங்கு நாம் குறிப்பாகக் கவனத்தில் கொண்டிருப்பதினால் கடந்த காலங்களில் பல்வேறு நாடுகளில் பொதுவாக அரசியல் அமைப்பு விதிகள் எவ்வாறு உருவெடுத்தன என்பதைச் சுருக்கமாகச் சிந்தித்துப் பார்த்தல் சாலப்பொருந்தும்.

புதிய அரசியல் அமைப்பு விதிகள் செயற்படுகையில் வழக்கிலிருந்துவந்த நிலையில் ஒரு மாற்றம் ஏற்படுவதோடு புதியதோர் சகாப்தமும் பிறக்கின்றது என்பதினை ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஓர் ஏகாதிபத்திய வல்லரசின் மேலாட்சி நிலைக்கு (Suzerainty) உட்பட்டிருந்த நாடுகளில் உதாரணமாக முன்னைய பிரித்தானிய சாம்ராச்சியத்தின் ஆதிக்கத்தின்கீழ் குடியேற்ற நாடுகளாகவும், அரசுரிமை

தென்னாபிரிக்கா தனது அரசியல் அமைப்புவிதிகளை வரைவதற்கான ஓர் அரசியல் நிர்ணயசபையை இதற்குச் சட்டத்தில் இடமளிக்கப்படாதபோதிலும், ஏற்படுத்துவதெனப் பொதுசன வாக்கெடுப்பின்மூலம் தானாகவே தீர்மானித்தது.

எவ்விடத்திலாவது உண்டா என்பதைச் சற்றுக்கவனிப்போம். இதற்கு சமமானதோர் சபை எவ்விடத்திலும் இல்லை என எவரும் எடுத்த எடுப்பிலேயே ஒப்புக்கொண்டபோதிலும், பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகளுக்கிடையிலான உறவையும், ஏனைய நாடுகளின்

காரத்தைப்பெறுதலே மிகச் சரியான நடைமுறையென்பதில் எதுவித ஐயமுமில்லை. இலங்கையில் கூட்டுஅரசாங்கத்தை அமைத்துள்ள ஐக்கிய முன்னணியின் அங்கத்துவக்கட்சிகள் முற்றிலும புதிய அரசியலமைப்பொன்று அரசியல் நிர்ணய சபைமூலம் வரையப்பட

அரசியல் நிர்ணயசபையாக மாற்ற இருப்பதைச்சந்தேகமற்ற முறையில் பிரகடனம் செய்திருந்தனர். சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான நன்றிதெரிவித்தல்பிரேரணையின் வாக்கெடுப்பின் போது இது சபை முன்விடப்பட்டு வாக்குப்பிரிவு எதுவுமின்றி நிறைவேற்றப் பட்டதை நாம் மறுக்கமுடியாது.

எனது தாழ்மையானகருத்தின்படி இந்த இரண்டு உண்மைகளும் எம்மை எதிர்நோக்கி இருக்கும்போது அரசியல் நிர்ணய சபையில் சட்டமுறையான நேர்மையையோ அல்லது அரசியல் முறையானநேர்மையையோ கவனத்தில் கொள்ளுதல் வீணானதாயும், விளைவற்றதாயும் அமைகின்றது. அரசியல் அமைப்பொன்றை வரைவது எவ்வகையிலும் இலகுவான காரியமாகாது. ஒரே தன்மையான குடிமக்கள் ஒரேமொழியைப் பேசுபவர்களாகவும் பிரதான

# "நேர்மையற்றதென பிரிவிக் கவுன்சில் பிரகடனப் படுத்தக்கூடும் என நான் கருதவில்லை"

**— ஜீ. ஜீ.**

நாடுகளாகவும் இருந்த நாடுகளில் இவைஒவ்வொன்றிற்கும் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தபோது இந்நாடுகளுக்கு ஐக்கிய இராச்சியத்தின் ஏகாதிபத்திய அரசாங்கத்தின் செயல் சட்டத்தின் மேலானதோர் அரசியல் அமைப்பு முக்கியமாக வழங்கப்பட்டது.

இது பல நாடுகளிலும் அந்த அந்த நாடுகளை ஆட்சி செய்யும் ஸ்தாபனங்களைக் கட்டுப்படுத்துவதற்கும். அதற்குரிய அதிகாரங்களைப் பெறுவதற்குமான நாட்டின் மிக உயர்ந்த சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. வேறுவிதத்தில் சொல்லப்புகின் ஐக்கிய ராச்சியத்தின் நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்டபோதிலும் அவை மிகஉயர்

எனது அறிவுக்கு எட்டிய அளவில் தென்னாபிரிக்கா அரசாங்கத்தின் இச்செயலின் சட்டமுறையான நேர்மையோ Legaiity) அரசியல் அமைப்பு முறையான நேர்மையோ (Constitutionality) எப்போதாவது எவரும் குற்றங்கண்டுள்ளதாகத் தெரியவில்லை.

அயர்லாந்தின்விடயத்தில் 1937-ம் ஆண்டில் நாடாளுமன்றம் தன்னைத்தானே ஓர் அரசியல் நிர்ணய சபையாக மாற்றியமைத்துக் கொண்டு தனது அரசியல் அமைப்பு விதிகளைவரைந்து கொண்டது. ஆயினும் அரசியல் அமைப்பு வரைந்து முடிவுற்றதும் அதனை அங்கீகரிக்கும் வகையிலான பொதுசன வாக்கெடுப்பு அன்று நடைபெற்றது.

அரசியலமைப்பு விதிகளின் பிறப்பையும் மனதில் கொண்டுஇப்படியானதோர் அரசியல் நிர்ணயசபையை ஏற்படுத்துவதின் சட்டமுறையிலான நேர்மையையும், அரசியலமைப்பு முறையிலான நேர்மையும் விவாதிப்பதில் பயன்தரவல்லது தானா என்றே எண்ணவேண்டியுள்ளது.

இலங்கையில் உள்ள எந்த விதமான நீதிமன்றமும், அரசியல் நிர்ணய சபை ஒன்று ஏற்படுத்தப்பட்ட சட்டமுறை நியாயமற்றதெனத் தீர்ப்புக்கூற ஆயத்தமாயிருக்கமாட்டாதென நான் துணிந்து கூறுவேன்.

வெஸ்ட்மினிட்டர் சாசனத்தை முன்வைத்துநோக்குகையில் இலங்கையின் அரசியல் நிர்ணயசபையை

வேண்டுமென நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் எப்போதும் கூறிவந்துள்ளன, சென்ற நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தில் இன்றுள்ள அரசியலமைப்பில் திருத்தங்கள்மட்டும் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தெரிவுக்குழுக்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கவோ, அல்லது அவற்றில் அங்கம் வகிக்கவோ அவை மறுப்புத் தெரிவித்துவந்ததிலிருந்து இவை தமது கருத்தில் எவ்வளவுதூரம் உறுதியாக நின்றன என்பது புலனாகின்றது. தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கிய முன்னணியினர் புதிய அரசியல் அமைப்பொன்றை வரைவதற்கு நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதற்

மாக ஒரே சமயத்தைப்பின் பற்றுபவர்களாகவும்இருந்தவிடத்து இது இலகுவானதாகும். ஆனால் பலஇனக் குடிமக்களைக் கொண்டவிடத்து பெரும்பான்மைச் சமூகத்தவரின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும்வகையிலானதோர் அரசியல் அமைப்பை வரைந்து அதே வேளையில் சிறுபான்மையோருக்கும் அவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தி அவர்கள் சட்டத்தின் கணகளின்முன் எல்லா விதத்திலும் சமஉரிமை கொண்ட பிரஜைகளாகக் கணிக்கப்பட சட்டத்தினால் சமஉரிமையோடு பாதுகாக்

# "பிரிவிக் கவுன்சில் மூலம் எம்மை காப்பாற்ற வேண்டும் என்பதற்கில்லை"

**— வி. பி.**

ந்த அதிகாரம் படைத்தனவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கனடா, நியூசிலந்து, அவுஸ்திரேலிய போன்ற நாடுகளின் அரசியல் அமைப்பு விதிகளை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்தியாவைப் பொறுத்தமட்டில் அதன் புதிய அரசியல் அமைப்பு விதிகளை வரைவதற்கான அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்துவதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்தின் செய்சட்டம் மூலம் அழிக்கப்பட்டது. வேறுஇரண்டுநாடுகளில் வித்தியாசமான முறையில் இது அமைந்திருக்கின்றது.

அமெரிக்கா, சோவித் ரஷ்யா, பிரான்ஸ், நாடுகளின் அரசியல் அமைப்பு விதிகள் முற்றிலும் மாறுபட்ட ஒருவகையினுள் அடங்கும். இந்த மூன்று நாடுகளினதும் அரசியல் அமைப்பு விதிகள் பொதுமக்களின் சுதந்திரமான, மேலான விருப்பத்தை பிரதிபலிப்பதாகச்சொல்லிக்கொண்ட அரசியல் நிர்ணயசபைகளால் வரையப்பட்டனவாகும்.

இதனை எமது பின்னணியாக வைத்துக்கொண்டு இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் நிர்ணய சபையை அமைப்பு, [illegible]

சட்டமுறை நேர்மையற்றதென்றோ, அரசியலமைப்பு நேர்மையற்றதென்றோ பிரிவுக்கவுன்சில் பிரகடனம் செய்யக்கூடும் என நான் கருதவில்லை. ஆனால் புதிய அரசியலமைப்பு விதிகளை வரைவதற்கானதோர் அரசியல் நிர்ணயசபையை ஏற்படுத்துவதற்கு சுதந்திரமான பொதுசனங்களின் மனப்பூர்வமான ஆதரவு உண்மையாகவே இருந்துள்ளதா என்பதே பிரயோசனமான வழியில் நாம் சிந்திக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

[illegible]

கான அதிகாரத்தை மக்களிடம் கோரிவந்ததாகத் தோன்றலாம். இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக உரிமை கொண்டாடினாலும் தனி வாக்காளர் ஒருவர் ஐக்கியமுன்னணிக்கு வாக்களித்தபோது குறிப்பாக இப்பிரச்னையை மனதில் நிலை நிறுத்திக் கொண்டு வாக்களித்தாரா என்பது தர்க்கத்திற்குரிய விடயமாகும்.

இவ்விடயம் அத்துடன் முற்றுப் பெறவில்லை. இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் ஆற்றப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தின்போது நாடாளுமன்றத்தை ஒரு

கப்பட, நிர்வாகத்தினால் சமத்துவத்தோடு நடத்தப்பட வழிவகுப்பது கஷ்டமானது. மிகச்சிக்கலானது.

ஓர் அரசியல் அமைப்பு எந்த ஒரு நாட்டினதும் அதி உயர்ந்த சட்டமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தொன்றாகும். அரசியல்அமைப்பின் நியதிகளிலிருந்துதான் எந்த ஒரு நாட்டின் எந்த ஒரு ஸ்தாபனமும் தனது அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுகின்றது. ஆகவே ஒரு நாட்

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேட்பவர் பெற்றிடுவார் தேடுவார் கண்டடைவர்!

# இத் தத்துவத்தின் வித்தாக மண்ணில் பிறந்த யேசுபிரான்

காலத்திற்குக் காலம் காலத்தால் சாகாது ஞாலத்தில் என்றும் நிலைத்து நிற்கும் நல்ல பணியைச் சான்ருேர் ஆற்றுவர்' என்று திரு. வி. க. அடிக்கடி கூறுவதுண்டு. இதற்கமையப் பகவத்கீதையில் பரந்தாமனும் 'உலகில் தீமைகள் மலிந்து நன்மைகள் நலிவுறும் போதுயான் உலகில் தோன்றி தீமைகளை அழித்து நல்லனவற்றை நிலைநாட்டுவேன்' என்று கூறியுள்ளார். ஏறக்குறைய இதே கருத்தைத்தான் கிறிஸ்து பெருமானும் தனது விவிலிய நூலில் 'வறியோர்க்கு நற்செய்தி(சுவிசேஷம்) உரைக்கக் கடவுள் என்னை ஏற்படுத்தினர். சிறைப்பட்டோருக்கு விடுதலையையும். குருடருக்குப் பார்வையையும் நல்கவும் ஒடுக்கப்பட்டோருக்கு உயர்வு கொடுக்கவும், ஆண்டவனது அருள்விளங்கும் காலத்தை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினர்' என மொழிந்துள்ளார்.

### முடிவில்லாமல் நிலைத்து நிற்கும் மூன்ருண்டுப் பணி

உலக வரலாற்றில் இயேசு கிறிஸ்துவின் வாழ்வும், பண்



பும் தனியிடம் பெறுகின்றன. எனினும் அவரின் பணி அவரின் முப்பதாம் ஆண்டில் தொடங்கி முப்பத்திமூன்றில் முடிவுற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சுருங்கக் கூறின் இயேசுகிறிஸ்து உலகில் வாழ்ந்தகாலம் 33 ஆண்டுகள். அதிசயங்கள் பல செய்து ஆண்டவனின் அருளைவேண்டி மக்களுக்கு உவமை நயத்தோடு அறிவுரை வழங்கிய காலம் அவரின் மூன்ருண்டு இறுதிக் காலமே.

### இயேசுவின் மறைமொழிகள்:

'இயேசுகிறிஸ்து அவர்கள் முன்னை மொழிகளோடு, தான் மோதவரவில்லையென்றும் மாருக அவற்றை நிறைவேற்றவே தான் வந்துள்ளேன்' என்றும் கூறுகிருர், அவ்விதம் கூறியவர் உலகில் என்றும் அழியாத மறைமொழிகளை வழங்கியுள்ளார். இந்தப் பேருண்மையை நம் வள்ளுவப் பெருந்தகை 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்று உறுதிகூறுகிருர்.

இயேசு அவர்கள் அடிக்கடி வலியுறுத்திய கருத்துக்கள் ''பாவிகளை மன்னியுங்கள், தீமை செய்தோருக்கும் நன்மைசெய்யுங்கள், பொறுமையைக் கடைப்பிடியுங்கள் அப்பொழுதுதான் இறையருள் உங்களுக்குக் கிட்டும்'' என்பதே இக்கருத்துக் கருவூலத்தை நம்மணவழகஞர் (திரு வி க) தனது 'கிறித்து மொழிக் குறள்' என்ற நூலில் பின்வருமாறு மூலக்கருத்து சிதைவுருது செந்தமிழில் செப்புகிருர். அவற்றுட் சில இங்கே தரப்படுகின்றன.

'பல்லுக்குப் பல்லென்றும்
கண்ணுக்குகண்ணென்றும்
சொல்வதைக் கேட்டிருப்பீர்
தும்பு'
தீமைக்கெதிர்ப்பளித்தல்
தீயதே என்பன்யான்
தீமைக்குத் தீமையே தீது
ஒருவனொரு கன்னத்தில்
ஓங்கி அறைந்தால்
மறுகன்னங்
காட்டி மகிழ்
ஒருவனெகு போர்வைக்
குழன்று வழக்
கிட்டால் தருக அரையு
அங்கியுடன் தாழ்ந்து
நேசி அயலவனை
நேர்ந்து பகைவனைக்
கூசிடுவீர் என்பது
[illegible]
என்மொழியைக் கேளுங்கள்
எங்குமுள இறைவன்
அன்பொன்ற றிகவே
ஆய்ந்து
மாற்ருரை நேசியுங்கள்
வாழ்த்துங்கள் சூழரைப்
போற்ருர்க்கும் ஆற்றுங்கள்
போற்று
மிக்க அபாண்டம்
விளம்பிவதைப்போர்க்கும்
தக்க செபம்
செய்யுங்கள் சார்ந்து
அப்பொழுதே மேலுலக
அப்பனுக் குண்மைச்சேய்
இப்புவியில் ஆவீர்
இயைந்து

### வள்ளுவரின் வாய்மொழி

இயேசுவின் இவ்வரிய கருத்துக்கள் நம் வள்ளுவர் வாய்மொழியில் பின்வருமாறு வழிந்தோடுகின்றது. 'இன்ஞ செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்', 'இன்ஞ செய்தார்க்கு இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' வாழ்ந்த காலத்தாலும் பிறந்த இனத்திலும் பேசிய மொழியிலும் இவர்கள் மாறுபட்டாலும் இவர்களின் எண்ணத்தின் ஏற்றத்தில் உள்ள ஒருமைப்பாட்டைக் கண்டு எம்முள்ளம் உவகையுறுகிறது.

### கிறித்துவும் ஒளவையும்

நம் கிறித்து அவர்கள் இன்னுமோர் இடத்தில் 'என்னத்தை உண்போம், எதனைக்குடிப்போம், என்ன உடுப்போம், என்ற கவலை கொள்ளவேண்டாம் என்று கூறி வானத்தை நோக்கி வளர் சிறகை ஆர்த்தெழும்பும் கானப்புள்ளை (பறவை) காண்மின் அவை விதைத்தல் அறுத்தல், நிரப்பம் ஆகிய எவற்றையும் செய்வதில்லை. அப்படியிருந்தும் அவைகள் உண்ண, உயிர் வாழ அருள்கின்ருர் எம் வானப்பர். அவ்வுயிரிலும் பார்க்க உம்உயிர் இழிவோ? ஆதலால் அன்ருட உணவு, உடை முதலியவற்றில் கவலை கொள்ளாது கடவுளை நம்புமின் அவர் உம்மைக் காத்தருளுவார் எனக் கூறுகின்ருர். இது 'கல்லினுட் தேரைக்கும் கருப்பையுள் உயிருக்கும் உணவளிப்பவன் எம் இறைவன்' என்ற எம் ஒளவை மொழியோடும் 'படைத்தவன் படியளப்பான்' என்ற நம் பழமொழியோடும் பெரிதும் ஒத்து விளங்குவதைக் காண்கிருேம். இது மானிட சிந்தனையின் அடிப்படையில் ஒற்றுமையுண்டுஎன்பதைஉணர்த்துகிறது.

### இயேசுவும்வள்ளுவரும்

'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்ற ஒளவை கூற்றும் 'குணம் நாடிக்குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்றும் 'தன் குற்றம் நீக்கி பிறர் குற்றம் காண்கிற் பின் என் குற்றம் ஆகும் இறைக்கும்' என்ற வள்ளுவர் குறட்பாக்களும் 'குற்றம் நம்மீது குறுக்கிடுமாறு நீர் மற்றவர்களுக்குத் தீர்ப்பளித்தல் மாறு' என்றும் 'மற்றவர்க்கு நீர் வழங்கும் தீர்ப்பின்வழிப் படியே பெற்றிடுவீர் தீர்ப்பினைப் பின்பு' என்றும் 'கண்தூல உத்திரம் காணுதுன் சோதரன்கண் நுண் தூசு காண்பதென்ன நோன்பு?' என்று இயேசு இயம்பிய கருத்துக்களோடு பெரிதும் ஒத்திருக்கின்றன. மற்றவர்கள்மீது குற்றங்காண விழைவோர் தாம் முற்றிலும் குணமுடையவரா என்று தம்மைத் தாம் கேட்கவேண்டும் என்பதையும் குறைவற்ற நிறைவுபடைத்தமக்கள் உலகில் இல்லையென்ற உண்மையையும் மேற்குறித்த இருமக்கள் கருத்தும்வலியுறுத்தி நிற்கிறது.

### தொண்டர்கள்உள்ளம் ஒன்றே

'வேண்டுவோர் வேண்டுவதை ஈவான் இறைவன்' என்பதும் யாம் வேண்டத் தக்கவை யாவை என்பதை அவன் அறிவான் என்பதும் எம் சிவனடியார் அருள்மொழிகள். ஏறக்குறைய இதேகருத்தைநம்பெருமான் இயேசுவும் பின்வருமாறு கூறுகிருர்:

''கேளும் கொடைவரும்
தேடுமே கண்டடைவீர்
தாளகளும் தட்டுமே
சார்ந்து''
கேட்பவர் பெற்றிடுவீர்
தேடுவார்கண்டடைவர்
பூட்டகலும் கட்டும்
புலர்ந்து,
அப்பங்கேள் சேய்க்கும்கல்
மீனுக் கரவளிக்க
ஒப்புவரோ நும்மி
லொருவர்
நஞ்சனும் பிள்ளைக்கு நல்
லன நல்கவே
நெஞ்சில் நினைப்பன்நெறி.
அப்பனே அன்பு. நலம்
ஆக்கவே ஆர்த்தருள்வன்
இப்புவியில் வேண்டுநருக்
கென்று''

(கிறித்து மொழிக்குறள் திரு. வி. க.)

### ஊர் போற்றவில்லை உலகம் போற்றுகிறது

சுருங்கக்கூறின் அருளின் வடிவான இயேசு தீயோரை

(14-ம் பக்கம் பார்க்க)

— ஈழவேந்தன் —

## கிறிஸ்துவைத் தெரிந்திடுவோம்

ஈராயிரம் ஆண்டுகள் முன்னே
எருசலேம் நகரந் தன்னே
நடந்த உண்மை முன்னே
நவின்றிடக் கேட்டிடுவீர் இன்றே.

அன்ருெருநாள் மாதுமரி வீட்டினிலே
அருளொளியின் வரவுதனைக் கூறிடவே
வந்தனனே தூதனவன் அவ்விடத்து
தந்தனனே செய்தியங்கு ஏற்றது(வே)

'பயப்படாதே மரியேநீ பாக்கியவதி
ஸ்திரிகளில் ஆசீர்வாதம் பெற்றவள்நீ
உன்னிடத்தில் உற்பவிக்கப் போவதிங்கு
உலகமகா ரட்சகன்' என்றன(ன்)னே.

'யேசுஎன்ற நாமமுடன் நீவளர்க்க
ஈசனது கட்டளையை நான்தருகிறேன்
பேரின்ப வாழ்வுநீ பெற்றிடவே
பெரியவ ளாக்கினர் கத்தர்உனையே'.

'எப்படி இதுவாகும் என்றவள்
'இன்னுமோ என்புருசனை அறியேனே.
என்றவள் மனதினில் கிலேசமுடன்
சொன்னனள் தூதனின் சொல்லுக்கே.

'மரியே பரிசுத்த ஆவி உன்னிடத்தில்
மாறிடாம லிருப்பதை நீஉணர்
தேவனின் கட்டளையைக் கூறிடவே
தேடியே வந்தவன்' தானென்ருன்.

அகஸ்துராயனும் ஆணையே இட்டனன்
அகிலமெலாம் குடிமதிப் பெழுதிட
[வென்று
சொன்னதைச் செவிமடுத்த யோசேப்பும்
சொர்ணமாம் மரியுடன் சென்றனனே.

தொடர்ந்து பிரயாணம் செய்ததினுல்
சோர்புற்ற மரியுடன் அன்ருெருநாள்
ஏகினள் பெத்தலேகேம் நகரமங்கு
தேடினர் பற்பல இடமுஞ்சென்று

எந்தவொரு சத்திரமும் இடமுமின்றி
இருப்பதைக் கண்ட யோசேப்பன்று
செய்வ தறியா நின்றனனே
செய்தியாகக் கிடைத்தது கொட்டி
லொன்றே

வானிலே அதிசய வெள்ளிதோன்ற
வந்தனன் பாரிலே பள்ளிகொள்ள
அறிந்தனர் ஆட் டிடையருமன்று
தெரிந்தனர் யேசுவின் பிறப்பையங்கு

அன்றைய அரசனு மறிந்திடவில்லை
சத்திரத் தலைவனும் தெரிந்திடவில்லை
மதகுரு வானவரு மறிந்திடவில்லை
0 மந்தை மேய்ப்போரே யறிந்தனர்

தாழ்ந்தாரைத் தூக்கி ஏற்றிடவே
தரணியில் வந்த யேசுபரன்
வாழ்ந்தானே பாரில் மனுமகனுக
வானுலகிலிருந்த வந்தஒரு மகனுக

நமக்கொரு பாலனுய் கொடுக்கப்பட்டு
தமக்கென்று மக்களைத் தெரிந்து
[கொண்டார்
நமக்கென்று அவரைத் தெரிந்திடுவோம்
நாடித் தொழு தேற்றிடுவோம்,

0 கிறிஸ்துவின் பெருமை என்பதே.

— கிரான்ஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் கனவு சங்கானையில் நனவாகிறது

பார்த்துக்கொண்டிருக்க ஒரு நிமிடத்துக்குள் ஒரு மாங்காய்க் கரைடிஸைன் போடுகிறது தறி. இரண்டரை மணி நேரத்துக்குள் பளபளக்கும் ஒரு முழுப் பட்டுச்சேலை. மாதத்தில் சராசரி 9000 யார் பட்டு-புடவைகள், வேஷ்டிகள், சால்வைகள், சேட் துணி, காற்சட்டைத்துணி, பாவாடைத்துணி இன்னும் இன்னோரன்ன.

இது எங்கேயோ சைனாவிலோ, ஜப்பானிலோ என்று நினைக்கவேண்டாம். நமது நாட்டிலேயே, யாழ்ப்பாணத்தில் இந்த அதிசயம் நிகழ்கின்றது.

ஒரு காலத்தில் இங்கிலாந்தையும், ஜப்பானையும், இந்தியாவையும் நம்பியிருந்தோம் பட்டுப்புடவை கட்டுவதற்கு. காஷ்மீர் பட்டையும் பங்களூர் சேலையையும் மைசூர் புடவையையும் கடை ஜன்னல்களில் பார்த்துவிட்டு வாங்குவதற்குப் போதிய பணமில்லையே என்று ஏங்கினார்கள் நமது பெண்மணிகள். நல்ல கூறைச்சேலை வாங்குவதற்கென்றே இந்தியாவுக்கு காவடி எடுத்தோம். கள்ளக் கடத்தல்காரரின் கருணையை நாடினோம். தீபாவளிக்கு நல்ல பட்டு வேஷ்டி சால்வை குறைந்த விலைக்கு கிடைக்கிறதில்லையே என்று கவலைப்பட்டார்கள் நமது காளைமைனர்கள். எங்கள் நாட்டில் எப்பொழுதுதான் பட்டுத் துணிகள் உற்பத்திசெய்யப்போகிறார்களோ, மலிவான விலைகொடுத்து வாங்கி கட்டி மகிழ்வது எந்நாளோ என்றெல்லாம் பெருமூச்சு விட்டவர்களுக்கு அபயம் அளிப்பதுபோல ஏற்பட்டிருக்கிறது சங்கானையில் அமைந்துள்ள 'வலி கோப் ரெக்ஸ்' மின்தறி நெசவு சாலை.

சங்கானைப் பட்டின சபைக்கு அருகாமையில் இருக்கும் இந்த நெசவாலையில் பதினைந்து பளிச்சிடும் மின்தறிகள் இரவுபகலாக 'ஜிகு ஜிகு, ஜிகு ஜிகு' என்று வேலை செய்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொரு தறிக்கும் முன்னால் ஒரு பெண்மணி நின்று கொண்டு மெஷின் சரியாக வேலை செய்கிறதா என்று கண்காணித்துக்கொள்ளுகிறார். இரவு நேரங்களில் ஆண்மணிகள் இந்த வேலையைச் செய்கிறார்கள். மொத்தம் 25 பெண்களும் 23 ஆண்களும் நெசவுவேலையைக் கவனிக்கிறார்கள். முழு ஆலைக்கும் டெக்னிக்கல் அதிபர் இந்தியாவில் பயிற்சிபெற்று வந்த திரு. ஏ. நவரத்தினம். டிசைன் வேலைகளுக்குப் பொறுப்பாளர் திரு பற்குணமாணிக்கம். இவரும் இந்தியாவில் தேர்ச்சி பெற்றவர். தொழிற்சாலை கண்காணிகள் முதலிய வேறு சிப்பந்திகளுடன் எல்லாமாக சுமார் 75 பேருக்கு இங்கே வேலைவாய்ப்பு இருக்கிறது.

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் 9,25,000 ரூபா முதலீட்டுடன் இந்த மின்தறி நெசவாலையை சென்றவருடம்தான் ஆரம்பித்தது. 1969-ம் வருடம் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 3,60,000 ரூபா பெறுமதியான மின்தறிகளும் அவற்றோடு சேர்ந்த உபகரணயந்திரங்களும் ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்டன. கூடவே ஜப்பானிய நிபுணர்களும் வந்து நெசவாலையை உருவாக்குவதில் உதவி புரிந்தனர். ஒக்டோபர் மாதத்தில் ஆலை தொழிற்பட ஆரம்பித்தது மூலப்

— வி. என். பி. —

பொருட்களான நைலோன் பட்டு நூலும் ரேயன்பட்டு நூலும் ஜப்பான் இத்தாலி, சுவிற்சலாந்து முதலிய நாடுகளிலிருந்தே இப்பவும் தருவிக்கப்படுகின்றன. பெரிய கட்டைகளில் சுற்றப்பட்டு வரும் நூலை சிறிய கட்டைகளுக்கு மாற்றி இறுதியில் புடவையாக வெளிவரும் வரை நான்கு தறிகளுக்கு வேலையுண்டு. அநேகமாக எல்லா வேலைகளையும் மெஷின்களே செய்துவிடுகின்றன. இதனால் ஆட்பலம் அதிகம் தேவைப்படுவதில்லை. சேலைகளுக்கு நீள்பக்கமாக நைலோனும் குறுக்குப்பக்கமாக ரேயனும் பாவிக்கப்படுகிறது. சிலந்திவலைபோல மிருதுவான நுண்ணிய நூல்கள் சிக்குப்படாமல் பார்த்துக்கொள்வதற்கு மெல்லியரின் மென்மையான விரல்கள் இருக்கின்றன. தப்பித்தவறி ஏதாவது பிசகு நடந்துவிட்டாலும் நெய்து முடிந்த சேலைகளைச்சோதித்துப்பார்ப்பதற்கு பெரிய திரையுடன்கூடிய ஒரு யந்திரம் இருக்கிறது. திரையின் மீது சேலையை ஓடவிட்டுப் பார்த்தால் கண்ணுக்குத் தெரியாத பிழைகள் தெரிய வரும். மேலும் இதுமாதிரி பிழைகள் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள இந்த சோதனை உதவுகிறது. தனி ரேயன் நூலில் தயாரிக்கப்படும் சாறிகள் பிறிதொரு தறியில் ஓடிக்கொண்டிருக்கும். இப்படியே சேட்துணி, கால்சட்டைத்துணி முதலியவற்றிற்கும் புறம்பான தறிகள்.

சாறிகள் தனித்தனியாக 5 1/2 யாருக்கு ஒன்றாக நெய்யப்படுவதில்லை. ஒரே நீளமான துணிச் சுருளில் பல சாறிகள் நெய்யப்படும். பின்பு அவை வெவ்வேறாக வெட்டியெடுக்கப்படும். தறியிலிருந்து எடுத்தவுடனேயே சாறி உடுப்பதற்குத் தகுதியானதல்ல. பின்பு அதை 'பொலிஷ்' பண்ணி மேலும் அழகுசெய்ய வேண்டும்' இந்த வேலைகளைச்செய்வதற்கென்று புறம்பானதோர் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு வேண்டிய யந்திரசாதனங்களும் இப்புதிய கட்டிடத்தில் விரைவில் நிறுவப்படும்.

ஆலையில் கூற்பத்தியாகும் ஜவுளிகள் சமாஜத்தின் கிளைகள்மூலமாக விற்பனையாகின்றன. தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் விற்கப்படுகின்றன ஆலை தொழிற்படத்துவங்கி பதினொன்கு மாதங்களேயாகின்றன. ஆனால் அதற்கிடையில் 'வலி கோப் ரெக்ஸ்' பட்டுகளுக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டுவிட்டது இதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஏனென்றால் ஒரு பட்டுச்சேலையின் ஆகக் குறைந்தவிலை ஆக ரூபா 32 தான். ஆகக்கூடிய விலை ரூபா 77! தரமான நல்ல பட்டுப்புடவைகளை குறைந்த விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்வதே தங்கள் நோக்கமென்றும், அநியாய லாபம் அடிப்பதற்குதாங்கள் விரும்பவில்லையென்று ஆலையின் மனேஜர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம்கூறுகிறார் இருப்பினும் இதில் ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது தனிப்பட்ட வியாபாரிகள்சமாஜத்திடம் கொள்வனவு செய்து சேலை ஒன்று நூறு, நூற்றைம்பது என்று விற்கிறார்களாம் விற்பனவு வசதிகள் விரிவுபடுத்தியும் பொதுமக்களிடையே பரவலாக விளம்பரம்செய்தும் இதுபோன்ற கெடுபிடிகளைத் தடுப்பதற்கு சமாஜம் ஆவன செய்யவேண்டும்

இந்தமின்தறிகளில்பருத்தி நூல் ஜவுளிகள் தயாரிக்க முடியாதா என்றுகேட்டேன். முடியும்! ஆனால் அரசாங்கம் அனுமதிகொடாது என்று தெரியவந்தது. கைத்தறி நெசவுசெய்வோரின் ஜீவனோபாயத்துக்குப் பங்கம் விளைவிக்கப்படாதென்பது அரசாங்கத்தின்நோக்கமாயிருக்கலாம்! ஆயினும் ஒருவித 'கோட்டா' முறையில் ஒரு மாதத்துக்கு இத்தனை யார் பருத்தித்துணி நெய்யலாம் என்றாவது அரசாங்கம் அனுமதியளித்தால் துணிப் பஞ்சம் எவ்வளவோ குறையலாம் என்று தோன்றுகிறது. வடமாகாணம் முழுவதிலுமே பருத்திநூல் மின்தறிகள் இல்லையென்று கேள்வி நமது பாராளுமன்ற பிரதிநிதிகளின் சிந்தனைக்கு இது ஒரு நல்ல விஷயம்

'பட்டினிலாடையும் பஞ்
சிலுடையும்
பண்ணி மலைகளென வீதி
குவிப்போம்'

என்று பாரதியார் கண்ட கனவை எங்கள் ஈழத்திலும் நிறைவேற்றுவதற்கு 'வலி கோப் ரெக்ஸ்' போன்ற கூட்டுறவு உற்பத்தி ஆக்க வேலைகளுக்கு அரசாங்கமும் பொதுமக்களும் நிறைய ஆதரவளிக்கவேண்டும். எம்மைப்பொறுத்தவரையில் எமது ஊழியர்களின் ஓயாத ஒத்துழைப்பும் தளராத ஆற்றலும்தான் எதிர்காலத்தில் எமக்கு நல்ல நம்பிக்கையை ஊட்டுகின்றன' என்று திரு திருச்சிற்றம்பலம்கூறுகிறார்.

# அப்பிள் அனுபவம் -5

இராகலை அப்பிள் அனுபவம் முற்றிற்று. சிலதினங்கள் கழித்து வெலிமடையிலுள்ள நண்பர் ஒருவரைக் காணும் பொருட்டு திரு. குணநாயகமும்நானும் சென்றிருந்தோம். பேச்சோடு பேச்சாக வெலிமடை நண்பருக்கு எமது இராகலை அப்பிள் அனுபவம் பற்றிக் கூறி மகிழ்ந்தோம், அவர் இரகாங்கலையில்ஓர் அரசாங்கப் பழத்தோட்டம் இருப்பது பற்றித் தெரிவித்தார். தெரிவித்ததோடுமட்டும் அவர் நின்றுவிடவில்லை. கார் ஒன்றை ஒழுங்கு செய்து எம்மை அத்தோட்டத்துக்கு அனுப்பியும் வைத்தார். அவருக்கு வர நேரமிருக்கவில்லை.

இராகலை வேறு. இரகாங்கலை வேறு. இரு இடங்களுக்குமுள்ள பெயர் ஒற்றுமையைப்போலவே கால நிலையிலும் ஒற்றுமையுண்டு. இரகாங்கலை பொரலாந்தையின் ஒரு பகுதி. பொரலாந்தை வெலிமடையிலிருந்து 7 1/2 மைல் தெற்கிலுள்ளது.

இராகலை அனுபவத்தில் ஏற்பட்டதைப் போன்று வியர்க்கக் களைக்க நடக்க வேண்டிய தொல்லை எமக்கு இருக்கவில்லை. காரிலே சென்று நேராக இரகாங்கலை அரசாங்கப் பழத்தோட்டத்தில் இறங்கினோம். தோட்டம் பிரதான வீதிக்குப் பக்கத்திலேதான் உள்ளது.

அப்பிள், திராட்சை, பாசன் என்று பல்வேறு வகைப்பட்ட பழமரங்கள் இங்கே செய்கை பண்ணப்படுகின்றன. ஆயினும் அப்பிள்தான் பிரதான பழமரமாகவுள்ளது. அதனையடுத்துத் திராட்சைகள் அதிகமாகவுள்ளன.

மாட்டினுடைய தோட்டத்துக்கும் இந்த அரசாங்கத் தோட்டத்துக்கும் எவ்வளவோ வேறுபாடு. இங்கு இக்கால அறிவியல் முறைகளைப் பின்பற்றிப் பழச்செய்கை நடைபெறுகின்றது தோட்டத்தின் வாயிலுக்கருகிலே அலுவலகம் ஒன்றுள்ளது. அது ஆராய்ச்சிப்பகுதி, விற்பனைப்பகுதி, நானாந்த வேலைப் பகுதி ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஆராய்ச்சியாளர்கள், தொழிலாளர்கள், பிறஎழுதுவினைஞர் முதலாய உத்தியோகத்தர் என்று பலர் இங்கு பணி புரிகின்றனர்,

ஓர் உத்தியோகத்தர் எம்மைத் தோட்டம் முழுவதும் சுற்றிக் காட்டினர். நாம் கேட்ட கேள்விகள் யாவற்றுக்கும் மிகவும் பண்போடும் ஆர்வத்தோடும் அவர் விளக்கம் தந்தார்.

அப்பிள் மரங்களிற் பல இனங்கள் உள்ளன. உரோம் பியூட்டி (Rome - Beauty) றசெட் (Russet). இராகலை

— கவிஞர் வி. கந்தவனம் —

வகை என்று மூன்று இனங்களை இத்தோட்டத்தில் செய்கை பண்ணுகின்றனர். றசெட் பழந்தானும் மிகவும் சுவையுடையது.

அப்பிள் கன்று நட்டு ஒரு வருடத்தால் பூக்கின்றது. பூத்து மூன்று மாதங்களின் பின்னர் பழம் கிடைக்கின்றது. மாட்டினுடைய தோட்டத்திலே அப்பிள் கிளைகள் குத்தாக வளர்ந்திருப்பதைப் பார்த்தோம், இங்கு அப்படியல்ல கிளைகள் நிலத்துக்குச் சமாந்தரமாக (கிடையாக)ச் செல்கின்றன. அந்த வகையில் கிளைகள் பிடித்துப் பிடித்துக் கட்டப்பட்டுள்ளன. கிளைகள் முறியவிடத்துக் கட்டுகள் அவசியமில்லை. பார்ப்பதற்கு விசிறிகளைப் போன்று மரங்கள் காட்சியளித்தன. இந்த முறையால் அதிக பழங்களைப் பெறலாம் என்று விளக்கினர். அந்த உத்தியோகத்தர். மேலும் பழங்களைப் பறிப்பதற்கும் இம்முறை வசதியளிக்கின்றது. நின்று கொண்டே பிடுங்கி விடலாமல்லவா? பங்குனி மாதத்தில் பழங்கள் பறிக்கப்படுகின்றன.

விற்பனை பெரும்பாலும் மொத்த விற்பனைதானாம். இறாத்தல் மூன்று ரூபாயாக விற்கப்படுகின்றதாம். ஒரு இறாத்தலில் 6, 7 பழங்கள் இருக்குமாம். எவ்வளவு மலிவு! அப்பிள் கன்றுகளும் விற்பனைக்குண்டாம். ஆயினும் கன்றுகளோ பழங்களோ அன்றைக்குப் பெற முடியாது என்று விட்டார் அவர்.

ஏன் தெரியுமா?

விற்பனைப் பகுதியில் பெரிய மோசடியாம். அதனை விசாரிக்க அன்று விசாரணைக் குழு ஒன்று வந்து இறங்கியிருக்கின்றது. இதை அவர் சொல்லவில்லை. நாங்கள் பின்னால் ஒருவரை விசாரித்து அறிந்து கொண்டது.

அரசாங்கப் பொருளென்றால் யாருக்குத்தான் ஆசை வராது? அரசாங்கம் எதைச் செய்தாலென்ன? நாட்டு மக்களுக்கும் கொஞ்சம் நேர்மை, கடமையுணர்வு, நாட்டுப்பற்று என்பன இருந்தாற்றான் தேசியரீதியான வளர்ச்சியை நாம் அனுபவிக்க முடியும் என்ற சிந்தனையுடன் வெலிமடைக்குத் திரும்பினோம். வெலிமடையில் நண்பர் வீட்டில் மதிய உணவை முடித்துக்கொண்டு வசுவில் நுவரெலியா வந்து சேர்ந்தோம்.

அப்பிளோடு கூடிய எங்கள் அனுபவத்தை இதுவரை காலமும் சீவி முடித்தேன். அதிலே அப்பிள் சுவை கொஞ்சமென்றாலும் தட்டுப்பட்டிருக்கும் என்று நினைக்கின்றேன். அதுவும் சொல்ல முடியாது. ஏன் என்றால் அப்பிளுக்குத்தான் பெரும் தட்டுப்பாடாச்சே!

(முற்றும்)

றொலறம்ஸ் ஸ்தாபனத்தாரின்
நத்தார் - புதுவருட
மலிவு விற்பனை
13-12-70 முதல் 31-12-70 வரையும்

| | |
|---|---|
| O லங்கா மணிப்புரி சேலைகள் | O சேட்டிங், சூட்டிங் |
| O கைத்தறி சேலைகள் | O றெடிமேட் சேட்டுகள் |
| O நைலக்ஸ் சேலைகள் | O றெடிமேட் காற்சட்டைகள் |
| O வயில் சேலைகள் | O சிறுவர் சூட்டுகள் |

மற்றும் வாசனைப் பொருட்களும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

ரூபா 50/-க்கு மேல் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் எதிர்பாராத சிறந்த வெகுமதி கொடுக்கப்படும். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசோதிக்க முந்திக்கொள்ளுங்கள்.

குறிப்பு:- எதிர்பாராத சிறந்த வெகுமதிசேட்டுகளுக்குக் கிடையாது.

றொலறம்ஸ்
46, பிரதான வீதி — யாழ்ப்பாணம்.
போன்: 7099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாதங்களில் நான் மார்கழி'

**விரதங்கள் நிறைந்த புனித மாதம் மார்கழி. இம் மாதத்தைப் பகவான் கீதையில், தானே மாதங்களில் மார்கழி எனக் கூறுகிறார்**

விரதங்களை நம்முடைய முன்னோர்கள் மிகவும் கவனத்துடனும் ஊக்கத்துடனும் தூய்மையுடனும் அனுஷ்டித்துவந்தார்கள். மனதை ஒருவழிப்படுத்தி, பகவான் நினைப்பில் ஊறி அவனைச் சிக்கெனப் பிடிப்பதற்கு நோன்பு சிறந்தபடியாகும். மார்கழி மாதம் நல்ல குளிரிலே மங்கையர் யாவரும் மனந்திறந்து இறைவன்துதிபாடி விரதம் அனுஷ்டிக்கும் தினங்கள் திருவெம்பாவைத் தினங்களாகும். பெண்களுக்குரிய தினங்கள் இத்திருவெம்பாவைத்தினங்களாகும். மணிவாசகர் பாடிய திருவெம்பாவை இதை நன்கு விளக்குகின்றது.

''மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்'' என்று பகவான் கீதையில் பகர்ந்துள்ளார். அப்படிப்பட்ட மகிமை பொருந்திய மார்கழி மாதத்தில் வரும் மகத்தான நோன்புகள் இந்தத் திருப்பாவையும் திருவெம்பாவையுமாகும்.

பாவையர்கள் ஆர்வத்துடன் நோற்கும் நோன்பானபடியால் பாவை நோன்பு என்று இதை அழைப்பார்கள். பாவையர்கள் வைகறையில் துயிலுணர்ந்து ஒன்று கூடி இறைவனுக்குப் பள்ளியெழுச்சி பாடுவார்கள்.

இன்பமும் இனிமையும் நிறைந்த இருபது பாசுரங்களைக் கொண்டது திருவெம்பாவை. பக்தியும் பரவசமும் நிறைந்த முப்பது பாசுரங்கள் திருப்பாவையில் உள்ளன. ஆண்டாளின் ஆர்வத்துடிப்பும் பக்திப் பரவசமும் சொட்டும் முப்பது திருப்பாவைப் பாசுரங்களும் முப்பது வைரமணிகளாகும்: விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாகும்.

**— செல்வி. உமா குமாரி குமாரசாமி —**

''மார்கழித் திங்கள் மதி
நிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்
போதுமினோ
நேரிழையீர்''

என்று ஆர்வத்துடன் ஆயர் பாடிச் செல்வச் சிறுமிகளை அழைக்கிறார் ஆண்டாள்.

''ஆதியும் அந்தமும்
இல்லா அரும்பெரும்
சோதியை யாம் பாடக்
கேட்டேயும் வாள்
தடங்கண்
மாதே வளருதியோ
வன்செவியோ நின்
செவிதான்......''

என்று முதற்பாசுரத்திலேயே மாயையால் கட்டுண்ட ஆன்மாக்களைக் கேட்கிறார், மாணிக்கவாசகப் பெருந்தகை.

புள்ளரையன் கோயிலில் வெள்ளை விழிசங்கின் பேரரவம் கேட்ட நேரத்தில், கீசுகிசென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து பேசின. காலையில், தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின. வைகறையில் தன் தோழிகள் ஒவ்வொருவரையும் துயிலுணர்த்தி, ஓங்கி உலகளந்த உத்தமன் பெயர் பாடி, யமுனை நதிக்கரையில் திருப்பாவைக்கு நீராட்டி பூசைகள் செய்து, நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து செந்நெல்லும் பசும்பாலும் நீங்காத செல்வமாக நாட்டில் நிறைய வேண்டுகிறார் ஆண்டாள். ஆண்டாள் போன்ற பெண்கள் தெய்வ பக்தியைக்கொண்டு நாட்டை வளம்படுத்தினார்கள். இதனாலேயே பெண்கள் நாட்டின் கண்கள் என்று போற்றப்பட்டார்கள், இதை நம் பெண்களும் உணர்ந்து நம் நாட்டை வளம்படுத்த முன்வரவேண்டும். இதற்கு மிகச் சுலபமான வழி தெய்வபக்தியை நாட்டிலே பரவச் செய்வதாகும். ஆண்டாள்போல் நம் பெண்களும் வீடு வீடாகச் சென்று தோழிகளை எழுப்பிப் பண்ணிசைக்க வழியில்லாவிட்டாலும் கோயில்களில் நடக்கும் பஜனைகளிலாவது கலந்துகொள்ளலாம். அதுவும் முடியாதவர்கள் வீட்டிலேயாவது உஷக் காலத்தில்

(12- பக்கம் பார்க்க)

## மனைவி போய்விட்டால்...

மனிதனுக்குத் தாய் போய்விட்டால் அறுசுவை உண்டி போய்விடும். தந்தை போய்விட்டால் கல்வியறிவிற்குரிய வாய்ப்புப் போய்விடும். குழந்தை போய்விட்டால் வாரிசுக்குரிய செல்வம் போய்விடும். உறவினர்கள் போய்விட்டால் சிறப்பான வாழ்க்கை போய்விடும். உடன் பிறந்தார் போய்விட்டால் துணைப்பலம் போய்விடும். ஆனால் பொன்தாலியணிந்த மனைவி போய்விட்டாலோ இவையனைத்துமே ஒன்றாகப்போய்விடும்! மனைவி அறுசுவை உணவு தருவாள், படிப்பறிவுதருவாள். பணத்திற்குப் பிரதிநிதியாக நிற்பாள். சிறப்பான வாழ்க்கை தருவாள். பக்கபலமாய் விளங்குவாள்.

—ஔவையார்

# அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை

வள்ளுவன் நமக்கு ஈந்த திருக்குறள் ஒரு வாழ்க்கைப் பொதுநூல். அது ஒரு இனத்தையோ மதத்தையோ சார்ந்தது அல்ல. வாழ விரும்புகிற மக்கள் இனத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ள நூல் திருக்குறள். பூமியிலே பிறந்துவிட்டோம். எப்படி வாழ்வது? எந்த வழியைக் கைக்கொள்வது என்று திண்டாட வேண்டியதில்லை. குறுகத் தறித்த குறளாயிருப்பினும் கடுகுசிறிதென்று தள்ள வேண்டாம் அதன்காரம் அதைச் சுவைக்கும் போது தான் தெரியும். உலகிலே நல்லவனாக வாழ- மனிதனாக வாழவிரும்பின் குறளைக் கையிலெடுத்துக் கொள்ளுங்கள். இன்று எத்தனையோ குடும்பங்கள் சுகமாகச் சந்தோசமாக வாழத் தெரியாமல் விழிக்கிறார்கள்,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாட்டிலேயா இத்துன்பம். வள்ளுவன் காட்டியவழி நின்று ஒழுகி அவன் கூற்றுப்படி வாழ்வாங்கு வாழ்வோமாயின் வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்படுவோம். வானுலகம் செல்ல வேண்டியதில்லை. இவ்வுலகையே தேவலோகமாக்கிவிடலாம். குறள்வழி நின்றால் அவர் காட்டிய மனையறத்தைப் பற்றிச் சிறிது ஆராய வாசகர்களை என்னுடன் அழைக்கிறேன்.




வடமொழிநூல்கள் பலவும் கூறும் பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்ற நான்கினையும் வள்ளுவர் இல்லறம், துறவறம் என்ற இரண்டினுள் அடக்குகிறார். நாம் உலகில் பிறந்தது- எங்களுடைய நோக்கம் திரும்பத் திரும்ப இந்த உலகிலே பிறந்து பிறந்து சிற்றின்பத்தை நுகர்வதற்கல்ல. இறைவனது பேரின்பத்தை எய்தவேண்டும்- வீடுபேறடைவதற்கு மனிதப் பிறவி வேண்டும். துறவறம் பூண்டால்தான் வீடு பேறடையலாம் என்பது சிலருடைய தவறான கருத்தாகும். இல்லறத்திலிருந்து கொண்டே பேரின்பத்தை அடையலாம்

தொல்காப்பியர்கூடக் காஞ்சித்திணையென்றாலே நிலையாமையைத்தான் கூறுவது. சூத்திரத்திலே

காமஞ்சான்ற,
கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற
மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு
கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல்
இறந்ததன் பயனே'
எனக் கூறுகிறார்.

வள்ளுவர்கூட 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று கூறுமுகத்தால் இல்வாழ்க்கை சிறந்தது எனக் கூறுகிறார்.

### அன்பும் அறமும்

அன்பையும் அறத்தையும் கொண்டு இல்வாழ்க்கை வாழ்வோமாயின் அன்பினால் பண்பும், அறத்தினால் பயனும் பெற்றோமாவோம். அன்பை அடிப்படையாகக் கொண்டுவாழும் வாழ்க்கை

**— விமலா —**

மிகச்சிறந்து விளங்கும். இல்வாழ்க்கையில் காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம். அதிலும் தலைவியினுடைய பொறுப்பு மிக இன்றியமையாதது. இதை நன்குணர்ந்த வள்ளுவர், 'வாழ்க்கைத் துணைநலம்' என்றொரு அதிகாரத்தையே வைத்துள்ளார். ஒருதலைவன் சிறந்த துணைவியைப் பெற்றுவிட்டானானால் அவன் எல்லா இன்பமும் பெற்றவனாவான்.

மனையறத்திலே மனைத்தக்க மாண்பு—மகளிரிடத்திலேதான் எதிர்பார்க்கப்படுகிறது. மாண்பு என்பதற்குபரிமேலழகர் நற்குண நற்செய்கைகள் என்று கூறி அந்த நற்செய்கைகளாவன துறவிகளை ஆதரித்தல், விருந்தினரை உபசரித்தல், வறியவர்களிடத்து அருளுடைமை, வருவாய்க்குத் தக்க செலவுசெய்தல், ஒப்புரவுசெய்தல் முதலாயின எனக் குறிப்பிடுகின்றார். இத்தகைய வாழ்க்கைத் துணைவியை அடைந்த தலைவன் ஏறுபோற் பீடுநடைபயில்வான்.

கொழுநன் குறிப்பறிந்து நடப்பவளே சிறந்த மனையாள் ஆவாள். அது தெரியாமல் அழகு பண்பு முதலியபிறதிறமையிருந்தும்பயனில்லாததாகிவிடும் கணவனுக்கு இசை தெரிந்தால் மனைவிக்கும் இசை தெரிந்திருக்கவேண்டும். இல்லையேல் வாழ்க்கை சோபிக்காது.

(12-ம் பக்கம் பார்க்க)

# வைட்டமின்கள் குறைந்தால் . . .

மனித உடலில் பெரும்பாலான வைட்டமின்கள் தாமே உற்பத்தியாவதில்லை, எனவே தேவையான அளவில் அவற்றை ஆகாரத்துடனே உடலுக்கு வழங்குவது அவசியமாகும்.

வைட்டமின்கள் குறைவினால் கடுமையான வியாதிகள் தோன்றுகின்றன. வளர்சிதை மாற்றத்தில்கோளாறு ஏற்படுகின்றது. இதனால் தோலும் சவ்வும் உதாரணமாக 'ஏ' விட்டமின் குறைவு காரணமாகத் தோல் சவ்வுப் படலமும் வரண்டு விடுகின்றன. தோல் உரிகிறது. கண் பார்வை மங்குகிறது. உடலுக்குள்ள நோய்த்தடுப்பு ஆற்றல் குறைகிறது.

'டி' வைட்டமின் குறைவு பாஸ்பரஸ் கல்சிய வளர்சிதை மாற்றக் கோளாறுக்குக் காரணமாகிறது; இதனால் கணைநோய் தோன்றுகிறது. அதிலும் குழந்தைக்கு ஒரு வயதாகும்போது, இந்த நோயின் சின்னங்கள் குறிப்பாகத் தென்படுகின்றன. இந்த வயதில் குழந்தையின் உடலுக்குப் பாஸ்பரசும் கால்சியமும் மிக அதிகமாகத் தேவைப்படுகின்றன. 'கே' வைட்டமின் குறையும்போது தோலுக்குள்ளும் சவ்வுப் படலத்துக்குள்ளும் இரத்தப்பெருக்கு ஏற்படுகிறது. இதுவே இரத்த உறைதல் போன்ற கோளாறு ஏற்படக் காரணமாகும்.

### குழந்தைகள் உணவில்

ஏ, டி, இ, கே வைட்டமின்கள் முக்கியமாக ஈரல், பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி, முட்டையின் மஞ்சள்கரு போன்ற கால்நடைப்பண்டங்களிலும் மற்றும் கொட்டைகள், சிவப்பு முள்ளங்கி, புளிச்சக்கீரை, பப்பாளிப்பழம் ஆகியவற்றிலும் மிகுதியாக உள்ளன. எனவே குழந்தைகளின் உணவில் மேலே கண்ட வைட்டமின்கள் அடங்கிய பதார்த்தங்கள் இடம் பெறுவது முக்கியம்.

### நோய்த்தடுப்பு சக்தி பாதிக்கப்படக் காரணம்

'சி' வைட்டமின் பற்றாக்குறையால் (புளிச்சக்கீரை, பப்பாளிப்பழம், கொடி முந்திரி, முள்ளங்கிமற்றும் இதர காய்கறிகளில் ஏராளமாக உள்ளது) நோய்தடுப்புசக்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. நோய் எதிர்ப்புப் பொருள்கள் உருவாவது குறைவதன் விளைவாகத் தந்துகிகளில் கசிவு அதிகரிக்கிறது. இதனால் தோலுக்குள்ளும் சவ்வுப் படலத்துக்குள்ளும் இரத்தப்பெருக்கு ஏற்படுகிறது. சமயங்களில் சொறி, கரப்பான் போன்ற நோய்களும் தோன்றுகின்றன.

'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமினில் பி, பி2, பி6, பி12, பி15 ஆகியன அடங்கியுள்ளன. இந்த வைட்டமின்களில் பெரும்பாலானவை குடலில் பாக்டீரியாவால் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனினும் வயிற்றுப் போக்கு, வயிற்றுக்கடுப்பு, குடல் அழற்சி போன்ற நோய்கள் ஏற்படும்போது குடலில் இந்த வைட்டமின் உருவாவது தடைப்படுகிறது. 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின் குறைவசல் பல கடுமையான வியாதிகள் தோன்றுகின்றன. பசியின்மை, தூக்கமின்மை, விரைவில் களைப்படைதல், தசைநார் சோர்வு, நரம்புத்தளர்ச்சி, சோகை முதலான கோளாறுகள் ஏற்படுகின்றன. இந்தவகை வைட்டமின்கள் ஈரல், இறைச்சி, விதைகள், கைக்குத்து அரிசி, முட்டையின் மஞ்சள்கரு, மீன் போன்றவற்றில் உள்ளன. சமைக்கும்போது இந்த வைட்டமின்களில் பெரும்பகுதி நாசமாகிவிடுகிறது; எனவே இவற்றைப் பாதுகாப்பதற்கு காய்கறிகளையும், பழங்களையும் உபயோகப்படுத்துவதற்கு முன்பாக அவற்றைக் கழுவிச் சுத்தம்செய்ய வேண்டும். ஆனால் நீண்ட நேரம் தண்ணீரில் வைத்திருக்கக் கூடாது. ஏனென்றால் தண்ணீர் இவற்றிலுள்ள தாதுப் பொருட்களையும் வைட்டமின்களையும் கரைத்து விடுகிறது. இறைச்சியைத் தாமதமின்றிக் கொதிநீரில் வேக வைக்கவேண்டும். சமைத்த உடனே இறைச்சிப் பதார்த்தங்களைச் சாப்பிடுவது நல்லது. நேரம் கழித்துச் சாப்பிடும்போது அதிலுள்ள வைட்டமின்சத்து குறைந்து விடுகிறது.

புதிதாகப் பறித்த பழங்களிலும், காய்கறிகளிலும் வைட்டமின்கள் அபரிமிதமாக இருப்பதால் குழந்தைகளது உணவில் அவற்றைச் சேர்த்துக்கொள்வது அவசியம். எனினும் வெப்ப மண்டல நிலைமைகளில் குறிப்பாகமே முதல் செப்டம்பர் வரையுள்ள மாதங்களில் குழந்தைகளுக்கு வைட்டமின்கள் அதிகம் வேண்டியிருக்கும். எனவே மாதத்தில் ஒருவாரம் பல்வேறு வைட்டமின்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கவேண்டும். உடலில் அளவுக்குமீறி வைட்டமின் சத்துள்ளகுழந்தையை டாக்டரிடம் அழைத்துச் சென்று தக்க சிகிச்சை அளிப்பது இன்றியமையாதது! சில வைட்டமின்கள் குறிப்பாக வைட்டமின் டியும் ஏயும் மிதமிஞ்சி இருந்தால் கடுமையான பல வியாதிகள் ஏற்படக்கூடும்.

நன்றி:- 'நல்வழி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவோ!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 10. கடவுளைக்காண வைத்தாள்!

குளிர்பானங் கொண்டுவந்து வைக்கும் அந்தக்
குளுமைசேர்பேர ழகி நெஞ்சில் மோதுங்
கிளர்வோடு கதைகேட்டுக் கேட்டுப்பார்த்தும்
கிடைக்காமல் பயனேதும் சோர்ந்தே செல்வாள்
தளராமை மனமார வேண்டும் பேர்க்குத்
தந்திடுவன் அதையிறைவன் என்ற உண்மை
களர் நிலமாய்க் காதலினை அழித்து நின்றுன்—
கட்டுளத்தான் கதைகூறிநிற்கும் அன்றே?

வான்நச்சி நம்வீடு வந்தார் என்றால்
மகிழ்விங்கு வந்ததென்றே அர்த்தம்! அம்மா
தான்நச்சி எங்களுடன் அன்பு பொங்கத்
தனைமறந்து கொஞ்சுகின்றான்! அவர்மே லன்பால்
நான்நச்சி எனைமறந்து சுற்று கின்றேன்!
தாய்போலக் குரைத்தப்பா விடத்தில் வந்தோர்
'ஏன்சிச்சி நமக்குள்ளே சண்டை?' யென்று
இணங்கிமனங் கைகோத்துத் திரும்பு கின்றார்!

வஞ்சகமே இல்லாத இதயம் அந்த
வளரொளியின் முகங்காட்டும்! உலகஆசை
கொஞ்சமுமே இல்லாத இதயம் அந்தக்
குழம்பாத தெளிவுடைய கண்கள் கூறும்!
மிஞ்சுமொளி மேனிசொலும் அருளின் ஊற்றில்
விளையாடும் சிந்தனையை! மேலாய் என்றன்
நெஞ்சையளும் ஓர்சிறப்பும் அவரில் உண்டு!
நினைந்ததனைப் பார்த்தாலும் அறிவே னல்லேன்!

பனிநீராம் நான்கலந்த பாலா ருக
பரியாகும் நானுவக்கும் மணல்மே டாக
பனிஞ்சாறும் எனைக்கருப்ப நீரே யாகப்
பண்படுத்தப் பானைவந்த சுண்ணும் பாக
தினைமாவா மெனைமாவி வக்காய் மாற்றும்
தேனுக நெய்யாகத் திரியாய் என்றன்
மனமெல்லாம் வானுணர்வின் மயமேயாக
வந்தாரென் வானச்சித் தெய்வத் தோன்றல்!

இளந்துறவி என்றூரே போற்றும் தெய்வ
எழில்நெறியார் என்நெஞ்சை அறிதல்என்றே
வளஞ்சிறந்த மனமுடையார் அன்பின் மையாம்
வறுமையினல் நான்வாடல் உணர்வ தென்றே?
பழம்பிழிந்த சாறெடுத்துச் சென்று வைத்தால்
பருகிவிட்டுப் பரிந்தொருசொல் பேசாராமே!
அளந்தளந்து பேசுகிறார்! அதுவும் யார்க்கோ!
அழுகையறிந் துரைக்காராம் ஒருசொல் அன்பாய்

பரம் பொருளாம் தீப்பிழம்பில் சிதறிப் போன
பச்சை எரிப் பொறியென்றும் பகர்வர் இந்துப்
பரம்பரையார் ஆன்மாவை! பெரறியான் மாவும்
பாசமெனும் பிணி நீக்கிப் பக்குவத்தால்
திரும்பவும் போய் சேருமந்தப் பெரும்பி ழம்பை!
செப்புகிறார் அந்நெறியோர்! அவ்வா றாயின்
இரண்டுயிர்கள் பக்குவத்தால் இணைந் தொன்றாகி
இறைவனடி சேர்வதிலே தடையுமுண்டோ?


என்னன்பை எடுத்தியம்பி ஏதும் எய்தும்
எண்ணமற்ற தவ்வன் பென் றியம்பின் கேட்டுத்
தென்னம் பூச் சிரிப்பாலே என்னை எள்ளி
"ஏனிளமை அற்ற ஒரு முதியார் மீதில்
உன்னன்பை வைத்தினைய வில்லை? உன்பால்
ஒருத்தியிடம் உன்னன்பை வைக்கவில்லை?
என்னம்மா! காமமெனும் இச்சை தூண்ட
இப்படியெல் லாம் அலைந்தாய்!" என்பாரன்றே?

வன விலங்குக் கூட்டத்தின் வரலா றாக,
வண்ண வண்ணப் புள்ளினத்து வழக்காறாக,
இனம் பெருக்கும் அடிப்படையில் இன்பம் துய்க்கும்
ஏக்கத்தில் இல்லறத்தை நாடி நிற்கும்
மனம் வெறுத்த மானுடருள் காதல் என்றால்
வய தழகு பால்பார்த்தே இணைவு நண்ணும்!
எனதிதய அன்புமிது போன்றி ருக்கும்!
என் றெண்ணல் இயற்கையது தானென்றாலும்.

அவர் தூய்மை அவர்மதிப் பவரீடேற்றம்
அழிவுபடும் வகையிலவர் உடலை வேண்டேன்!
சிவமாகித் திரிகின்ற அவர்பின் னேநான்
சிவமாகும் முயற்சியிலே திரிவேன்! முத்தித்
தவமாற்றும் அறப் பள்ளிப் பயிற்சி வேண்டித்
தக்க தொரு மாணவியாய் அமர்வேன் காலில்!
கவனுகி அவர் வீசுங் கல்லசய் நான் போய்
கடவு ளெனுங் கடலுள்ளே வீழல் வேண்டும்!

(வளரும்)

# கூட்டுறவு ஆலயமும் கூடி நிற்கும் அழகும்!



யாழ்ப்பாணத் தாயின் திருமுகம் போன்ற கலைமுகம் காட்டும் கட்டிடம்.


அலைமகள் கரம் நீட்டி இசைபாட வெண்டாமரை வதனத்துக் கலைமகள் எம் இதய வீணைகளையே மீட்டி புன்னகை மலர் பூத்திருப் பதுபோல் பண்ணைக்கடலும் வடபகுதி ஐக்கிய மேற்பார் வைச் சபையின் ஐந்தடுக்கு கலைஉறையும் செயலகமும் அமைந்திருக்கும் காட்சியின் மாட்சியில் யாழ்ப்பாணத் தாய் தனது பேற்றினை எண் ணிப் பூரிக்கின்றாள்!

வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச் சபைச் செயல கம், பண்ணைக்கடல், ஒல் லாந்தர் கோட்டை, மணிக் கூட்டுக்கோபுரம், திறந்த வெளியரங்கு. முனியப்பர் கோவில், யாழ். நகர மண் டபம், வட்டக் குளம்— அருகருகேயுள்ள இத்தனை சூழலின் சங்கமத்தில் பாரதி தாசன் பாடிய 'அழகின் சிரிப்பைக் காணலாம்! அந் தச் சிரிப்பைச்சிந்தும் முழு மதி முகமாக — யாழ்ப்பா ணத்தாயின் முகமாக — நான்கு மாடிகளும் ஒரு மொட்டை மாடியும் கொண்ட வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் செயலகம் திகழ்கின்றது! வடபகுதியிலுள்ள கூட்டுற வுச் சங்கங்களுக்கெல்லாம் தாய்ச்சங்கமாக விளங்கும் இச்சபையின் செயலகம் இப்பகுதியிலுள்ள கட்டிடங் களுள் மிகப்பெரியதும், மின் தூக்கி (லிவ்ற்) இயங்கும் ஒரேயொரு கட்டிடமாகவும் விளங்குகின்றது.

காணி நிலம் வேண்டும் என்று பராசக்தியை வேண் டிய பாரதியார், அக்காணி நிலத்திடையே தூணில் அழ கியதூயநிறமாளிகை கட்டித் தரவேண்டும் என்றெல்லாம் கலையுள்ளப் பெருக்குடன் கோரினார். தமக்குச் சொந் தமான ஒரு காணியும், கட் டிடமும் வேண்டும் என வேண்டி பலகாலமாக பாடு பட்டு உழைத்து வந்த இங் குள்ள கூட்டுறவாளருக்கு பாரதியாரின் வேண்டுதல் பலித்துவிட்ட மாண்பென இன்று கட்டிடம் இலங்கு கின்றது! வடபகுதிக் கூட் டுறவுத் தந்தையும் அகில இலங்கைக் கூட்டுறவுச் சம் மேளனத்தின் முதலாவது தலைவருமாகக் கூட்டுறவுத் துறையில் நீண்ட காலம் தொண்டுபுரிந்த கூட்டுறவா ளர் வீரசிங்கத்தின் பெயரை [illegible] அமைத்த மண்டபத்திற்குச் சூட்டியுள்ளனர்.

இம்மண்டபத்தில் — வீர சிங்கம் மண்டபத்தில் நுழை வோம் வாருங்கள்! ஆல யத்தில் நுழைவது போன்ற பிரமை எம்மை ஆட்கொள் கிறது.

வடபகுதிக் கூட்டுறவாளர் ஒருவருடன் ஒருவர் கூட்டுற வுக் கருத்துக்களை, பிரச்னை களைபரஸ்பரம் கலந்துரை யாட, கூட்டுறவு அறிவை ஆய்ந்து தெளிய, அவர்கள் எல்லோருக்கும் தலைமைச் செயலகமாக சொந்த வீடென உரிமை கொண்டா டும் கூட்டுறவு இல்லமாக ஆலயமாக இக்கலைக்கட்டி டம் விளங்குகிறது என்ற



வீரசிங்கம் மண்டப கலையரங்கில் நடைபெறும் நிகழ்ச்சி களுக்கொரு தனி மதிப்பு.

உண்மை தெளிய எம்மன இருள் அகன்று நாமும் கூட்டுறவில் சேர்ந்து உண் மையுடன் உழைக்க வேண் டும் என்ற சக்தி பிறக்கி றது! வெளிநாட்டாரும் இலங்கையின் ஏனைய பகுதி களிலுள்ளவர்களும் வடபகு திக் கூட்டுறவுபற்றிப் புகழ் வது வெறும் புகழ்ச்சியல்ல என்ற உண்மை புலப்படு கிறது. கமக்காரர், கடற் றொழிலாளர், கைத்தொழி லாளர் இவ்வண்ணம் சகல கூட்டுறவாளர்களும் கூட்டு றவுமூலம் சிந்திய வியர்வை மணிகள் நாம் நிற்கும் வீர சிங்கம் மண்டபத்தில் அழ கொளி சிந்தி மெய்சிலிர்க்க வைக்கிறது!

இன்று இம்மண்டபத்தில் நடைபெறும் கூட்டுறவாளர் கூட்டங்கள்' கலை இலக்கிய நிகழ்ச்சிகள், திருமணவைப வங்கள்ஏராளம்! ஏராளம்!! இம்மண்டபத்தில் நடை பெறும்.

நிகழ்ச்சிகளுக்கே ஒரு தனி மதிப்பு! நவீன முறையில் நாடகங்களை நடாத்துவத தற்கு வாய்ப்பான மேடை, வசதியான ஆசனங்கள், சுகம்பேசும் காற்றோட்ட வசதிகள் இத்தனையும் கொண்ட இம்மண்டபத்தை யும் ஐந்தடுக்குக் கட்டிடத் தையும் கூட்டுறவாளர்கள் கட்டியெழுப்பி யாழ்ப்பா ணத்திற்கு அழகு சூட்டி விட்டார்கள் என நாட்டு ணர்வு மிக்க நல்லோர் வாழ் த்துகின்றனர்!


இக்கட்டிடம் இன்றுள்ள இப்பகுதிக் கூட்டுறவாள ருக்குச் சொந்தம்; நாளை வரும் கூட்டுறவாளருக் குச் சொந்தம். இப்படி வடபகுதியிலுள்ள கூட்டுற வுப் பரம்பரைக்கே என் றும் சொந்தமாகத் திகழும் 'இக்கட்டிடத்தின் உயரம் போல் இதன் பேரழகு போல் இதைக்கட்டிய கூட் டுறவாளர்களின் உள்ளங் கள் உயர்ந்தவை: அழகி யவை' என யாழ்ப்பாணத் தில் நல்ல கலையரங்கு பொருந்திய வசதியானமண் டபம் இல்லையே என்று குறைபட்டுவந்த கலைஞர் கள் வாழ்த்துகின்றனர்!

கூட்டுறவின் பெயரால்எல் லோரையும் கவர்ந்து ஒளி

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நத்தார்




# வாழ்வு மலர்ந்தது!


— டானியல் அன்ரனி —

மார்கழிமாதத்தின் விடியற்காலை கடுங்குளிரின் அரக்கப்போர்வைக்குள் ஊரெல்லாம் உறங்கிக்கொண்டிருந்தது. கூதலும் கும்மிய இருட்டும் கிழக்கு வானத்தின் வெம்மைச்சுடரை எதிர்கொள்ளும் உயிரினங்களின் உடல்களையெல்லாம் கூனிக்குறுகி, மூலையில்முடங்கச் செய்தன.

படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள் திரேசா. அவளால் நிம்மதியாக உறங்கமுடியவில்லை.

உடலின் ஒவ்வொரு மயிர்க்கால்வழியே ஊடுருவி உள்ளே ஒவ்வோர் பகுதியையும் சுண்டி இழுக்கும் பனியில் மிகுந்த குளிர்க் கொடுமை, அவள் எண்ணத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த உஷ்ணத்தினுல் செயலிழந்துவிட்டதா?

திரேசா மெதுவாக படுக்கையைவிட்டு எடுத்தாள்.



மாதா கோவில் மணியின் டாண் டாண் என ஒலி வைகறையின் இன்ப இசையாக அமைந்தது. மனிதர்களின் மாசுகளைத்துடைத்து, தெய்வீக வாழ்வில் கலந்துவிட, எல்லாம்வல்ல இறைவனின் அழைப்புமணியாக, எதிரொலித்தது... ....

வெளியே பனிப்புகார், இருளின் சங்கமத்தில் உறங்கும் உலகம் முற்றாக இன்னும் விழித்தெழவில்லை....

ஒருசில மனிதர்களின் நடமாட்டம்புகையுண்டஓவியத்துள் நடமாடும் வஸ்துக்கள் போல், விழுப்பமில்லாமல் வீதிவழியே ஊர்ந்துகொண்டிருந்தன.

சொட்டுச் சொட்டாக பனித்துகள்கள் வீதியோரத்து இலைத்துளிர்களிலும் புல்பூண்டுகளிலும் படிந்து வெள்ளித்துண்டுகளாக மின்னிக்கொண்டிருந்தன.

திரேசா நடந்துகொண்டிருக்கிருள். அவள் வாழ்வின் வழியைநாடி நடந்துகொண்டிருக்கிருள்; நடையில் ஒரு வேகம்.

உள்ளத்தில் எழும் பெருமூச்சுக்கள் அவள் உடலையும உஷ்ணப்படுத்தியதினுல் ஏற்பட்ட புதுத்தெம்பு.

உயர்ந்த மனிதனின் உள்ளத்தில் ஒளிரும் உண்மையைப்போல மாதா கோவில் கோபுரம் வானளாவி நின்றது. கோபுரத்தின் உச்சியில் 'உலகத்தின் ஒளியும் நானே, வழியும்நானே' என உலகிற்கு உரைத்துநிற்கும், சிலுவையிலிருந்து பாய்ந்துகொண்டிருந்த ஒளிவெள்ளம் மாதாகோவிலை மணிப்பிரவாகமாக பரிமளிக்கச் செய்துகொண்டிருந்தது.

கோவிலின் உள்ளே குடிகொண்டிருந்த பயங்கர நிசப்தம், தெய்வீக உணர்வையும் பரிபூரண பயபக்தியையும் பரிமளிக்கச்செய்துகொண்டிருந்தது.

திரேசாவின் கால்கள் பாலன் பிறப்புக் குடிலின் முன் தாமாகவே மண்டியிட்டுக்கொண்டன.

'தேவனே! தேவகுமாரனே!! உலகத்தின் ஒளியாய் நீஉதித்த நன்நாளை, நாளை விடிந்ததும் உலகெலாம் அகமகிழ்ந்து கொண்டாடப்போகின்றது. கொடியபாவங்களின் கொடுமையினுல் அடிமைப்பட்டு அல்லலற்பட்ட மக்களைச் சிலுவைமரத்தில் உயிரைக் கொடுத்து இரட்சித்த தேவபாலன் நாளை உதயமாகப் போகிருன் என்ற உவகையில் உலகெலாம் சூழ்ந்து கிடக்கின்றது. யேசு பாலனே எங்கள் குடும்பத்திற்குமட்டும் நிம்மதியைத் தரமாட்டாயா? எல்லோர் இல்லத்திலும் மகிழ்ச்சி வெள்ளம், எங்கள்வீட்டை மாத்திரம் ஏன் இந்தசோகத் திரையால் மூடிவிட்டிருக்கிருய் ... காலமெல்லாம் கண்ணீர் வெள்ளத்தில் எங்கள் குடும்பத்தை மிதக்க விடுவதுதான் உன் சித்தமா? ... ... உடைந்த தேங்காய்போல சிதறுண்டுபோன எங்கள் குடும்பம் மீண்டும் ஒன்றுசேரமாட்டாதா?...'

பாலன் குடிலின் முன் கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்திகள், திரேசாவின் கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடும் கண்ணீர்



போல் உருகி ஓடிக்கொண்டிருந்தவேளை கன்னக் கதுப்புகள் மெழுகுவர்த்திகளின் ஒளிபட்டு கண்ணுடியாக மினுமினுத்தன.

அவள் நினைவு அலைகள் — சென்ற ஆண்டு இதே நாளில் இந்தநேரத்தில் நடந்த சம்பவத்தை உன்னியது ... ஜீரணிக்க முடியாத கசப்புணர்ச்சி மேலிட நினைவுகளின் ஆழத்தில் நெஞ்சம் கனத்து ... இமைகளை மூடிக்கொண்டாள்.

திரேசா...! பள்ளிப் பருவ காலத்தை முடித்து இல்லற வாழ்வை எதிர் நோக்கும் பாவை.

அவள் மனதில் புகுந்துகொண்டான் அவளுடன் ஒன்ருகப் படித்த சிவகுமார் என்னும் வாலிபன். மதத்தால் வேறுபட்ட இருவரும் ஒன்றுபட முடியுமா?

'குடும்பம்ஒன்றுபட்டு ஒரு முடிவுக்கு வரும்வரை நான் காத்திருப்பேன் திரேசா' என்றான் அவன். அண்ணன் பீற்றர் அவளது எண்ணத்திற்கிசைந்தான். ஆனுல் வீட்டிலே எதிர்ப்பு நிமிர்ந்து நின்றது. மதபேத சூறுவளியினுல் விளைந்த விளைவுகளின் சுவடுகள் ... ஒருவருட காலம் உருண்டோடி விட்டது. முடிவு நீண்டுகொண்டே சென்றது.

0 0 0

திரேசாவின் கண்கள் இன்னும் மழைபொழிந்துகொண்டிருந்தன.

'கூதல் குளிரில் குடிசையில் உறங்கும் தேவபாலனே எங்கள் குடும்பத்தில் ஒற்றுமையென்னும் தீபத்தை ஏற்றிவைத்து என் வாழ்வுக்கு வழிகாட்டமாட்டாயா?'

திரேசாவின் இதயத்தில் எழுந்த கடைசி நம்பிக்கையின் ஒளி வெளிவந்தவேளை அழுதுகொண்டிருந்த மெழுகுவர்த்திகளின் ஒளி இப்போ பிரகாசித்தது.

திரேசாவின் உள்ளத்திலும் புத்துணர்ச்சி பரவியதுபோன்ற பிரமை.

வீட்டைநோக்கி விரைந்தாள். வாசலிற் கால் அடி வைத்த திரேசா திடுக்கிட்டவளாய் பிரமிப்பில் ஆழ்ந்தபடி நின்ருள்.

அங்கே உட்கார்ந்திருப்பது தந்தையல்லவா? அவளது எண்ணத்துக்குமுற்ருன எதிர்ப்புக் காட்டியவர் அவர். இன்றைக்கு......?

அவர் ... அருகே ... சிவகுமாரனைக் காண்கிருள். இது கனவா? கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் பார்த்தாள். ஆமாம் அவள் தந்தை ஞானப்பிரகாசத்தின் அருகே... புன்னகை தவழ சிவகுமாரன் அமர்ந்திருந்தான்.

இரு கருவண்கள் இணைந்துவிட்ட அற்புதக் காட்சியைக் கண்டு உணர்ச்சியற்ற மரமாய் வாசலில்நின்றுகொண்டிருந்த மகளைக் கண்டுவிட்டார் ஞானப்பிரகாசம்...

'வாம்மா...உள்ளே... ஏன் வாசலில் நிற்கிருய்' அன்பு கனிய அழைத்தார்.

இரு அன்புள்ளங்களின் பார்வை, நளினங்கள் குடும்பத்தில் உள்ள யாபேரும் தெரிந்துகொண்டு தங்கள் விருப்பத்தையும் வெளிப்படுத்திக் கொண்டனர். அதீத வெறுப்புக் காட்டியவர் தந்தை ஞானப்பிரகாசம்தான்.

கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் ஞானப்பிரகாசத்திற்கு குடும்பத்தில் நிகழும் இத்தகைய பெரிய அந்தரங்கமான நிகழ்ச்சிகள் காலம் கடந்தே தெரியவந்தது வீறுகொண்டு வெஞ்சினத்துடன் எழுந்தார்...

குடும்பத்தலைவன் என்ற முறையில் அனுமதி பெருது விஷயம் முழுஉருக்கொண்டுவிட்ட காரணங்கள் அவர் இதயத்தில் கொழுந்து விட்டது. இறுக்கமான மதக் கட்டுப்பாட்டைச் சுட்டிக்காட்டி அவர் திருமணத்திற்கு தடை போட்டார்.

இதயத்தில் உண்மை அன்பு கொண்ட இரு உள்ளங்கள் இணையும் வேளையில் மதம் வேலி போட்டது...

வைதீக மனப்போக்குள்ள தந்தை ஞானப்பிரகாசம்— 'மணமகன் மதம் மாறினுல் மணமகள் கழுத்தில் தாலி ஏறட்டும். இல்லாவிடில் இந்த யுகத்தில் இத்திருமணம் நடக்காது.'

'நான் மதம் மாறுவது ஒருக்காலும் நடக்க முடியாத விஷயம்'— மதப்பற்றில் தானும் சளைத்தவன் அல்ல எனக் காட்டிக்கொண்டான் சிவகுமார்.

'ஏனப்பா வேறுபட்ட மதத்தைக் கைக்கொண்ட தம்பதிகள் மனமொத்து வாழவில்லையா?' இது முற்போக்கு எண்ணம்கொண்ட மகன் பீற்றரின் விவாதம்.



தாய், மகள், மகன் ஒரு பக்கம்— தந்தை மறுபக்கம் திரேசாவின் வாழ்க்கையைப் பணயம் வைத்துக் கயிறு இழுப்பு நடத்தினுர்கள். — முடிவு முடிவற்ற முடிவு.

'என் சொல்லுக்கு மதிப்பில்லாத வீட்டில் எனக்கு என்ன வேலை' —இவ்வாறு

(10-ம் பக்கம் பார்க்க)

# கழுகின் குடும்பம்!

ஒருநாள், மலையுச்சியிலுள்ள பாறையின்மீது ஒரு வானம்பாடியும் கழுகும் சந்தித்தன. வானம்பாடி கழுகுக்கு வாழ்த்துத் தெரிவித்தது. கழுகு குனிந்தபடி விருப்பம் இல்லாமலே பதிலுக்கு வாழ்த்தியது.

வானம்பாடி, 'ஐயா, நலந்தானே?' என்றது. இதைக்கேட்ட கழுகு, 'ஏய்! யாம் நலம்தான். யாம் பறவைகளுக்கெல்லாம் அரசர் என்பதும், யாம் பேசுதற்குமுன்னுல் நீ பேசக்கூடாதுஎன்பதும் உனக்குத் தெரியாதா' என மிடுக்குடன் வினவியது.

'நாங்களும் உங்கள் இனத்தைச் சேர்ந்தவர் என்பதே என் எண்ணம்.'

கழுகு இகழ்ச்சியாக அதைநோக்கி, "யார் சொன்னுர்கள். நீயும் நானும் ஒரே இனமென்று?' எனக் கேட்டது. வானம்பாடிபதிலிறுத்தது; நானும் உன்னளவு உயரப் பறக்க முடியும். மேலும் புவியிலுள்ள சகல உயிர்களையும் என் பாட்டால் மகிழ்விக்க முடியும். ஆனுல் உன்னுல் இன்பமோ, மகிழ்ச்சியோ தர இயலாது."

சினங்கொண்ட கழுகு, 'இன்பமாம்! மகிழ்ச்சியாம்! கர்வம் பிடித்த பதரே! என் அலகினுல் ஒரே குத்து! அழிந்தாய் நீ!' என்றது.

வானம்பாடி மெல்ல மேலே பறந்து கழுகின் முதுகில் வந்து உட்கார்ந்துகொண்டு, அதன் இறகுகளைப் பிடுங்க ஆரம்பித்தது. கழுகுக்கோ தாங்கமுடியாத கோபம். அந்தச் சிறு பறவையிடமிருந்து தப்பஎண்ணி அதுவிரைந்து மேலே பறந்தது. ஆனுல் அதற்குத் தோல்விதான். இறுதியில் மீண்டும் அதே பாறையில் வந்து அமர்ந்தது. முதுகிலோ வானம்பாடி! எரிச்சலுடன், விதியை நொந்துகொண்டது கழுகு.

அப்போது சிறு ஆமை ஒன்று அங்கே வந்தது. இந்தக் காட்சியைக்கண்டதும் அதற்குச் சிரிப்புத தாங்கமுடியவில்லை. விலாப்புடைக்க நகைத்தது. கழுகு அதை நோக்கி, 'ஏய், தரையோடு தரையாக ஊர்ந்து செல்பவனே! எதைக்கண்டு சிரித்தாய்?' எனக் கேட்டது.

'உன்னைவிடச் சிறந்த சிறு பறவை உன்மீது குதிரை சவாரி செய்கிறதே!' என்றது ஆமை.

கழுகு, 'உன் வேலையைப் பார்த்துக்கொண்டு செல். இது எனக்கும் என் சகோதரன் வானம்பாடிக்கும் இடையேயுள்ள குடும்பப் பிரச்னையாகும்' என்று கூறியது.

மூலம்—

கலீல் ஜிப்ரான்

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துவிட்டு மற்றொருவருக்குக்கீழ் உத்தியோகம், வேலைபார்க்கப் பிடிக்காமல் சுதந்திரமாக கமத்தொழிலில் ஈடுபடும் வாலிபர்கள் மாவிட்டபுரம் கதிரமலையாரைப்போல எல்லா ஊர்களிலும் எக்காலத்திலுமிருந்தனர்கள் - அபூர்வமாக இத்தகைய இலட்சிய வாலிபர்களைப் படித்துவிட்டு வேலை பார்க்கும்கிராமத்துப் பெண்களும் பட்டணத்தில் பிறந்து வளர்ந்த நாகரிகப் பெண்களும் மனம்விரும்பி முன் வந்து கல்யாணம் செய்து கொண்ட சம்பவங்கள்கூட நடைபெற்றிருக்கின்றன.

### கோவிலடி முஸ்பாத்தி

கோவிலடிக்கே திரும்புவோம். அங்குதான் முஸ்பாத்திகாணும்! ஊர் முன்றலே கோவிலடிச் சந்திதான். கோவிலுக்கு [illegible]து மேற்கு வீதி. தேர் ஓடும்,

# சாதுக்களும் சந்நியாசிகளும் கூடும் நான்குவீதி மடங்க

பொழுது பறந்துவிடும். காங்கேயன்துறை நோக்கிப் பறக்கும் கார்கள், சந்தியிலே விறுக்கென்று திரும்பி கீரிமலை நோக்கிப் பாயும் கார்கள், அங்கிருந்து நீராடிய குதூகலத்துடனே குஷியாகவரும் கார்கள், அதே மாதிரி போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருக்கும்

## எங்கள் கிராமம் - 5
## மாவிட்டபுரம்

பஸ் ஓடும், ஊரே கிடுகிடுக்க பொதிசுமக்கும் தொழிற்சாலை இடும்பவாகனங்களும் ஓடும். ஓடாமல் விதியிலேயே தரித்து 'பாக்'பண்ணி வெய்யிலிலே கிடந்து காய்பவை பெரியமயிலு சின்ன மயிலு(வின்) விசை ஊர்திகள் - வாடகை மோட்டார்கள்!

மேற்கு வீதி மடத்துத் திண்ணையில் குந்தியிருந்து வீதி முச்சந்தியைப் பார்த்துக்கொண்டிருந்தாலே சைக்கிள்கள், வண்டிகள், வெற்றிலை வாழைக்குலைச் சுமையுடனே சுன்னாகம் சந்தைக்குப் போவோர், வேலைக்குப் போவோர். பள்ளிக்கூடம் போகும் ஆசிரியர், மாணவர், குளித்து முழுகி ஆசாரசீலர்களாய் தூய ஆடை அணிந்து தேங்காய் பழம் பாக்கு அர்ச்சனைத் தட்டு ஏந்தி முருகனை வணங்க கோவிலை நோக்கி ஓடி ஓடிப்போவோர், தெரிசனம் கண்ட ஆனந்தக்களிப்

## இசையுலகில் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான்கள்

புடனே அங்கிருநது வெளிவந்து கோவில் வாசல் கடலைக்காரக் கிழவியைச் சுற்றிக்கூடுவர். நாலுபேர் கூடும் தெருச் சந்தி என்றும் பாராமல் கட்டிய துணியுடனும் தலையில் கடகச் சுமையுடனும் தோட்டத்துக்கும் வீட்டுக்கும் நடக்கும் ஊர்ப் பிறந்த கமக்காரக் குடிமக்கள். கடைக்குச் சாமான் வாங்க வந்து கூடுவோர், சந்தையை மொய்ப்பவர்கள் பக்கத்தே சட்டிபானைக் கடையை நாடுவோர், பொன்விழாக் கண்ட முருகேசர் மளிகை வியாபாரத்தையெட்டிப் பார்த்து ஒரு நோட்டம் போட்டுவிட்டு மேலே நடப்போர் - என்று இப்படி எத்தனை எத்தனையோ தினுசு! 'கணக்கிடேலாது'

பக்கத்திலே கதையளைய ஓர் ஆளும் இருந்துவிட்டாலோ, சொல்லவேண்டியதில்லை. ஊர்ப்பேச்சு வளர்ந்து நீளும். நா நீள, சில சமயங்களில் எப்பொழுதாவது கையும் நீளும். அத்துடன் கால்களும் நீண்டுவிட அந்த இடம் சில நாட்களுக்கு காலியாகக் கிடக்கும். இராமங்களில் இது சகஜம். வீண்வம்பு முற்றி விளைந்து ஆபத்தான விஷப்பாம்பாகி விடுவதுமுண்டு! நன்மையில் முடியும் நாரதர் கலகமும் நடக்கும் "சங்கானையார் வெளிக்கிட்டுட்டார், பெட்டியும் கொண்டு. சத்திவேலுவும் குடுகுடு என்று ஓடுது. கோவில்லை மணியடிச்சாச்சு போல"- பேச்சு இப்படி ஒன்றிரண்டு பேரைத் தொட்டு ஆரம்பிக்கும்.

சங்கானையார் என்று கோவிலடி சிநேகிதர்களால் பட்டம் சூட்டப்பெற்ற நாராயணசுவாமியும், 'குடுகுடு' நடையர் சத்திவேலுவும் கோவில் மேளம். கோவிலடி இளமட்டங்கள் (அந்த செற்ஆட்கள்இன்றைக்கெல்லாம் இங்கிருந்து மறைந்துவிட்டார்கள்) ஆட்களுக்குப் பட்டப் பெயர் வைப்பதிலே வீரர்கள். நாராயணசாமி குழந்தைவேலுவின் மகன்- தவில்காரர். சத்திவேலு பக்கிரிச்சாமியின்மகன்-நாதசுரம். கோவிலிலே தவில் வாசிக்கத்தொடங்குவதற்கு முன்பாகச் சில காலம் சங்கானையார் - மன்னிக்கவும். நாராயணசுவாமி. கோவிலடியிலே சொந்தமாக ஒரு பலசரக்குக்கடை போட்டு தொழில்செய்தார்

அந்த நாளில் புகையிலை 'இகையிலை' வியாபாரம் செய்த வழியில் இந்தக் கௌரவப்பட்டம் அவரைத் தேடி வந்திருக்கலாம். ஆளுக்கும் பட்டத்துக்கும் பொருத்தம் ஏதும் பார்த்து இந்தப் பட்டமளிப்பு நடைபெறுகிறதோ என்பதை என்னால் சொல்லமுடியாது. எப்படியோ, என்னவிதமோ ஏதோ ஒரு காரணஇடுகுறிப் பெயராக அது பேச்[illegible] கில் வந்துவிடும், ச[illegible] யார் என்ற பட்டப்[illegible] ரைப் போல, 'மா[illegible]' 'அண்ணாச்சி', 'த[illegible]' 'சனியன்' 'பாய்ஞ்[illegible]' 'அலுகோசு', 'செ[illegible] தடி' -என்றெல்லாம்[illegible] நான் கோவிலடி செட்[illegible] பட்டமளித்துக் [illegible]


அ. செ[illegible]

கப்பட்டவர்கள் இ[illegible] இன்றைக்கும் வா[illegible] ளர். இராமங்கள் எங்[illegible] தற்போது சினிமா [illegible] உள்ளது போலத்தா[illegible] காலத்தில் இந்த [illegible] மளிப்புக்கு 'ஸீஸன்' [illegible] ததை நாம் மறக்கமு[illegible]

பழைய[illegible]ள் நாத[illegible] வான் பக்கிரிசாமியி[illegible] ளைத்தான் நாராயண[illegible] கிவாகம் செய்து[illegible] டார், இன்னொரு பெ[illegible] நெடுங்காலம் கோ[illegible] மேளத்தில் நாத[illegible] வாசித்த கோமதியார் முடித்திருக்கிறார்.


# கிருமிப்பீடைகள் ஒன்றும் அ
# ஒழிந்திட இரு வழிகள்

உங்கள் தாவரங்களைத் தாக்க ஆவலோடு காத்திருக்கின்றன நூற்றுக்கணக்கான புழுக்கள், பூச்
முறியடிக்க முழுநிவாரண, சிக்கனமான, வன்மைமிகு கிருமிநாசினிகள் இரண்டு இன்று நம்













என்ட்ரெக்ஸ்'20 – நெல், புகையிலை, காய்கறி பருத்தி ஆகியவற்றைத் தாக்கும் கிருமிப்பீடைகள் முற்றழிப்பிற்கு நம்பகரமானதென நிலையான, வேளாளர் தெரிவு. (1 திரவ அவுன்ஸ் என்ட்ரெக்ஸ் 20 ஐ, 2—4 கலன் நீரில் கலந்து இலைத்தொகுதியில், 3—4 வாரத்திற்கொரு முறை நன்கு தெளிக்கவும்.

அசோட்றின் 60 ஏனைய கி[illegible] கிருமிப்பீடைகளின் முற்றழி[illegible] முறை கிருமிநாசினியாகும். [illegible] ஆகியவற்றைத் தாக்கும் கிரு[illegible] செய்யப்படுகிறது. (1 திரவ. [illegible] கலன் நீரில் கலந்து 2-3 வா[illegible] இலைத்தொகுதியில் நன்கு [illegible]

நெல் புகையிலை, அல்லது காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களா?
வன்மை மிகு கிரு[illegible] 'என்ட்ரெக்ஸ்' 20ஐ, 'அசோட்றின்' 60ஐ
கொண்டு அவற்றை ஒழுங்காகத் தெளித்து கிருமிப்பீடைகளுக்கு முற்றழிப்பு அளித்திடுக.

LANKEM
இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

லங்கெம் இல[illegible]
செலிங்கோ ஹவுஸ் த. பெ.[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...நம் ...கள்

அது பேச்சுவழக்
...டும், சங்கானை
... பட்டப் பெய
..., 'மாம்பழம்',
..., 'தடியன்',
'பாய்ஞ்சான்',
..., 'கொக்கத்
...றல்லாம்பழைய
...லடி செட்டினால்
...துக் கௌரவிக்

சாமியின் உடன்பிறந்தவரான இராமநாதனின் மகன் ஞானசுந்தரம் இசைச் சேவையிலும் சமூகசேவையிலும் முன்னின்று உழைக்கிறார்.

**நாதஸ்வர**

**வித்துவான்கள்**

இசை உலகில்புகழ்பெற்ற பழைய நாதசுர வித்துவான்களான சோமாஸ்கந்தர், குழந்தைவேல், பக்கிரிசாமி, உருத்திராபதி, நடராசா, இராசா, சண்முகநாதன், சோமஸ்கந்தர் பிள்ளைகள் செல்லத்துரை அப்புலிங்கம் இத்தனைபேரும் மாவிட்டபுரம் கிராமத்தில் – இந்த ஊர்க்கோவிலின் மணியோசையை நாளும்பொழுதும் கேட்டுக்கொண்டே வாழ்ந்து வளர்ந்து ஆளானவர்கள் கோவில் உற்சவம் கொடியேறும் நாளாக குருக்கள்கும் ஆதீன உரிமையும், கோவிலிலே விருதுபெறும் உரிமையும்பெற்றவர்கள் மாவிட்டபுரம் அளவெட்டி மேளகாரர். இவ்வூர்களைச் சேர்ந்தோர்பலர் அந்நாளில் முருகன் சந்நிதானத்தில் தங்கநாயனம் போட்டுக்கொண்டு சிறப்புப் பெற்றவர்கள். கோவில் மேளகாரருக்கென்று ஒரு மடமும் தெற்கு வீதியிலிருக்கிறது. ஆதி நாளில் முதல் கோவில் மேளமாக இந்தியாவிட்டு இங்கு வந்து நாதசுரம் வாசித்த சிவபுண்ணிய நாதசுரக்காரர் கட்டிய மடமாம். அநேகமாய் எண்பது தொண்ணூறு ஆண்டுகளுக்குமுன் கட்டிய இம்மடம் காலப்போக்கில் பழுதடைந்துபோய்விட, குழந்தைவேல் தலையிட்டு சமூகத்தவரின் உதவி ஒத்தாசையுடனே புதுப்பித்துக் கட்டியிருக்கிறார். கீரிமலை யாத்திரைப்பாதையில் குழந்தைவேல் வசிக்கும் வீடே ஆதியில் சிவபுண்ணிய நாதசுரக்காரர் கட்டிய வீடுதான். பக்கிரிசாமியார் அவருக்குப் பின் கோமதியார் என, கோவில் மேளகாரர், குடும்பமும் குடித்தனமாக இந்த தெற்கு மடத்தில் நெடுங்காலமாக வாழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு மடத்தில் குடியிருக்க ஆட்களில்லை. ஆண்டு உற்சவ கடைசி தேர்த்திருவிழா அன்று அன்னதானமும் தண்ணீர்ப்பந்தலும் பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகின்றன. மாப்பாணர் தெருப்'பொடியர்' சாது நல்லதம்பி மடத்தில் நிரந்தரவாசி. அவரைவிடப் பரமசாதுக்களைக் கண்டால் வரவேற்று மடத்தில் வைத்து நன்கு உபசரிப்பார்.

## ... செ. முருகானந்தன்

...கள் இவ்வூரில்
...ம் வாழ்கின்ற
...கள் எங்கிலுமே
...னிமா உலகில்
...லத்தான் ஒரு
... இந்த பட்ட
...'ஸீஸன்' அடித்
...றக்கமுடியுமா?

...ள் நாத... வித்து
...ரிசாமியின் மக
...ாராயணசுவாமி
... செய்துகொண்
...ரு பெண்ண
... கோவில்
... நாதசுரம்
...மதியார் மணம்
...ர். பக்கிரி

ஞாபகம் பிசகாமல் அளவெட்டிக்கும் வண்ணார்பண்ணைக்கும் ஆளனுப்பி செல்லத்துரைக்கும் அவரது வித்துவக் குமாரர்களுக்கும் வண்ணார்பண்ணையில் அப்புலிங்கத்துக்கும் சண்முகநாதனுக்கும் அழைப்பு விடுப்பது அவர்கள் இவ்வூரில் பிறந்து வளர்ந்தவர்கள் என்பதனால்தான். வண்ணார்பண்ணை பழையதான் நாதசுர வித்துவான் வைரவநாதன் இங்குள்ளவர்களுக்கு கோவில்உற்சவகாலம் தவறாமல் பழகிப்போனமுகம். கோவிலில் மேளம் வாசிக்

மனவியாதி — (7)

# "குளோஸ்ரேஃபோபியா எனும் மனப்பிராந்தி"

ரேடியோ நிலையத்தில் ஒரு பேச்சு ஒலிபரப்புவதற்காக ஒருவர் வந்தார். அறிவிப்பாளர் அவரை அழைத்துக்கொண்டு பேச்சுகள் ஒலிபரப்பப்படும் ஸ்ருடியோவுக்குப் போனார். பேச்சாளரை ஸ்ருடியோவுக்குள் இருத்திவிட்டு வெளியேயுள்ள 'கொன்ற்ரோல்' அறைக்குள் நின்று கொண்டு கொஞ்ச நேரம் ஒத்திகை பார்ப்பதற்காக அவரைப் பேசும்படி அறிவிப்பாளர் சமிக்ஞை காட்டினார். பேச்சுக்கு வந்தவர் ஒன்றும் பேசுவதாகக் காணோம். அங்கும் இங்கும் பார்த்து திருதிருவென்று முழித்தார். முகமெல்லாம் வியர்வை சிலிர்த்தது. அறிவிப்பாளர் எத்தனையோ அபிநயங்களால் சமிக்ஞைகள் பல காட்டியும் பலனில்லை. பேச்சாளரின் வாய் திறக்கவில்லை. அறிவிப்பாளர் மீண்டும் ஸ்ருடியோவுக்குள் நுழைந்து 'என்ன சங்கதி? ஏன் பேசவில்லை?' என்று கேட்டார். பேச்சாளர் அவரை அசடாகப் பார்த்து 'எனக்கு இதற்குள் இருக்கப் பிடிக்கவில்லை, கொஞ்சம் பெரிய இடமாக இருக்காதா?' என்று பரிதாபமாகக் கேட்டார் அறிவிப்பாளர் என்ன நினைத்தாரோ, என்ஜினியர் மாருடன் கடைசிநேர ஏற்பாடுகள் செய்து பேச்சாளரைக் கொண்டுபோய் கச்சேரிகள் நடக்கும் பெரிய ஸ்ருடியோ ஒன்றுக்குள் விட்டார். பேச்சாளரின் முகம் மலர்ந்தது. பேச்சும் ஒலிபரப்பாகியது.

0 0

ஒருநாள் கொழும்பிலிருந்து பண்டிக்கு ரயில பிரயாணம் செய்யும்போது எனக்கெதிரே முன் ஸீட்டில் ஒரு

— சுநாதன் —

நடுத்தர வயதுள்ள பெண்மணியும்இருந்தாள். போகும் வழியில் ஒரு மலைச் சுரங்கத்தின் நடுவே ரயில் சில நிமிடங்கள் நிற்கவேண்டி வந்துவிட்டது. கைகாட்டி விழவில்லை. பேசாமல் பதுமைபோல் உட்கார்ந்து வந்த அப்பெண் திடீரென எழுந்து நின்றாள். கைகால்கள் பதறின. முகம் விகாரமாய் மாறிவிட்டது. ஏதோ பேய் பிசாசைக் கண்டவள்போல அங்கும் இங்கும் முறைத்துப் பார்த்தாள். அவளோடு கூட வந்தவர்கள் மிகவும் சிரமப்பட்டு அவளை அடக்கி வைத்தார்கள். நல்ல வேளையாக அவள் மூர்ச்சை போடுவதற்குமுன் ரயில் நகர ஆரம்பித்தது, சுரங்கத்துக்கு வெளியே வந்து விட்டது. ஆகாயத்தையும் மரம் செடி கொடிகளையும் பார்த்த பின்புதான் அந்தப் பெண் மூச்சுவிட்டு அடங்கினாள்.

0 0 0

உலகத்தில்வாழும் நான்கு மானிட ஜென்மங்களில் ஒன்றுக்கு ஏதாவதொரு மனப்பயம் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும் என்று மனத்தத்துவநிபுணர்கள் கூறுகிறார்கள். இதை மனப்பயம் என்றும் கூறலாம். மனப்பிராந்தி என்றும் கூறலாம். ஆயினும் இரண்டுக்கும் சிறிது வித்தியாசமுண்டு. எதைக்கண்டு ஒருவர் பயப்படுகிறாரோ அந்த ஆபத்து நீங்கியவுடன் பயமும் நீங்கி விடும் ஆனால் அந்த ஆபத்து பின்னும் நேருமோ என்ற ஏக்கம் மனதில் இருந்துவரும். இதை மனப்பிராந்தி என்று கூறலாம்.

மற்ற எல்லாவிதத்திலும் மிகவும் சாதாரண மனிதர்கள்போல நடந்து கொள்ளும் ஒருவர் மிகவும் சாதாரணமான ஒரு காட்சியையோ சம்பவத்தையோ இட்டு மிரண்டு பயப்படுகிறார். இந்த மனப்பிராந்தியை ஆங்கிலத்தில் 'ஃபோபியா' என்று கூறுகிறார்கள். சுமார் முப்பது வகையான 'ஃபோபியாக்கள்' இதுவரை மனநோய் நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. இனம் தெரியாத இன்னும் பல உருக்கக் கூடும். மனப்பிராந்திகளுக்கு இன்னதுதான் அடிப்படையான மூலகாரணம் என்று திட்டவட்டமாகக் கூற முடியாமலிருக்கிறது. ஆனால் அவை மனதுக்குள்ளிருக்கும் கோளாறுகளின் வெளிப்புறத் தோற்றம் என்பதை மனத்தத்துவ நிபுணர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். 'தொட்டிலில் பூண்ட குணம் மட்டும் சுடுகாடு வரையும்' வருவதில்லை தொட்டிலில் ஏற்பட்ட சில அனுபவங்களும் சாகும்காலம்வரையில் மனத்தில் பதிந்தே இருக்கும், இவை பிற்காலத்தில் மனப்பிராந்திகளாக வெளிவரும்.

மேலே சொல்லப்பட்ட பேச்சாளருக்கும் பெண்மணிக்கும் இருந்தது ஒரே விதமான மனப்பிராந்தி. இதற்கு 'குளோஸ்ரேஃபோபியா' என்று ஆங்கிலத்தில் பெயர்; நாலுபக்கமும் மூடி அடைக்கப்பட்ட குறுகிய நெருக்கமான இடங்களைக் கண்டால் இவர்களுக்கு பயம் வந்துவிடும்;

ரேடியோ பேச்சுகளுக்கென்று அமைக்கப்பட்ட சின்ன ஸ்ருடியோ சுமார் பத்தடி நீளமும் எட்டடி அகலமும் கொண்டது நாலு பக்கமும் மூடி அடைக்கப்பட்டது. ஒருவர் மட்டும் இருந்து பேசுவதற்கென்று ஒரு சிறிய மேசையும் அதன் மீது மைக்கும் ஒரு நாற்காலியுமே அதற்குள் வைக்கக்கூடிய பொருட்கள். பேச்சாளருக்கு இந்த கிளிக்கூண்டு போன்ற அறையைப் பார்த்தவுடனே மனக்கிலி பிடித்து விட்டது. யாரோ தமது குரல்வளையைப் பிடித்து நசிப்பதுபோல அவருக்கு ஒரு பிராந்தி ஏற்பட்டது. அவரால் அதற்குள் ஐந்து நிமிடம்கூட இருக்க முடியாது. பதினைந்து நிமிடங்கள் எப்படி உட்கார்ந்திருக்கப் போகிறோம் என்றெண்ணி நிலைகுழம்பி விட்டார். பேச நா எழவில்லை. மிரள மிரள முழித்தார்.

அறிவிப்பாளர் அவரைப் பெரியகச்சேரிஸ்ருடியோவுக்குள் கொண்டுபோய் விட்டதும் சிறிதளவு தைரியம் ஏற்பட்டுவிட்டது. பெரிய ஸ்ருடியோ சுமார் 60 அடி நீளமும் 40 அடி அகலமுமானது. பயம் தெளிந்து பேச்சை ஒலிபரப்பினார்.

அந்தப் பெண்மணிக்கும் இவ்விதமே. ரயில் பெட்டிக்குள் அடைபட்டுக் கிடப்பதே அவளுக்கு ஒத்துக் கொள்ளாது. சுற்றிலும் இருள் கப்பிய சுரங்கத்துக்குள் அகப்பட்டுக்கொண்டால் எப்படியிருக்கும்?

மனப்பிராந்திகளுள் இந்த 'குளோஸ்ரேஃபோபியா' தான் பலரிடம் காணப்படுகிறது. இவர்கள் ரயில் வண்டிகளிலும் பஸ்களிலும் பிரயாணம் செய்வதை கூடியவரை ஒறுத்துக்கொள்வார்கள். சினிமாக்கள், நாடகங்களுக்கு போக விரும்பார்கள். அப்படிப் போனாலும் வாயிலுக்கு அருகே ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டு எப்போ வெளிக்கிட்டு ஓடலாமென்று தருணம் பார்த்திருப்பார்கள். திருவிழா முதலான நெரிசலான கூட்டங்களுக்குப் போகத் தயங்குவார்கள். கூடியவரை திறந்த வெளி நடமாட்டத்தையே விரும்புவார்கள்.

இப்பேர்ப்பட்டவர்களுக்கு சிறுவயதில் நடந்த சம்பவம் ஏதாவதுதான் மனதின் அடித்தளத்திலிருந்து கிண்டிக்கொண்டு இந்த மனப்பிராந்தியைக் கொடுத்துவரும். உதாரணமாக வீட்டிலோ அல்லதுபள்ளிக்கூடத்திலோ குழப்படி செய்ததற்காக பெற்றோர் அல்லது உபாத்தியாயர் ஒரு தனிஅறைக்குள் அவர்களைப் பூட்டி வைத்திருக்கக்கூடும்.

நாலுவயதுச் சிறுவன் ஒருவன் பெற்றோருக்குச் சொல்லாமல் கொள்ளாமல் சர்க்

[12 ம் பக்கம் பார்க்க]

**சாதுக்களும் சந்நியாசிகளும்**

சாதுக்களையும் சந்யாசிகளையும் நான்கு வீதிமடங்களிலும் பார்க்கலாம். வடக்கு வீதியில் புதிதாக தாமே ஒரு மடம் கட்டிக்கொண்டு சந்யாச வாழ்க்கை நடத்தும் பொன்னுத்துரைச்சாமி வாயைத் திறந்தால் திருக்குறள் கடகடவென்று பொழியும். பக்கத்திலே கோவில் பூந்தோட்டமிருந்தாலும் அவருடைய மடத்தினுள்ளே கமழ்வது தமிழின் இனிய நறுமணமே.

இங்கெல்லாம் வந்துகூடும் வயதாகிப்போன சாது சந்யாசிகளுக்குத்தான் எவ்வளவு வாழ்க்கை அநுபவம்! ஒருவர் திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம், சிதம்பரம், மதுரை, ராமேஸ்வரம் என்று வாய் இனிக்க இனிக்க தென்னிந்திய யாத்திரைபற்றிச் சொல்வார். மற்றொருவர் காசிவரை போய்வந்த வட இந்திய யாத்திரை அனுபவங்களைப் பயபக்தியுடனே கூறுவார். இன்னொருவர் கரையோரப் பாதையாக வற்றாப்பளையும் திருக்கோணமலையும் மட்டக்களப்பும் கண்டு கதிர்காமம் போய் அப்படியே கொழும்பில் ஆடிவேலும் பார்த்துக்கொண்டு திரும்பிய அபூர்வமான சுற்றுப்பயணத்தைத் தமது வாழ்க்கையிலேயே அரும்பெரும் சாதனையாக இராமுழுக்கச் சொல்ல, கேட்பவர்கள் நாள் முழுக்க அவர் முன்னால் நங்கூரம்பாய்ச்சி தரித்திருக்கத் தயாராகிவிடுவார்கள். இவர்கள் மாதிரி சாதுக்களும் சந்யாசிகளும் யாத்திரிகர்களும் அடியார்களும் ஆண்டிபரதேசிகளும் களங்கமற உலாவிய கோவில் மண்ணிலே தான் 1968 ல் சுவாமி வீதிவலம் வரமாட்டாமல் உள்ளே கிடக்க துப்பாக்கிப் பொலிசு இராப்பகலாகக் கோவில் வீதியில் ரோந்து சுற்றும் அவலநிலை ஏற்பட்டதென்றால்... அந்தப் 'போர்முனை' யாருடைய நெஞ்சக்கதவுகள் திறவாத...

[12 ம் பக்கம் பார்க்க]

# ...னைத்தும் ...ள்

..., பூச்சிகள். இத்திட்டத்தை
...து நம் கைகளில் உள்ளன.






...ைய இருமிநாசினிகளால் அழிக்க முடியாத
...முற்றழிப்பிற்கு ஏதுவான ஓர் வன்மைமிகு புதிய, படி
...ாகும். நெல், புகையிலை, காய்கறி, பருத்தி
...ம் இருமிப்பீடைகள் ஒழிப்பிற்கும் சிபார்சு
... திரவ. அவுன்ஸ் அசோட்றின் 60 ஐ. 3-5
...2-3 வாரத்திற்கொருமுறை தாவரத்தின்
...ன்கு தெளிக்கவும்.


...இலங்கை லிமிட்டெட்

...த. பெ. 919 கொழும்பு. டெலிபோன்: 28333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைரேகை அனுபவம் — 5

# சூரிய ரேகையின் பல்வேறு அமைப்புகளும் பலன்களும்



சூரியரேகையென்பது (படத்தில் தெரிவதுபோல்) சந்திரமேடாகிய F பகுதியில் தொடங்கி C அடையாளமிட்ட மேடாகிய சூரிய மேட்டிற்குச் செல்கின்றது. (ரேகை இலக்கம்-5 ஐப் பார்க்கவும்) ஒருவருக்கு விதிரேகையிருந்தும் சூரிய ரேகையில்லையென்றால் பாடுபட்டும்பலன்பெறாதவராகக் காணப்படுவார். இவ்வாறு நிகழ்வது அன்னாருடைய பிழையோ அல்லது குற்றமோ அல்ல. அவருக்கு நிகழவேண்டிய பலன் அதுவே. எனவே தற்பொழுது சூரிய ரேகையையும் அது தொடர்பான ஏனைய விடயங்களைப் பற்றியும் சிறிது பார்ப்போம்.

சூரிய ரேகையும், சூரிய மேடும் செல்வம், கீர்த்தி, அதிஷ்டம் ஆகியவைகளுக்கு காரண கர்த்தாவாகின்றது. சூரியரேகையுடன் ஏனைய மேடுகளில் ரேகைகளும் அமையப்பெற்றால் மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும். இக்காரணத்தாலே சூரிய ரேகையை அதிஷ்டரேகையென்றும் அழைப்பர். இது தவிர அதிஷ்டத்திற்கென்று பிரதானமாக வேறு ஒரு ரேகை அமைந்துள்ளது. (ரேகை இலக்கம்-6 ஐப் பார்க்கவும்) அந்தரேகையை அதிஷ்டரேகை என்று கூறுவர். இந்த விடயத்தைப்பற்றிப் பின்பு சிந்திப்போம்.

— மு. குணரத்தினம் —

படத்தில் தெரிவதுபோல் சூரியரேகைசந்திரமேட்டின் வெளியிலிருந்து உற்பத்தியாகி மோதிரவிரலைநோக்கி Cமேட்டிற்குச் சென்றிருந்தால் பொதுஜன ஆதரவிலிருந்து எதிர்பார்க்கப்படும் அதிஷ்டத்தைக் குறிப்பதாகும். இவ்வாறு ரேகை அமைந்திருந்தால் அன்னார் தான் செய்கின்றதொழிலில் பிரசித்தி பெற்றவராகக் காணப்படுவர். அன்னார் பொதுவாக மக்களின்புகழுக்கும், ஆதரவுக்கும், செல்வாக்குக்கும் ஆளாவார். இத்தகையவர்களுள் சிலர் நடிகராகவும், சங்கீதவித்துவான்களாகவும், சித்திரவேலையாளராகவும் திகழ்வர். இதர கிரகமேடுகளினதும், ரேகைகளினதும் நிலை நன்கு அமையப்பெற்றால் அன்னார் சபைகளில் தலைவராகவும், குழுஆலோசகராகவும், நிர்வாக அதிகாரியாகவும் தெரிவுசெய்யப்படுவர். பண நிலையைப்பொறுத்தஅளவில் குறைவாகவிருக்கும். ஆனால் புகழுக்கும், மகிழ்ச்சிக்கும் ஏற்றதன்மை சாதகமாகவிருக்கும். இப்படியான காலநிலையில்தான் அன்னாருக்கு வாழ்த்தும், வரவேற்பும் அளிக்கப்படுகின்றது.

சூரியரேகை அனேகமாகச் சந்திரமேட்டில் தோன்றி சூரியமேட்டை நோக்கிச் செல்லும். ஆனால் சில சில சந்தர்ப்பங்களில் அவை வேறு, வேறு மேடுகளிலிருந்தும் தோன்றுகின்றன. அப்பொழுது பலன்கள் வேறுவேறாக நிகழ்கின்றன. படத்தில் தெரிவதுபோல் C பகுதியாகிய மேடு சுக்கிரமேடு எனப்படும். இந்த மேட்டிலிருந்துபுள்ளிக்கோடு Dமேடாகிய புதன்மேட்டிற்குச் செல்கின்றது. இவ்வாறு செல்லும்பொழுது அந்தப் புள்ளிக்கோடு சூரிய மேட்டில் நின்றிருந்தால் மிகவும் அதிஷ்டத்தைக்கொடுக்கும். இவ்வாறுஒருவருக்கு அமைந்திருந்தால் திருமணம்மூலம் பெரும்செல்வம் வந்து சேரும். செல்வம் என்று கூறுங்கால் அது பணம், காணிபூமி, பொன், பொருள் என்பவற்றை அடக்கியுள்ளதென்பது புலப்படும். எனவே செல்வம்இத்தகைய வழிகளில் சேரும். ஏனைய ரேகைகளும் நன்கு அமைந்தால் பெரும் அதிகாரமுள்ள பதவியும் கிடைக்கும்.

சிலருக்கு அதிஷ்டவசமாகப் பணம் கிடைக்கின்றது. இன்னும் சிலருக்கு அதிஷ்டவசமாகப் பதவி கிடைக்கின்றது. அதிஷ்டவசமாகப் பதவி கிடைத்தபொழுதும், அதைக்கொண்டு நடாத்துவதற்கு ஏற்ற அறிவு இருக்க வேண்டும். அதற்குப் புத்தியின் பலம் வேண்டும். புத்தியின் பலத்தைப் புத்திரேகையைக்கொண்டு அறியலாம். எனவே படிப்பிற்குப் பிரதானமாகப் புத்திரேகை அத்தியாவசியமானது என்பது புலனாகின்றது. புத்திரேகையைப் பற்றியவிடயங்களை வரவிருக்கும் அத்தியாயங்களில் அறியலாம். புத்திரேகையிலிருந்து சூரிய ரேகை உற்பத்தியாகிச்சென்றிருந்தால், வாழ்வின் மத்திய காலத்தில் அதிஷ்டம் உண்டாகும். அதுவும் புத்தியின் பலத்தைக்கொண்டதாகும். கல்வித்தகைமைமூலமோ அல்லது கல்விசம்பந்தமானதொழில்மூலமோ அதிஷ்டம் உண்டாகும். இத்தகையவர்கள் பெரும்பாலும் கல்விசம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுப் புகழடைவர்.

சிலருடைய கையில் சூரிய ரேகையிலிருந்து கிளைகள் வேறு வேறு கிரகங்களுக்கும் செல்வதைக் காணலாம். அப்பொழுது நல்ல பலன்கள் நடக்கக் காணலாம். ஆனால் பலன்களின் தன்மைகள் கிரகமேடுகளின் தன்மைகளைப் பொறுத்துள்ளன. சூரிய ரேகையிலிருந்து ஒரு கிளை குருமேட்டை (A பகுதி) நோக்கிச் செல்லுதல் மிகவும்நன்மைக்குரியது. ஆனால் பெரும்பாலும் இவ்வாறு அமைவதில்லை, மிகச் சிலருக்கு மாத்திரமே இவ்வாறு அமைகின்றது. இவ்வாறு ரேகை அமைந்திருந்தால் அன்னார் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மையுள்ளவராகவும், நிர்வாகத்தன்மையில் கீர்த்தியுள்ளவராகவும் காணப்படுவர். அன்னாருக்குப் பெரும் செல்வம் சேரும்.

சில சந்தர்ப்பங்களில் சூரிய ரேகையின் கிளை சனிமேட்டிற்கும், புதன் மேட்டிற்கும் செல்வதைக்காணலாம். சூரிய ரேகையின் கிளை சனி மேட்டிற்குச் சென்றால் தலைமைப் பதவி அல்லது அதற்குச் சமமான நிர்வாகப் பதவி கிடைக்கும். பெரும் செல்வமும் சேரும். சூரிய ரேகையின் கிளை புதன் மேட்டிற்குச் சென்றால் அன்னார் கைத்தொழில் சம்பந்தமான வேலைகளிலும், வர்த்தகம் போன்ற பணப்புளக்கமுள்ள தொழில்களிலும் சாஸ்திரம், வித்துவத்தன்மை போன்ற விடயங்களிலும் ஈடுபடுவர். இத்தகு அலுவல்களில் ஈடுபடுவது மட்டுமல்ல. இத்தகு அலுவல்களினால் பண வருவாயையும் பெறுவர். செய்கின்ற தொழில் நிலைக்குமா? புகழ் ஏற்படுமா? என்ற வினாக்களுக்கு விடையறிய சூரிய மேட்டு ரேகையாகிய சூரிய ரேகையும், சனி மேட்டு ரேகையாகிய விதி ரேகையும்அமைந்த தன்மையைப்பொறுத்தேதீர்மானிக்கவேண்டியுள்ளது.

சூரிய ரேகை துண்டுபட்டுள்ளதாகவோ அல்லதுபிளவுள்ளதாகவோ அல்லது தீவுக்குறிப்புள்ளதாகவோ அமைந்திருத்தல் விரும்பக்கூடியதல்ல. அதாவது அத்தகைய குறிகள் தீய பலன்களையே செய்கின்றன சூரிய ரேகை துண்டுபட்டுவிடுமானால் அந்தக்காலத்தில் எல்லாச் சம்பத்தையும் இழந்து கஷ்டப்படுவர். குறித்த காலம் முடிய எல்லாம் நன்மையாக முடியும். துண்டுபடுவதாலுள்ள அவ்வளவு கஷ்டம் தீவு காணப்படுவதால் உண்டாகாது. தீவுக்குறி பின்னால் நேரிடக்கூடிய சங்கடம், பொதுமக்களிடையேயுள்ள கௌரவத்தையிழத்தல் போன்ற தன்மைகளைக்காட்டும். தீவுக்குறி அழிந்தோ அல்லது இணைந்த பின்போதான் நல்ல பலனைக் கொடுக்கும்.

அனேக துண்டுபட்டசூரிய ரேகைகளிருப்பதிலும் பார்க்க அது இல்லாதிருப்பதே மேலாகும். இதனால் இலாபமுமில்லை; நட்டமுமில்லை. சூரிய ரேகை தங்குதடை, வெட்டு, பிளவு, தீவு யாதுமின்றியிருந்தால், செல்வப்பெருக்கையும், செல்வாக்கையும் குறிக்கும். சூரிய ரேகை இரண்டு கைகளிலும் காணப்பட்டால்நிச்சயமான வெற்றியையும், அபரிமிதமான கீர்த்தியையும் செல்வத்தையும் கொடுக்கும். சூரிய ரேகை பட்டும்படாமல் வெளுத்தால்போல் மங்கியிருந்தால் இரண்டுவிதமான பலன்களைக்கொடுக்கும். முதலாவதாக எவ்வளவு முயற்சி செய்தும் பணம் கிடைப்பதில்லை. கீர்த்தியும் செல்வாக்கும் குறைவாகவிருக்கும். இரண்டாவதாக வித்தைக்குரியதும், கல்வி சம்பந்மான தொழில்களில் வல்லமையிருந்தும், அதைச் செலுத்துவதற்குப் போதுமான சக்தியின்மையைக் குறிப்பதாகும்.

## கூட்டுறவு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வீசும் கலைமண்டபம் — வீரசிங்கம் மண்டபம் விளங்குவது இப்பகுதிக் கூட்டுறவின் பெருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு!

நல்ல சாதனையை நாம் நாட்டவேண்டுமானால்சோதனையும், வேதனையும் வருவது இயல்பு. இவற்றைச் செந்நெறிமூலம் வெல்பவனே ஆண்மையாளன்! இத்தகைய ஆண்மையாளராக விளங்கும் வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பையும் கூட்டுறவுத் தெய்வத்தையும் வணங்கி உறுதி படைத்த நெஞ்சுடன் உழைத்து வருகிறார்கள். எனவே, தீய சக்திகள் அவர்கள் முன்பு போகுமுன்பே தீய்ந்து போகும்! பராசக்தியிடம் காணிநிலம் கேட்ட பாரதியின் கவிப்பெரும் உள்ளத்தை கவிநலம் அறியாதான் உணரமுடியாது. காணி நிலத்தையும் மாளிகையையுங் காக்கவேண்டுமென்று பராசக்தியை வேண்டினார் பாரதி. வடபகுதிக் கூட்டுறவாளரின் காணி நிலத்தையும் மாளிகை போன்ற கட்டிடத்தையும் பராசக்தி காவல்புரிந்து அருள் பாலித்துவரும் காட்சியும் தெரிகின்றது!

— எழில்வண்ணன்

## கலப்பட மருந்துகளைக் கண்டுபிடிக்க அணுக் காந்தக் கருவி

— டாக்டர் பி. எட்வேட் —

“சீல்” வைக்கப்பட்டுள்ள ஓர் மருந்துப் போத்தலைத் திறக்காமலே அந்த மருந்துபற்றிய பூர்வாங்க சகல உண்மைகளையும் அறிவதற்கு “அணுசக்தி காந்தக் கருவி” என்றோர் கருவியை பிரிட்டன் வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

ஒரு மருந்து போலியாகச் செய்யப்பட்டால் அதன் விளைவு என்ன என்பது யாவரும் அறிந்ததே. பண வருவாயைக் கருத்தாகக் கொண்டு, கண்ணைமட்டும் கவரக் கூடியதாகபல போலி மருந்துகளையும் சிலர் தயாரித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது உண்டு.

டாக்டர்கள் மருந்தை நம்புகின்றார்கள் - நோயாளரும் மருந்தை நம்புகின்றார்கள். ஆனால் எல்லாமருந்துகளிலும் குணம் கிடைப்பது கிடையாது. டாக்டர் நோயாளியைப் பரீட்சித்து, அந்த நோயாளியின் வியாதியைத் தீர்மானித்து ஓர் மருந்தைக் கொடுக்கின்றார். நோயாளி “குணம் எதுவுமே இல்லை’ என்று கூறுகின்றான்.

அவனுக்குள்ள வியாதியை டாக்டர் மீண்டும் பரீட்சிக்கிறார். முன்பு தெரிவு செய்யப்பட்ட மருந்து குணமளிக்கவில்லையானால் இவருக்கு வியாதி வேறு எதுவாக இருக்கலாம் என டாக்டர் மீண்டும் ஆராய்கிறார். ஓர் முடிவுக்கு வந்து மீண்டும் ஒரு மருந்தை சிலநாட்களுக்குக் கொடுக்கின்றார். திரும்பவும் பயன் கிடைக்கவில்லை. குணம் கிடையாத காரணத்தால் அந்த வியாதியை டாக்டர் ‘ஒரு புதுவியாதி’ எனக் கருதுவதும் உண்டு.

இவ் இக்கட்டான நிலையை மாற்ற அணுசக்தி காந்தக்

12-ம் பக்கம் பார்க்க

## சிறுகதை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறிக்கொண்டு அவர்கொழும்பிலேயே நின்றுவிட்டார்.

0 0 0

நத்தார்பண்டங்கள் நிறைந்துகிடந்தன. ஞானப்பிரகாசம் - தாய்அன்னம்மா ...திரேசா...சிவகுமார்...பீற்றர் எல்லோரும் விருந்தைச் சுவை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஞானப்பிரகாசம் கதையைத் தொடர்ந்தார். ‘இங்கே இருந்து கோபித்துக்கொண்டு போனேனா ஒரு வருடமாக எப்படியோ வைராக்கியத்துடன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன். பாசம் என் நெஞ்சை நேற்றுத் தான் உடைத்தது. உங்களைப் பார்க்காவிட்டால் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது...ஒருவார காலம் லீவு எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். இரவு மெயில் வண்டியை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்ற ஆவலில் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு வந்தேன். வண்டி யாழ்ப்பாணத்தை நோக்கி புறப்பட்டு நகர்ந்து கொண்டிருந்தது. உங்களைக் காண வேண்டுமென்ற ஆவலில் பிளாட்பாரத்தைத் தாண்டி ஒரு வண்டிப் பெட்டிக்குள் பாய்ந்தேன். பாய்ந்த வேகத்தில் கால்கள் ஒன்றோடொன்று பின்னிக்கொள்ள... பிளாட்பாரத்தில் நிலைகொள்ள முடியாமல் சமநிலை தவறி விழுகின்றவேளை ஒரு முரட்டுக்கரம் அலாக்காகத் தூக்கி அப்படியே பெட்டிக்குள் எறிந்தது. அந்தக் கரம் மட்டும் இல்திருந்தால்...நான் இப்போது இங்கே இருக்கமாட்டேன்...அந்தக் கரங்களுக்குரியவர் இதோ’ என்று சிவகுமாரனைச் சுட்டிக் காட்டினார்.

சிவகுமார் தலையைக் கவிழ்ந்து கொண்டான். ஆபத்து வேளையில் என்னைக் காப்பாற்றியது மதம் அல்ல, மனிதத்தன்மை- தெய்வத்தின் கருணை என உணர்ந்தேன். நல்லமுடிவுடன் இருவரும் யாழ்ப்பாணம் வந்தோம்.

0 0 0

நத்தார் பிறந்து விட்டது. ஊரெல்லாம் மத்தாப்பு ஒளி காட்டியது. வெடி அதிர்ந்தது. புதுப்புனலில் நீராடி புத்தாடை தரித்து மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருந்தாள் திரேசா. அவள் உளமுருகி வேண்டிக்கொண்ட வேண்டுகோளை நிறைவேற்றி வைத்த... குடிலில் துயில் கொள்ளும் பாலனுக்குநன்றி சொல்ல... கோவிலை நாடிச் சென்று கொண்டிருந்தாள்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கவி நயம்—14

# பாட்டி எங்கள் பாட்டி

அன்புள்ள தம்பி தங்கைகளே, உங்கள் வீட்டில் பாட்டி இருக்கிருளா? ஆம் இருக்கிருள் என்றுல் உங்கள் வீடு கலகலப்பாக இருக்கும். பாட்டி இல்லாத வீடும் ஒரு வீடா? என்ன இந்தக்கிழவி எப்போதும் புறுபுறுத்துக் கொண்டிருக்கிருள் என்று சில பேரன் பேர்த்திகள் எண்ணக்கூடும். அவ்வளவும் அன்பு! அந்தப் பாட்டி உங்கள்மேல் வைத்த பாசம்! பல்லில்லாத பாட்டி பொக்கு வாயை அசைத்து வெற்றிலை பாக்கை சிறு உரலில் இடித்தபடி ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பாள். அதற்காக நீங்கள் அவளைக் கேலி செய்யக்கூடாது. வையக்கூடாது. எங்கள் வீட்

## —இரசிகமணி கனக. செந்திநாதன்—

டில் ஒரு பாட்டி இருந்தாள் நாங்கள் பாடசாலைக்குச் செல்லும்முன்பு இந்தப் பாட்டிதான் எங்கள் உபாத்தியாயர். பாட்டியைவிட நன்ருகக் கதை சொல்லக் கூடிய உபாத்தியாயர் உலகத்தில்இல்லை. பாட்டிபாட்டி ஒரு கதை சொல்ல மாட்டாயா? படுத்துக் கொள்வோம்' என்று சொல்லி விட்டால் போதும். 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு இராசா' என்று பாட்டி ஆரம்பித்துவிடுவாள். அந்த ஊருக்குப் பெயரும் கிடையாது. அந்த இராசாவிற்குப் பெயரும் இல்லை. ஆனலும் ஊம் ஊம் என்று கேட்டபடியே நித்திரையாகி விடுவோம்.

அன்பு நிறைந்த பாட்டி
என்னை
அணைத்துத் தூக்கும்
பாட்டி
இன்பமான கதைகள்
எல்லாம்
எனக்குச் சொல்லும்
பாட்டி

நான் பாட்டியின் செல்லப் பேரன். என்ன வேண்டுமென்றுலும் பாட்டியிடம் தான் கேட்பேன். வாழைப் பழம், இனிப்பு, முறுக்கு, வடை இவைகள் வேண்டுமென்றுலும் கேட்பது பாட்டியிடம்தான். அவளும சேலைத்தலைப்பில் முடிந்து வைத்திருக்கும் பணத்தில் ஐந்து சதமோ பத்துச் சதமோ கட்டாயம் தருவாள். காசு தருவது மாத்திரமல்ல, கண்களைக் கசக்கி அழுதாலும் தூக்குபவள் அவள்தான். முதுகில் தட்டி நித்திரை ஆக்குபவளும் அவள்தான்.

வாழைப்பழமும்
இனிப்பும் எனக்கு
வாங்கித்தந்த பாட்டி
தோளிற் கிடத்தி
முதுகைத்தட்டி
தூங்க வைக்கும் பாட்டி

எங்கள் பாட்டி மற்றப் பாட்டிகளைப் போலல்ல. அவர்கள் பாக்கு இடிப்பார்கள். கதை சொல்வார்கள். பேரன் பேர்த்திகளை அதட்டுவார்கள். தொண தொணப்பார்கள். அவ்வளவோடு சரி. எங்கள் பாட்டியின் விசேஷம் என்ன தெரியுமா? கோயிலுக்குப் போகும்போது என்னையும் கூட்டிச் செல்வதுதான் அவள் விசேஷ குணம்.

அம்மா சிலவேளை, 'நான் குழப்படி செய்வேன், தன்னைக் கும்பிடவிடமாட்டேன் என்று எண்ணி என்னைக் கோவிலுக்குக் கூட்டிச் செல்வதில்லை. பாட்டியோ நான் மாட்டேன் என்றுலும் கட்டாயப்படுத்திக் கூட்டிக் கொண்டு செல்வாள். கோவிலுக்குப் போனாலும் அப்பால் இப்பால் பார்க்கவிட மாட்டாள். சனக்கூட்டத்திற்கு மத்தியிலும் 'கும்பிடு நீ தம்பி' என்று குனிந்து சொல்லுவாள். பாட்டி என்றுல் அவள்தான் பாட்டி.




கோவிலுக்குப்
போகும்போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடு நீ தம்பி
என்று
குனிந்து சொல்லும்
பாட்டி

எங்கள் பாட்டியிடம் இன்னொரு குணத்தையும் அவதானித்தேன், சின்னப் பையனுன நான் ஏதாவது குளப்படிகள் செய்வேன். மா, சீனி முதலியவற்றைக் கொட்டிச் சிந்துவேன். மேசையில் இருக்கும் மைக் கூட்டு மையை ஊற்றுவேன் பூனையின் வாலைச் சீண்டி இழுப்பேன். அப்போதெல்லாம் அம்மா அடிக்க வருவாள். அப்பா சீறிச்சினப்பார். இந்தப்பாட்டி ஓடி வந்து தடுப்பாள். தனக்குத் தானே அழுவாள். நான் பிழை செய்ததற்காக தானுக அழும் பாட்டியை கண்டிருக்கிறீர்களா? அவள் அல்லவோ பாட்டி!

அப்பா அம்மா
அடிக்க வந்தால்
அலறித் தடுக்கும் பாட்டி
தப்பாய் நானும்
பிழைகள் செய்தால்
தானே புலம்பும் பாட்டி

இப்படியான பாட்டியை பாட்டிலே வடித்துத் தந்தவர் வித்துவான் வேந்தனுர் அவர்கள் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் உள்ள கவிஞர்களிற் பலர் பாட்டியைப்பற்றிப் பாடியிருக்கிருர்கள். இருபது பாட்டிப் பாடலோடு வேந்தனுரின் பாட்டிப்பாடலை ஒருசேர வைத்துப் பார்த்தால்தான் இதன் பெருமை விளங்கும். கும்பிடு நீ தம்பி என்று குனிந்து சொல்லும் பாட்டி என்ற வரியையும் 'தப்பாய் நானும் பிழைகள் செய்தால் தானே புலம்பும் பாட்டி என்ற வரியையும் எழுதிய கைகளுக்குக் கோடி பொன் கொடுத்தாலும்தகும் 'காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றி' என்ற அவரது பாடல் பாடசாலை எங்கும் முழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த அருமைப் பாடலும் குழந்தைகளின் நாவில் தவழவேண்டும் என்பது என்னுடைய ஆசை.

இன்னெரு அவாவையும் சொல்லிவைக்க விரும்புகிறேன். ஸ்ரீலங்கா புத்தகசாலை (யாழ்ப்பாணம்) யார் வெளியிட்டுள்ள 'கவிதைப் பூம்பொழில்' என்ற வேந்தனுரின் நூலில் குழந்தைமொழி என்ற பகுதியில் 35 பாடல்கள்- இப்படியான அழகான பாடல்கள் மறைந்து நடுவில் இருக்கின்றன. தனி நூலாக அம்பிப்பாடலைப் போல, அழகான படங்களுடன் வெளியிட்டால் அவை நின்று நிலைக்கும். இது அரிய தமிழ்த் தொண்டும் ஈழம் பெருமையடையும்தொண்டுமாகும்.

ஆறு பாடல்கள் அடங்கிய பாட்டிப் பாடலில் நான்கு பாடல்களையே தொட்டுக் காட்டினேன். முழுப்பாடல்களையும் பாருங்கள்:-

அன்பு நிறைந்த பாட்டி
என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்பமான கதைகள்
எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி
வாழைப் பழமும்
இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற் கிடத்தி
முதுகைத் தடவித்
தூங்க வைக்கும் பாட்டி
பள்ளிக் கூடப் பாடம்
வீட்டில்
படிக்கச் சொல்லும் பாட்டி
துள்ளிக்குதித்து
மண்ணில் வீழ்ந்தால்
துடைத்துக் கழுவும் பாட்டி
கோவிலுக்குப் போகும்போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடு நீ தம்பி யென்று
குனிந்து சொல்லும்
பாட்டி
அப்பா அம்மா அடிக்க
வந்தால்
அலறித் தடுக்கும் பாட்டி
தப்பாய் நானும்
பிழைகள் செய்தால்
தானே புலம்பும் பாட்டி
அவ்வைப் பாட்டி
பாடித் தந்த
ஆத்தி சூடிப் பாட்டை
செவ்வை யாகப்
பாடச் சொல்லி

## நானிலம் உய்துதழைக்க..!

— அல்வைச் சுந்தரன் —

பொய்மை யிருளினிற்
போந்து கிடந்தவர்
புத்துணர் வோடு எழுந்தாச்சு
மையிரு ளிற்தூங்கி
மாய்ந்து கிடந்தவர்
மார்பு நிமிர்த்தி யெழுந்தாச்சு!

சீதப் புனலாடிச்
சீவி முடித்தாச்சு
சீரொடு மாந்தரும் சென்ருச்சு
வேத முதல்வனின்
பாதம் தொழுதாச்சு
வேரோடு துன்பை யகழ்ந்தாச்சு!

அன்பெனும் தீபத்தில்
அறன்நெய்யு மாகிட
ஆன்ற மதித்திரி யிட்டாச்சு!
துன்பெனும் மையிருள்
தூர விலகிடத்
தூய வொளித்தீப மிட்டாச்சு!

வல்வினை கெட்டாச்சு
வன்மிடி பட்டாச்சு
வானள வப்புகழ் தொட்டாச்சு
நல்லறஞ் செய்தாச்சு
நற்றமிழ் உய்தாச்சு
நானிலம் உய்து] தழைத்தாச்சு!

## மனிதனுக அவதரித்தார் இயேசு!

கிறிஸ்துநாதர். பாவச்சேற்றில் அழுந்திய மானிடரை மீட்கவே பூமியில் மனிதனுக அவதரித்தார் அப்படி அவர் அவதரித்தபோது மனிதருக்கு முன் மாதிரியாக எளிமையான வாழ்வே மனிதகுலத்துக்கு அவசியமானது என்பதை வலியுறுத்துவது போல் மாடுகள் உறையும் கொட்டிலினுள் பிறந்தார். கடுங்குளிர். கம்பளிப்போர்வைகள் அவருக்கு கிடைக்கவில்லை.

அவர் நினைத்திருந்தால் மாடிவீட்டிலோ, பெரிய அரண்மனைகளிலோ பிறந்திருக்கலாம். தமது பிறப்பின்மூலம் மனிதருக்கு எளிமையைப்போதிக்கும் எண்ணத்துடன்தான் அவர் மாட்டுக் கொட்டில் பிறந்தார்.

இன்று வாழ்க்கையில் மனிதருக்கு எளிமை எவ்வளவு தேவையாகவுள்ளதென்பதை நாடறியும். பகட்டான வாழ்வு நிலைக்கமுடியாது. எளிமையான வாழ்வுவாழ்பவன் என்றுமே மற்றேரால் மதிக்கப்படுவான். துன்பமும் துயரமும் எளியவாழ்வு வாழ்பவனை அணுகாது. பகட்டான வாழ்வு வாழ்பவனை அது இலேசில் அணுகி சித்திரவதை செய்கிறது. பகட்டான வாழ்வை நாமும் தவிர்த்து, எளிய வாழ்வு வாழ யேசுவின் பிறப்பு நமக்கு வழிகாட்டுவதாக அமையட்டும். — வி. இன்னுசிமுத்து

## உதவி உபத்திரமாகியது!

ஒரு பெரிய மரத்துண்டு நான் செல்லும் நடைபாதையில் குறுக்கே கிடந்தது. ரொம்ப நாட்களாக அது அங்கே கிடந்தது. பிறரைப்போலவே நானும் இருபதுதரமாவது அதைக் கடந்து விரைந்துபோயிருக்கிறேன். திடீரென்று எனக்கு என்னவோ நல்ல மனசு தோன்றி அதை எடுத்து வேலியருகில் நகர்த்திப் போட்டேன்.

இதைப் பார்த்துவிட்ட ஒருவர் 'அருமையான காரியம் செய்தீர்!' என்று என்னை வானளாவப் புகழ்ந்ததுமல்லாமல் அதைப் பெரிசுபடுத்தி பத்திரிகைகளில் செய்தியாகப் பிரசுரித்துவிட்டார் அடுத்த நாள் தினசரிப் பத்திரிகைகளில்மட்டுமல்ல. ரேடியோவிலும்கூட நான் மரக்கட்டையை நகர்த்தி வழி செய்ததைப்பற்றி விவரித்தார்கள். இத்தனை சாதாரணமாகத் தோற்றம் அளிக்கும் ஓர் அப்பாவி நண்பர் இவ்வளவு சேவை செய்யக்கூடியவரா என்று எல்லோரும் என்னைப் பாராட்டினர்கள்.

அன்று மாலை பொதுப் பணிக் கூட்டம் ஒன்றுக்கு என்னை வந்து தலைமை தாங்கும்படி வேண்டினர்கள். சமூகசேவா சங்கத்தில் அங்கம்வகிக்கும்படி அழைப்புகள் வந்தன. இவை யாவும் எனக்கு மரக்குத்தியைவிடப் பெருஞ்சுமையாகிவிட்டன.

அடுத்த நாட் காலை இரண்டு மூன்று கார்கள் எனது வீட்டு வாசலில் வந்து நின்றன. அவற்றிலிருந்து ஐந்து ஆறுபேர் கமரா, டெலிவிஷன் கருவிகளுடன் என்னைப் பார்க்கவந்தார்கள்.

ஆரம்பத்தில் அவர்கள் எனக்கு அளித்த வரவேற்பில் நான் சொக்கியே போனேன். எனது வீட்டுக்கு முன்னுல் கிடந்த புல், பூண்டு, குப்பை கூளங்கள் யாவற்றையும் ஒதுக்கித் துப்புரவு பண்ணினர்கள். பின்னர் கோட்டும் சூட்டும், டையும் அணிந்திருந்த ஒருவர்; டெலிவிஷன் கருவியைச் சரிபார்த்தபின் என்னை வெகு அலட்சியமாகப் பார்த்தார்: 'கோட்டும் டையும் கட்டிக்கொண்டு யாராவது வேலை செய்வார்களா? அதை முதலில் கழற்றும்' என்றுர் அந்த ஆசாமி. அடுத்து நான் எடுத்துப் போட்ட மரக்கட்டையைத் தூக்கிப் பார்த்துவிட்டு. 'பூ! இதையா மரக்கட்டை என்றீர்? கொஞ்சமேனும் பார்ப்பதற்குக் கனமாக இருக்கவேண்டாம்?'' என்றுர் கோபத்தோடு.

சிறிது நேரத்தில் நாலைந்து வீடுகளுக்கு அப்பால் வீடு கட்டுவதற்காகப் போடப்பட்டிருந்த தீராந்தி மரக்குத்தி ஒன்றை மூன்று பேராகச் சுமந்துகொண்டு என்னருகில் போட்டார்கள்.

நான்பதில்பேசாமல்தோள் கொடுத்து அதைத் தூக்கினேன். கண்ணைப் பறிக்கும் விளக்கொளியில் தடுமாறிக்கொண்டே வேலிக்கு அருகில் நகர்ந்தேன். அழமாட்டாக் குறையாக, நான்எப்படியோ காரியத்தை ஒருவாறு முடித்து ஆசுவாசப்படுத்துவதற்குமுன் அந்த தடித்த ஆசாமி, ''தப்பு. தப்பு! முதலிலிருந்து மறுபடியும் தொடங்கும். அந்தக் கட்டையை மீண்டும் தூக்கிக் கொண்டு போகவேண்டும்'' என எனக்கு உத்தரவு போட்டார். மேலும், ''ஏன் காணும் இந்த மாதிரி தூக்கிக் கொண்டு போகிறீர்? ஐயே, இப்படியா தூக்கிப் போடுவார்கள்?'' என்று சலித்துக்கொண்டார்.

அடுத்த வாரம் முழுவதும் இடுப்பு நரம்பு பிசகிப் படுத்த படுக்கையாக நான் கிடந்தேன். டெலிவிஷனில் பார்த்த என் குடும்பம் முழுவதும் ஒரே பெருமையில் ஆழ்ந்தனர். நண்பர்களும் புகழ்ந்தார்கள். ஆனுல் எனக்குத்தான் தெரியும் என் வருத்தம்.

உடம்பு சரியானபின், என் வீட்டுவாசலைத் தாண்டி தெருவில் காலடி எடுத்து வைத்தேன். முதன்முலாக என் கண்ணில்பட்டது நடைபாதையில் கிடந்த ஒருபெரிய கல். என்னையறியாமல் அதை எடுத்து எறிவதற்காகக் குனிந்தேன். திடீரென்று பழைய நினைவு வந்தது. நிதானித்தேன். யாராவது என்னைப் பார்த்து இதையும் ஒரு வீரச்செயலாகக் கருதிவிட்டால்...? என்று எண்ணியது மனம்.

குனிவதைவிட்டு நிமிர்ந்து விறுவிறுவென்று நடையைக் கட்டினேன்.

[—ரஷ்ய நகைச்சுவைக் கதை. தமிழாக்கம்- ராஜரங்கன் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறனெனப்பட்ட

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணகிக்கு இசை கூத்து இரண்டும் தெரியாததனால் தான்கோவலன்... கண்ணகி வாழ்க்கை பிளவுபட்டது. இசையும்கூத்தும்நன்கு தெரிந்த மாதவியை நாடினன். எனவே கணவனின் திறமைகளில் மனைவி பங்குகொள்ள வேண்டும். அவனது தொழில்பற்றிய விளக்கங்களை அறிந்திருக்கவேண்டும். அவன் அவற்றைக் கூறும்போது ஆவலோடு கேட்கவேண்டும். கணவனுடைய நலத்திலே அக்கறை காட்டவேண்டும், இவ்வாறு நடக்கும் இல்வாழ்க்கை இன்பமாகவும், பிறரால் போற்றவும்பெறும். இவ்வில்லறத்துள்ளும் கணவனும் மனைவியும் அறிவும் உணர்வும் கலந்து பண்பட்டவர்களாய் தாம்மாத்திரம் இன்புற்றால் போதும் என்றிராமல் பிறரையும் இன்புறச் செய்ய வேண்டும். முகமலர்ந்து விருந்தினரை வரவேற்று செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வாழ்க்கையை உடையவர்களாய் அன்போடிணைந்து வாழ்வு நடாத்தும்நிலையே சிறப்புடைய மனையறம் ஆகும். விருந்தினரை உபசரித்தல் ஒரு குடும்பத் தலைவன் தலையாயது இன்றியமையாத கடனாகும்.

### மக்கட்பேறு

வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தை அடுத்து வைக்கப்பட்ட அதிகாரம் 'நன்மக்கட்பேறு', வள்ளுவர் நல்ல புதல்வர்களைப் பெறுதல்என அடைகொடுத்துக் கூறினர். 'பன்றிகுட்டி போடுவதுபோலல்லாது யானை கன்று போடுவது போல' என்று நாம் கொள்ளலாம். நல்ல புதல்வர்களைப் பெற்ற பெற்றோர் 'புத்' என்ற நரகத்திலிருந்து விடுபட்டவர்களாவார்கள். அதனால்தான் புத்திரர்கள் என்ற பெயர்க் காரணம் உண்டாயிற்று. 'புத்'என்ற நரகம் கிட்டாது என்பது மட்டுமல்ல ஏழு பிறப்பிலும் தீயவை தீண்டாதென வள்ளுவர் கூறுகிறார்.

''மக்கள் மெய்தீண்டல்
உடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்
செவிக்கு''

இம்மக்கள் தம் மெய்யினைத் தீண்டலினால் உடலின் இன்பத்தையும், தம்மழலைச் சொல்லைப் பிறர் கேட்பதனால்செவிக்கின்பத்தையும் கொடுக்கின்றனர், இக்குழவிச் சுவைகள் நீடித்து நிற்பனவல்ல. பருவத்தோடு மறைவன என்ற கருத்தால் 'உடற்கின்பம்' செவிக்கின்பம், எனப் புற அளவோடு நிறுத்துகிறார். இப்புறச் சிறு இன்ப உணர்ச்சியும்கூட பிறருடைய குழந்தைகளின் மெய்யைத் தீண்டுவதனால். சொல்லைக் கேட்பதனால் தோன்றுவதில்லை என உலகியல்பு கண்ட வள்ளுவர் ''தம்மக்கள் சிறுகை அளாவியகூழ்'' 'தம்மக்கள் மழலைச்சொல் கேளாதவர்'' எனத் தம்முறவு காட்டிக் கூறுகிறார்.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற வைப்புமுறையிலே பொருள் அறத்துக்குஇன்பத்திற்கும் இன்றியமையாமை நோக்கி வள்ளுவர் பொருட் பாலை நடுவில் வைத்தார். அறம் செய்வதற்குப் பொருள் வேண்டும். இன்பமாக வாழ்வதற்கும் பொருள் வேண்டும். அப் பொருளை எய்தி அனுபவிக்கும்போது

'காக்கை கரவா
கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள'

காக்கைகள் தமக்கு இரை கிடைத்தபோது தம் இனத்தையும் கூவி அழைத்து உண்பதுபோல நாம் நுகர்வனவற்றையும் பிறரையும் நுகரச்செய்யவேண்டும். அச்செல்வமும் நல்ல பசுவின் பால் அழுக்குப் படிந்த கலத்திலே ஏந்தப்பட்டமையால் பாலிச்சுவைக்க முடியாததுபோல பண்பில்லாதவன் கையில் அகப்பட்டால் அச்செல்வமும் பிரயோசனமில்லாது போய்விடும். வள்ளுவர் பண்புடைமை எனக் குறிப்பிடுவதுஅன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டுமாகும்.

வள்ளுவர்காட்டும் கொழுநற் தொழுதெழும் கோதையின் இயல்பும் அறமும் இந்த அடிப்படையில் எழுந்ததுதான். தனது தலைவனுக்காகவே வாழ்ந்து அவனின்பம் தன்னின்பமாகக் கொண்டு அவனுக்காகவே யாவற்றையும் தியாகம் செய்யும் பெண்ணின் கற்புநெறி கடவாக் கட்டுப்பாடும் வள்ளுவர் காட்டும் மனையறத்திலே பரவிக்கிடப்பதை நாம் காணலாம்.

'எழுதுங்கால் கோல்
காணாக் கண்ணேபோல்
கொண்கன் பழி

காணேன் கண்டவிடத்து தலைவி கண்ணுக்கு மை தீட்டும்போது. கண்ணிலேதான் கோலை வைத்திருந்தபோதும் அந்தக் கோலைக் கண் காணமுடிவதில்லை, அதுபோல தலைவனில்லாத இடத்து அவனது குறைகள் அவனது பிரிவினால் பெரியனவாகத் தோன்றினும் அவனைக் கண்டபோது அப்பழிகளெல்லாம் தலைவியினுள்ளத்திலின்று மறைந்து விடும், காரணம் அவன் மேல் கொண்ட அழியா அன்புதான். இந்தப் பெண்ணியல்பை ஒரு தலைவிமேல் வைத்துச் சித்திரிக்கிறார் வள்ளுவர். எனவே வள்ளுவர் கூற்றுப்படி மனைவியானவள் கணவனுடைய இன்பதுன்பங்களில் பெரும் பங்கு கொண்டு வாழ்கிறாள். அவனது வாழ்க்கையில் அவள் துணைவியாகிறாள்.

# கலப்பட மருந்துகளை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கருவி' பெரிதும் உதவுகின்றது. இக்கருவி போத்தலுக்கு உள்ளேயிருக்கும் மருந்தைபரீட்சிக்கும்போது அந்த மருந்தில் சேர்ந்திருக்கும் மூலப்பொருட்கள், அதன் அளவுகள், மருந்து செய்யப்பட்ட காலம் அது பழுதடையும் காலம் வியாதியை எதிர்க்கும் தன்மை உடலுக்கு விளைவிக்கும் தீமைகள் போன்ற முக்கிய விஷயங்களையெல்லாம் மிக நுணுக்கமாக ஆராய்ந்து தெரியப்படுத்துகின்றது.

பல ஆண்டுகளாக மருந்து வகைகளில் தனியார் உற்பத்தி ஸ்தாபனங்கள் கையாண்டு வந்த 'கலப்படம்' என்ற கொடுமைக்கு இவ் அணுசக்தி 'காந்தக்கருவி' சாவுமணியடிக்கும் என்பது நிச்சயமான உண்மையாகும். இக்கருவி டாக்டர்கட்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

# குளோஸ்ரே

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

கஸ் பார்க்கக் கிளம்பிவிட்டான். அங்கே அவன் சர்க்கஸ் பார்க்கவில்லை. தன்னைச் சுற்றிவர அடர்ந்து நின்ற பெரிய பெரிய மனிதர்களின் பிற்பாகங்களையே பார்த்தான். ஜன நெரிசலுக்குள் அவன் திக்குமுக்காடிப்போனான். திரும்பிப் போக வழிதெரியாமல்தவித்தான். யாரோ மனமிரங்கி அவனை வீடு சேர்ப்பித்தார்கள். வீட்டில் நல்ல பூசை கிடைத்தது. பின்வயதில் அவருக்கு இந்த மனப்பிராந்தி அடிக்கடி உண்டானது.

# மாதங்களில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாவை பாடிப் பத்மநாபனைப் பூஜிக்கலாம்.

நம் குழந்தைகள் நம் நாட்டின் வருங்காலப் பிரஜைகள். அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்தி நாட்டிற்கோர் நற்புதல்வனைத் தருவது நம்முடைய தலையாய கடனாகும் இளம் சிறார்களின் உள்ளத்திலே தெய்வபக்தியை ஊட்டுவதற்கு திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பாசுரங்களை மனப்பாடம் செய்விக்கவேண்டும். அப்பாசுரங்களில் அமைந்திருக்கும் அழகையும், கவிதாநயங்களையும் எடுத்தியம்பி, அவர்களும் அதன் அழகையெல்லாம் அனுபவிக்கும் வழிகளைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அத்துடன் இயற்கையின் அழகையெல்லாம் ஒன்று திரட்டி அமைதியகாநிற்கும் வைகறைப்போதின் இன்பத்தை அவர்களுக்குக் காட்டி, அந்த நேரத்தின் அழகை அனுபவிக்காமல் நித்திரையில் செலவிடுவது எத்தனை அறிவீனம் என்பதை அவர்களை உணர வைக்கவேண்டும். இதையெல்லாம் உணர்ந்த உள்ளத்திலே தூய்மையும் தெய்வபக்தியும் நிறையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தெய்வபக்தி நிறைந்த நெஞ்சிலே கெட்ட சிந்தனைகள் நெருங்கவே அஞ்சி நிற்கும். ஒவ்வொரு உள்ளமும் மேலான சிந்தனைகளில் ஊறி நின்று மேலான செய்கைகளுக்கு வழிவகுக்கும். இப்பொழுது நிலவும் ஊழல்கள் எல்லாம் அழிந்து புதியதோர் இன்ப உலகம் தோன்றும்.

ஆகவே நம் பெண்கள் இவையெல்லாவற்றையும் அலட்சியம் செய்யாமல் இப்பொழுதே திருவெம்பாவை, திருப்பாவைப் பாசுரங்களைப் பாராயணம் செய்தும் செய்வித்தும் மார்கழி நோன்பை நோற்பதற்கு ஆயத்தமாகவேண்டும்.

### என்ன ஆடை உடுத்துவது?
### கம்பியூட்டர் உதவி

சினிமாவுக்கு போக எவ்வித ஆடை அணிவது? கடற்கரைக்குப் போகும்போது, கவர்ச்சிகரமாக எந்த ஆடை உடுத்துவது என்று பெண்கள் முடிவு எடுப்பதற்குள் ''போதும்'' என்றாகி விடும் இவ்வித பெண்களுக்கு உதவி செய்ய, புதுவிதமான ''கம்பியூட்டர்'' சாதனத்தை ஜெர்மன் 'சீமன்ஸ்'' கம்பெனியார் தயாரித்திருக்கிறார்கள். பெண்ணின் வயது தலை மயிர் நிறம், அங்கங்களின் அளவு, கண் நிறம் பழக்க வழக்கங்கள், பாஷன் பற்றிய கருத்துக்கள் இவற்றைப் பூர்த்தி செய்யப்பட்ட வினாத்தாளை, கம்பியூட்டரில் செலுத்தினால் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு எவ்வித ஆடை அணிய வேண்டும். என்பதனை கம்பியூட்டர் சொல்லுகிறது. அத்துடன்உடலழகை பாது காப்பதற்கான வழி முறைகளையும் எடுத்துரைக்கிறது. இவற்றை, கச்சித[illegible] விடுகிறது. (யூ பி எஸ்)

# பஞ்சாமிர்தம்

### கிரேக்க ஞானம்

சட்டம் சிலந்திவலை போன்றது. சிறிய, பலமில்லாத பிராணிகளை வலை சிக்குப்படுத்தி பிடித்துக்கொள்ளும். பெரிய பிராணிகள் வலையையும் பிய்த்தெறிந்துவிட்டு தப்பியோடிவிடும். -சோலன்

ஓர் இரகசியத்தை மறைத்துவைத்தல், ஒய்வு நேரத்தை நல்ல வழியில் பயன்படுத்தல் அநீதியைப் பொறுத்துக் கொள்ளல் இம்மூன்றும்தான் மிகவும் கடினமான காரியங்கள். -சிலோ

எதிர்காலத் திட்டங்களை முன்கூட்டியே வெளியிடப்படாது, அவை தோற்றுவிட்டால் சிரிப்புக் கிடமாகும் -பிற்றாக்கஸ்

### அவர் எழுதிய தமிழ்

ஆரிய மொழி ஒன்றுதானே இந்து ஆரியம், யாரசிகம், கிரேக்கம், இலத்தீன், சிலாவு, விதுஏனியம், சேர்மன், கெல்து முதலிய பல மொழிகளாகப் பிரிந்தது போலவே தமிழும் தெலுங்கு, கன்னடம், துளு. மலையாளம் முதலிய மொழிகளாகப் பிரிந்துள்ளது. வட நாட்டு மொழிகளின் அடிப்படையும் தமிழே. எளிதில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவில் அவை மாற்றமடைந்துள்ளமையாலும், அவைகளின் சொற்போக்கு பெரிதும் ஆரியமயமாயிருத்தலினாலும் அவை ஆரியத்தின் வழி மொழிகள் என்று கருதப்படுகின்றன. அம்மொழிகளின் சொற்போக்கு ஆரியத்தன்மையுடையவையாயினும் அமைப்பு திராவிடத் தன்மை உடையதென்றும், மொழிகளின் இனத்தை ஆராய்ந்து அறிதல் சொற்களாலன்று அமைப்பினாலென்றும் பி. தி. சீனிவாச ஐயங்கார் போன்ற ஆராய்ச்சி அறிஞர் பலவிடங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். வடநாட்டுமொழிகளிற் காணப்படும் மத்தியகால இந்து-ஆரியச் சொற்களில் 25 சதவீதம் மாத்திரம் பழைய இந்து - ஆரியத்தினின்றும் வந்தவை என டாக்டர் காற்றி என்பார் கூறுகின்றார். மீதிச் சொற்கள் உள் நாட்டுச் சொற்களேயாதல்வேண்டும். வட நாட்டு மொழிகளில் மாத்திரமல்ல. சமக்கிருத மொழியிலும் மிகப் பல தமிழ்ச் சொற்கள் உருமாற்றத்துடன் காணப்படுகின்றன..

-ந. சி. கந்தையாபிள்ளை.

### புத்தகத் தொழிற்சாலை

சமீபத்தில் தமது 80-வது வயதில் காலஞ்சென்ற அமெரிக்க மர்மக்கதை ஆசிரியர்ஏள்ஸ்டான்லிகாட்னர்தமதுசீவிய காலத்தில் 120க்கும்மேற்பட்ட துப்பறியும் நாவல்களை எழுதிக் குவித்தார். அவற்றின் பிரதிகளொவ்வொன்றைஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிவைத்தபோது ஆறடி உயரமான ஏணிமீது ஏறிநின்றும் அவரால் உச்சியைத் தொடமுடியவில்லை! அவருடைய நாவல்களில் 15 கோடிக்கு மேற்பட்டவை விற்பனையாகியுள்ளன. இந்த நூற்றாண்டில் வேறெந்த ஆசிரியரின் படைப்புகளாவது இதிலும் மூன்றில் ஒரு பங்காவது விற்கவில்லை காட்னர் புத்தகங்கள் நாளுக்குஎட்டுமணித்தியாலமாக வருடம் 365 நாளும் மணி ஒன்றுக்கு 2000 பிரதிகள் விற்பனையாகின. அமெரிக்கா தவிர்ந்த 20பிறநாடுகளில் இவருடைய புத்தகங்கள் மொழிபெயர்த்து வெளியாகின. திறமான ஒரு முழு துப்பறியும் நாவலை இவர் ஒருமாத காலத்துக்குள் எழுதி முடித்துவிடுவார். இவருடைய மிகப் பிரபலமான துப்பறியும் கதாபாத்திரம் 'பெறிமேஸன்' என்ற நியாயவாதி. காட்னரே நிஜ வாழ்க்கையில் ஒரு நியாயவாதியாகவே இருந்தார். இவரால் தயாரிக்கப்பட்ட 'பெறி மேஸன்' டெலிவிஸன் காட்சிகள் 34 நாடுகளில் காட்டப்பட்டு வருகின்றன.

### 'கலோரி' வாய்ப்பாடு

நாம் உண்ணும் உணவு உடம்பில் சத்தாக மாறுகிறது. இச்சத்தைக் கொண்டே நித்திய கருமங்களைச் செய்கிறோம். உண்ணும் உணவை அளப்பதற்கும் ஓர் அலுவலைச் செய்யும்போது உபயோகிக்கப்படும் சத்தை அளப்பதற்கும் 'கலோரி'என்ற அளவை உடலியல் நிபுணர்கள் வைத்திருக்கிறார்கள். ஒருறாத்தல் கொழுப்பு 3500 கலோரிகளுக்கு சமமானது. உண்ணும் கலோரி அளவுக்குத் தக்க வேலைசெய்யாவிட்டால் உடம்பில் கொழுப்பு அதிகரிக்கும். அதேபோல செய்யும் வேலைக்குத் தக்க உணவு உட்கொள்ளாவிட்டால் உடம்பு மெலிவடையும். இதை வாசிக்கும் போது நீங்கள் மணி ஒன்றுக்கு 25 கலோரி செலவு செய்கிறீர்கள். சாப்பிடும்போது 50 கலோரி செலவாகிறது. வயலின் வாசித்தல்-75 கலோரி. குளித்தல்-100. மெதுவான நடை-200. வேகமான நடை-300. டென்னிஸ் ஆட்டம்-450. விறகு வெட்டல்-500. உதைபந்தாட்டம்-600. மாடியில் ஏறி இறங்குதல்-800. வேகமான ஓட்டம்-900.

### நியாயமான கேள்வி

60 வயது கிழவர் ஒருவர் மோட்டார் விபத்தில் சிக்கி உடம்பெல்லாம் காயம். அவருக்கு பொல்லாத எரிச்சலும் அவமானமும். ஆஸ்பத்திரிக்கு போகமறுத்து அடம்பிடித்தார். இன்ஷூரன்ஸ் கொம்பனி போகத்தான் வேண்டுமென்றது. பொரிந்து தள்ளிக் கொண்டுபோனார் நேர்ஸ் அவரைப் பார்த்து 'உடைகள் எல்லாவற்றையும் கழற்று'என்றாள். கிழவருக்குஇதுஆச்சுகூடிவிட்டது. 'நீ முதல் கழற்று, நான் கழற்றுகிறேன்' என்று வெடித்தார்.

தயாரிப்பு: வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள வரி அமைப்புகள்

## கட்டுரை —1

## – ஆ. முத்துக்கிருஷ்ணன் –

பி. ஏ. எல். எல். பி. (லண்டன்)

மூன்றுபோக்குள்ள நாடுகள் யாவற்றிலும்பலவிதப்பட்ட வரிகளை நாம் காணக்கூடிய தாய் இருக்கின்றது. வரிகள்மூலம் வசூல்பண்ணும் பணத்தை மூலதனமாகக் கொண்டுதான் அரசாங்கங்கள் சனசமூக சேவைகள் யாவற்றையும் பூர்த்திசெய்கின்றன.

ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இலங்கை உட்பட்டு இருந்த காலத்திலுங்குறிப்பாக 1932ம் ஆண்டில்தான் வருமானவரி முதன்முதலாக இலங்கையில் சட்டமூலம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. காலப்போக்கில் வரிவகைகள் மாற்றமுற்றபோதிலும் அடிப்படைக் கொள்கைகள் சிறிதளவேனும் மாற்றமடையவில்லை என்று திட்டவட்டமாகக் கூறலாம். நாளுக்குநாள் அரசாங்கம் மக்கள் வாழ்க்கையில் எடுக்கும் பங்கு அதிகரித்துக் கொண்டுபோகிறது. குறிப்பாக இன்றைய இலங்கையில் மக்கள் அரசாங்கம் மக்களுக்குச் செய்ய முற்பட்டிருக்கும் திட்டங்கள் பலவிதப்பட்டன மக்களுடைய அத்தியாவசிய தேவைகளான உணவு, கல்வி, வைத்தியம் என்பன இலவசமாக அளிக்கப்படுகின்றன. மேலும் பலவிதமானசேவைகளிலும் போக்குவரத்து நீர்ப்பாசன சேதிகள், விவசாயம் போன்றவற்றில் அரசாங்கம் ஊக்கம் கொடுக்கின்றது.

**நேர்வரிமுறை**

**நேரில் வரிமுறை**

இன்றைய வரிஅமைப்பில் பலவிதப்பட்ட வரிகளை மக்கள் செலுத்தவேண்டியுளது. சில நேர்வரிகள். அவைகள் யாவனவென்றால் (அ) வருமானவரி, (ஆ) மூலதனநயம், (இ) கொடைவரி, (ஈ) சொத்துமாற்றவரி, (உ) தொகைவரி, (ஊ) முதலிறையவரி, (எ) ஆதன வரிகள், (ஏ) விசாவரி, (ஐ) அரிசிவரி உதவுப்பணம், (ஒ) நிலவரி, வங்கிக்கழிவு, மிகையிலாவரி இவையும்இன்னும் பலவும். நேரில் வரிகளும் பலவுள. அவையாவனவென்றால் சுங்கவரித் தீர்வை, முத்திரைச் செலவுகள், ஆயத்தீர்வை போன்றவை.

**வருமானவரி என்றால் என்ன 'வருமானம்' என்றசொல்லின் கருத்து யாது?**

நம்நாட்டின் வரிசம்பந்தப்பட்ட சட்டங்கள் பிரதானமாக 1963-ம் ஆண்டின் 4-ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் காணலாம். இதற்குத் திருத்தங்களும் உண்டு. அவை உள்நாட்டிறை திருத்தப்பட்ட சட்டங்கள் ஆகும். தற்பொழுது நாங்கள் சிந்திக்கவேண்டியது 1963-ம் ஆண்டு சட்டமேயாகும். பல முற்போக்கடைந்த நாடுகளைப்போல் இலங்கை இறைவரிச்சட்டத்திலும் 'வருமானம்'என்றால் என்ன என்பதை நெகிழ்ச்சி உடையதாய் இருக்கவிட்டு விட்டார்கள். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் வரிச்சட்டங்களிலும் இலங்கையைப் போல இந்தச் சொல்லுக்கு ஒரு குறிக்கப்பட்ட கருத்தைக் கொடுக்கவில்லை. 'வருமானம் என்ற சொல்லிற்கு குறிப்பிட்டகருத்தைச்சட்டமூலம் கொடுத்தால் மக்கள் தங்கள் வாழ்க்கை வருமானத்தை வரிகளுக்கு உட்படாதவகையில் அமைப்பதற்கு ஏதுவாயிருக்கும் என்ற கருத்தேயாகும். இக்கட்டான நிலையில் நாங்கள் இருக்கும்பொழுது சில பிரபுக்கள்சபைத் தீர்ப்புகளும் எங்கள்நாட்டு உயர்நீதிமன்றத் தீர்ப்புகளும் உதவிபுரிகின்றன. இங்கிலாந்திலுள்ள பிரபுக்கள் சபையில் தீர்க்கப்பட்ட லண்டன் கவுன்சிபை அத்தோனி ஜெனரல் வழக்கில் மகிநாட்டன்பிரபு 'வருமானவரி' என்றால் வருமானத்தில் மக்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டியதொகை என்று கூறியுள்ளார்.

வருமானவரிஎன்ற சொல்லின் கருத்தை நாம் மேலும் அறியவேண்டுமானால் முதலுக்கும் வருமானத்துக்கும் உள்ள வேறுபாட்டைக் கொண்டு நாம் ஓரளவுக்கு அறியலாம் இந்தவேறுபாடு மரத்துக்கும் பழத்துக்கும் உள்ள வேறுபாடு போன்றதாகும். உதாரணமாக ஒருவன்தான் வதிக்கும் இல்லத்தை விற்கிறான் என்று வைப்போம். வித்தெடுத்த பணம் வருமானமல்ல இது அவன் முதல்பணமாகும். இந்தப்பணம் வேறு சில வரிகளுக்கு உட்படினும் வருமானவரிக்குஉட்படாது. அதே இல்லத்தை அவன் வாடகைக்கு கொடுப்பின் வாடகையாக வரும்பணம் வருமானவரிக்கு உட்படும்.

மேலும் ஒருவனுக்குகுறிப்பிட்ட ஒருவருடத்தில்வரும் வரவுகளைக்கொண்டும் ஓர் அளவிற்கு வருமானவரியை நிர்ணயிக்கலாம். வரவுகள் பலவிதமானதாகவும் இருக்கும். நன்கொடைகள், சுவீப்பில் பெறும் அதிர்ஷ்டலாபம், வரவு போன்ற தன்மையுடையன வாயினும் வருமானவரிக்கு அப்பாற்பட்டனவாகும்.

1963-ம் ஆண்டின் 4-ம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் 3-ம் பிரிவின் கீழ் நாம் பார்க்கின் 'வருமானத்தின் ஆதிமூலம்' (Sources of Income) என்ற தலைப்பின் கீழ் பலவற்றைக் காணலாம். அவையாவனவென்றால்:

[அ] தொழில் அல்லது வியாபாரம் அல்லது விவசாயம்.

[ஆ] உயர்தொழில்கள்.

[இ] உத்தியோகம்.

[ஈ] வருடாந்த மதிப்பு சொத்து.

[உ] வாடகைகள், இராஜவரி, வெகுமதி.

[ஊ] பங்குலாபம், வட்டி, கழிவு.

[எ] ஆண்டுத்தொகை.

[ஏ] மூலதனநயம், (அவதானிக்கவேண்டியது)

[ஒ] இதற்குள் அடங்காத மற்ற வருமானங்கள்.

கடைசியாகக் குறிப்பிட்ட பிரிவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் பிரிவின்கீழ் குறிப்பிட்ட எட்டுப்பிரிவின் கீழ் அடங்காத வரவுகளாய் இருந்துள்ளபோதிலும் வருமானம்போன்ற குணதிசயங்களை கொண்டதாயின் அவற்றை வருமானம் என்று கொள்ள உதவியாயிருக்கிறது. சுருங்கச் சொல்லின் இதுதான் இந்தப்பிரிவுகளுக்கு நெகிழ்ச்சி அளிக்கிறது

எங்களுடைய சட்டங்களின் கீழ் வருமானவரி ஒவ்வொரு வருடத்திற்கும் வரி செலுத்துபவரால் செலுத்த வேண்டிய வரியாகும். வருமானவரி ஒருவருடாந்தவரி. வருமான வரியைவிட இன்னும் பல வரிகள் நம் நாட்டிலுள்ளன. அவற்றுள் சில பின்கூறப்பட்டுள்ளன. சில வரிகள் சில ஆண்டுகளில் மட்டுமே அறவிடப்படுகின்றன. சில கூறப்பட்ட ஒரு சம்பவம் நடந்தால்மட்டுமே கொடுக்கநேரிடுகிறது. உதாரணம் மூலதனவரி வசூல், சொத்து மாற்றவரி. இவ்வரிகளை பொதுப்பட ஆராயுமிடத்து நாம் காணக்கிடக்கிறது யாதெனில் வரிச்சட்டங்களின் கீழ் மக்கள் சமம் என்ற அடிப்படைக்கருத்தை காணமுடியாது. இன்றைய வரி அமைப்பில் உள்ள முக்கிய வரிகள்:

[அ] கொடைவரி.

[ஆ] மூலதனநயவரி.

[இ] வியாபாரத் தொகை வரி.

[ஈ] செல்வவரி.

[உ] மூலதனவரிவசூல்(ஓர் ஆண்டிற்கு மட்டும்தான்)

[எ] விசாவரி.

இந்த நாட்டில் உள்ளவரிச் சட்டத்தின் கீழ் வருமான வரி ஒவ்வொரு வரிமதிப்பு வருடத்திற்கும்தான் கணக்கிடப்படுகிறது. 'வரிமதிப்பு வருடம்' ஒவ்வொரு ஆண்டிலும் 1-ம்திகதி ஏப்ரல்மாதத்தில் தொடங்கி 31-ம் திகதி மார்ச் மாதத்தில்முடிவுறும். வரிகட்ட உட்பட்டோர்விவரத்திரட்டை நிரப்பி வரிக்கந்தோருக்குஅனுப்பிவைக்க வேணும். உள்நாட்டு ஆணையாளர் கந்தோரிலிருந்து திரட்டுவராவிட்டால் அவர்களுடன் தொடர்புகொள்ளல் அவசியம். விவரத்திரட்டை நிரப்பி சமர்ப்பிக்கத்தவறுவோர் மீதும், பிழையானவிவரத்திரட்டை அனுப்புவோர் மீதும், கடுமையான தண்டனைகள் விதிக்க உள்நாட்டுவரிச்சட்டங்களின்படி அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது. (82 118 பிரிவின்கீழ்) விவரத் திரட்டு ஜூலை 1-ம் திகதிக்குள் கிடைக்காவிடின் உடனடியாக வரிக்கந்தோருடன் தொடர்புகொள்வது அவசியம். தவறினால் ரூபா ஐந்நூற்றுக்கு மேற்படாத அபராதம் கட்டநேரிடும்.

(தொடரும்)

# மர முந்திரிகைச் செய்கை

வடமாகாணத்திலுள்ள பூநகரிப் பகுதிகளில் மரமுந்திரியை வெற்றிகரமாக உற்பத்தியாக்கலாம் என்றும் அரசாங்கமும் இதற்குவேண்டிய உதவிகளை விவசாயிகளுக்கு அளிக்க விரும்புகிறதென்றும் இப்பொழுது சில காலமாக பத்திரிகைச் செய்திகள் அடிபடுகின்றன. சொற்ப செலவில் நல்லவருமானம் தரக்கூடிய திட்டமாதலால் இது வரவேற்கப்படவேண்டியது.

கொடிமுந்திரிகைக்கு இன்னொரு பெயர் திராட்சைக் கொடி. இது கொடியாக வளர்வது. மர முந்திரிகை பெரிய மரமாக வளர்வது. கிழக்கு மாகாணத்தின் கரையோரங்களிலும் மன்னார்ப் பகுதிகளிலும் இது காடாக வளர்வதைக் காணலாம். இதன் வித்தையே 'கஸ் கொட்டை' என்று கூறுவது. மற்ற எல்லா மரங்களுக்கும் பழத்துக்குள்ளேயே விதை இருக்கும். ஆனால் மரமுந்திரிகை ஒன்றில்தான் விதை பழத்துக்கு வெளியே தூங்கும். இதனால்தான் முறை தவறி அவசரப்பட்டுப் பேசுகிறவர்களை 'முந்திரிக் கொட்டை' என்கின்றோம்.

முந்திரிகை மரத்தின் பிரயோசனங்கள் பலவுண்டு. இதன் விதையை அவித்தும் வறுத்தும் சாப்பிடலாம். கேக், பாயாசம் முதலியதீன் பண்டங்களில் இது சேர்க்கப்படுகிறது. முந்திரிப்பருப்பில் நிறைய உணவுச் சத்துகளுண்டு. அதில் 52 வீதம் கொழுப்பும், 21.5 வீதம் பிசிதமும் 2.5 வீதம் ஏனைய சத்துகளும், ஏ. பி, முதலிய விட்டமின்களும் உண்டு. வாதாம்பருப்புக்கு நிகரான சத்து இதில் இருப்பதாகக் கூடச் சிலர் கருதுகிறார்கள். திருவாங்கூர், கொங்குநாடு போன்ற இடங்களில் முந்திரிப்பருப்பு வறுத்து உடைக்கும் தொழிற்சாலைகள் பலவுண்டு. இங்கிருந்து அமெரிக்கா முதலிய மேலைத் தேசங்களுக்கு 50, 60 லட்சம் ரூபா பெறுமதியான பருப்பு வருடாவருடம் ஏற்றுமதியாகின்றது.

முந்திரிமரம் எல்லாவிதமான மண்ணிலும் எளிதில் வளரக்கூடியது. அதிகம் மழைவீழ்ச்சியும் தேவையில்லை. அதிவிரைவில் வளரும் மரமாதலால் மரத்தை விறகாகவும் விறகைக் கரியாகவும் உபயோகிக்கலாம். ரப்பர் விறகுபோல் நன்றாக எரியும். இந்தியாவில் இதன் பலகை படகுகள் செய்வதற்கும் பெட்டிகள் மூடுவதற்கும் பயன்படுகிறது.

பருப்பை மூடியிருக்கும் கோதிலிருந்து ஒருவகை எண்ணெய் வடிக்கலாம். இது மைப்பூச்சு, வார்னிஷ் முதலியன செய்வதற்கு உபயோகமாகிறது. மரந்தடிகளில் கறையான் ஏறாமல் தடுப்பதற்கும் இவ்வெண்ணெயை உபயோகிக்கிறார்கள். மேலைநாடுகளில் இதற்கு நல்ல மதிப்புண்டு.

பருப்புத்தூளும் உட்கோதில்உள்ள தவிடும் கோழிகளுக்கும்பன்றிகளுக்கும் உணவாகின்றன.




முந்திரிப்பழம் இனிப்பும் துவர்ப்பும்கொண்டது. ஒரு நாளைக்குமேல் இது அழுகிப் பழுதடைந்துவிடும். பழப்பாகு, புளிக்காடி செய்வதில் முந்திரிப்பழத்தை உபயோகிக்கலாம்.

முந்திரிமரம் விதையிலிருந்தும் உண்டாக்கப்படலாம். நல்ல இனம் வேண்டுவோர் ஒட்டுக்கன்றுகளை நாட்டுவார்கள். மரங்கள் வளரவேண்டிய இடங்களிலேயே விதைகளை நாட்டலாம். ஆழம், நீளம், அகலம் எல்லாம் ஓரடியுள்ள குழிகளில் மூன்றுநான்கு விதைகளைப் போடவேண்டும். வித்தின் காம்புப்பக்கம் மேல்நோக்கி இருக்க விதைகளை சுமார் மூன்றுஅங்குல ஆழத்துக்கு மண்ணில் புதைக்கவேண்டும். சுமார் பத்துநாட்களுக்குள் முளை கிளம்பும். எலி, கோழி முதலியன அவற்றை தின்றுவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். கன்றுகள் சுமார் ஆறு [illegible] வளர்ந்தபின் சொற்பநிழல் உண்டாகக்கூடிய மேல் பந்தல் போடவேண்டும். விதைத்து ஏழெட்டு மாதங்களுக்குப் பின் நல்ல செழிப்பாக வளரும் ஒரு கன்றை மட்டும் வைத்துக்கொண்டு மற்றதுகளை பிடுங்கிவிடலாம்.

இலங்கையில் வரண்ட பிரதேசத்திலாவது ஈரப்பிரதேசத்திலாவது பருவக்காற்றுகள் தொடங்கும் காலமே விதை போடுவதற்கு உகந்த காலம். அடுத்துவரும் கோடையில் கன்றுகளுக்கு நிழல்போடுவது அவசியம். கடுமையான காற்று வீசுகின்ற ஒதுக்கில்லாத இடங்களில் மரம் ஓங்கி வளராமல் படர்ந்துவளரும். ஆகையால் இப்படிப்பட்ட இடங்களில் நாற்பது அடிக்கு ஒவ்வொன்றாக மரங்கள் வளர்வது நல்லது. இல்லாவிட்டால் மரத்துக்கு மரம் முப்பதடி இடைவெளி இருக்கவேண்டும்.

நட்ட முதல் மூன்று வருடங்களுக்கு, மரம் பெரிதாக வளர்வதற்கிடையில், ஆடு மாடுகளின் கரைச்சல் இல்லாமல் சுற்றிவர வேலியடைத்து ஒவ்வொரு மரத்தையும் பாதுகாக்கவேண்டும். ஓரளவு வளர்ந்தபின்பு மரத்துக்கு விசேஷமான செய்கைமுறை எதுவும் தேவைப்படாது. ஒன்றரை வருடத்துக்குள் மரம்பூக்கத் துவங்கும். ஆயினும் நாலைந்து வருடங்கள் கழிந்தபின்னரே நல்ல விளைவு கொடுக்கஆரம்பிக்கும்.

அதிக செலவில்லாமல் சுலபமாக வளர்க்கக்கூடிய முந்திரிகை மரத்தின் மூலம், போதிய அளவு அக்கறை எடுத்துக்கொண்டால், நல்ல ஊதியம் பெறலாம். யாழ்ப்பாண குடாநாட்டில்தரிசாக கிடக்கும் கடல் சார்ந்த நிலங்களில் இம்மரத்தை உண்டுபண்ணக்கூடிய வழி [illegible]

Modern Scientific School of
TAILORING

''தையற்கலை''

இதுவரை தபால்மூலம் பாடங்களைப் போதித்து வந்த நாம் எமது யாழ்ப்பாணக் கிளையில் இப்போது நேரிலும் வகுப்புகள் நடாத்துகிறோம். வெளிநாட்டில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களால் ஆண்களுக்கும், பெண்களுக்குமான எல்லாவித உடைகளையும் விஞ்ஞான ''SCIENTIFIC'' முறையில் வெட்டுவதற்கும், தைப்பதற்கும் போதிக்கப்படுகிறது. எல்லாவிதமான எம்பிராய்டரி வேலைகளையும் ஆறுமாதங்களில் கற்று 'டிப்ளோமா' சான்றிதழையும் பெறலாம்.

விபரங்களுக்கு;

மனேஜர் M. S. S. T.
K. K. சங்கரப்பிள்ளை கட்டிடம்,
ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

(தலைமைக் காரியாலயம்)
கொழும்பு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

[இலங்கை திவ்விய ஜீவன சங்க ஆண்டு விழாவில் அரங்கேற்றப்பட்ட கவிதைகளில் ஒரு பகுதி]

# ஆன்மீகமும் விஞ்ஞானமும்

—இ. நாகராஜன்—

சந்திரனில் கால்வைத்துச் சரித்திரத்திற் பேர்வைத்து
எந்திரத்தால் மண்ணெடுத்தே இங்காய்வு
செய்கின்ருர்.
செவ்வாய்க் கிரகத்தை சீக்கிரத்தில் சென்றடைதல்
எவ்வாறு என்றிங்கே எத்தனங்கள் செய்கின்ருர்.
பூக்கும் புதுமைக்குப் பூர்வீகம் விஞ்ஞானம்
ஆக்குகின்ற மாற்றத்தை அளந்தறிய ஆகிடுமோ?
இல்லை! புதுமைக்கே ஏதான விஞ்ஞானம்
அல்லல் அகற்றி யிங்கே. அம்புவிக்கு என்றெனறும்
நல்லனவே செய்யுமென நவிலுகிருர் மேதைகளே!
எல்லையின்றி ஏற்றமுற்றே என்னுளும் விஞ்ஞானம்
வாழும் மனிதருள வாட்டத்தைப் போக்கிடுமா?
நாளும் நலிபவர்கள் நன்மை அடைவாரா?
கண்களது செய்துள்ள பாவத்தால் உள்ளமது
புண்ணுகும் காட்சிபல புலனுகிற் றென்முன்னே]
கண்ணுடனே காதைமட்டும் கருத்தினிலேவைக்காமல்
உண்மைக்கை நாமுயர்த்தி ஊன்றியிங்கே சிந்தித்தால்
உண்மை பலதெரியும் ஓங்கும் நமதுள்ளம்.

அண்டம் முழுவதையும் ஆக்கி அருள்பவனே
கண்டங் கருத்தபரன்; காலப் புதுமைகளை
கொண்டோர் அவர்புகழைக் கூருது இன்றைக்குக்
கண்டிட்ட பாவனையில் கொண்டை முடிக்கின்ருர்.
வீதியிலே விரைந்துவரும் விதவிதமாம் வாகனங்கள்
காது செவிடடையக் கதறிடுமாம் வானெலியே!
இந்தப் புதுமையெல்லாம் இங்காகத் தங்களது
சிந்தனையை நாட்கணக்காய் செலவிட்டு விஞ்ஞானம்
காட்டும் நெறியினிலே கண்டார்கள், உண்மையிதை
நாட்டில் வசிப்பவர்நாம் நம்புகின்ருேம். ஆனலும்
குண்டு பல கண்டார் குண்டொன்ருல் மற்றுள்ள
கண்டத்தை அன்னவர்கள் கட்டியிங்கே ஆளுதற்கும்
எண்ணம் மிகவுடையார் ஏற்றமுள்ள விஞ்ஞானம்
பண்ணும் புதுமையினுல் பாரகத்தில் அச்சமது
ஓங்கி நிலைத்துள்ள உண்மையைநாம் ஒப்புகின்ருேம்!

நாடு பலகூடி நன்மை விளைப்பதற்கே
கூடுகிருர் ஐ. நா. வில் கூக்குரலும் போடுகிருர்
'ஆக்கும் அணுக்குண்டால் அழிக்காதீர்! வையகத்தில்
தாக்கும் குறிக்கோளைத் தளர்த்து' மெனச்
சொல்லுகின்ருர்.
ஆனலும் நாடுகளோ அந்தரங்க மாய்த் தம்முள்
ஆன வரையினிலும் அணுக்குண்டை ஆக்குவதேன்?
விஞ்ஞானச் சக்தியிது விரைந்து மனிதர்களை
அஞ்ஞானப் பாதைக்கே அழைத்துவரும், ஆனலெம்
ஆத்மீகம் அப்படியா? அன்பை முதலாக்கிச்
சாத்வீகம் சாந்திநெறி தழைக்க வழியமைக்கும்!

வானுட்டை வையகத்தை வற்ருத மாநதியை
தேனூர் சுவைக்கனியைச் செழித் தமரக் கூட்டத்தை
கானகத்தை மாகடலை காற்றைப் பெருந்தீயை
மீனினத்தைப் புள்ளினத்தை விடப்பாம்பு பூச்சிகளை
கானஞ்செய் புட்களுடன் கடிவிலங்கை மானிடனை
தானய் தனித்தமைத்தோன் தக்கபரன் என்றே
ஆன்மீகம் செப்புவதை அறிந்தோர்கள் உய்வாராம்!

பார்க்கு மிடமெங்கும் பாங்கார்ந்த இன்பத்தைப்
போர்த்துப் பொலிவுதரும் பூரணனின் நற்றிறனை
எம்மால் அளந்தறிய இங்காகா. தன்னவனின்
செம்மை அருளொன்றே சீர்மை யுடன்சீலம்
நன்மை தருமென்றே நம்பியிங்கே வாழுபவர்
புன்மை பொருந்தாத பூரணனுல் உய்திடுவார்.

எங்கும் நிறைந்திருந்தே ஏற்றம் பிறப்பிப்போன்
கங்கை நதிபாம்பைக் கற்றைக் குழல்வைப்போன்
என்றேநாம் நம்பிவந்தால் இங்கே அவனருளால்
நன்ருகும் நம்முள்ளம் நன்மை நலம் விளையும்.

எங்கே எம் ஈசனென? இங்கு வினு வெழுப்பி
தங்கள் புதுக்கருத்தை தழைக்க விடுகின்ருர்.

எங்குமுள்ள ஈசனவன் இருக்கும் ஒருகோவில்
உங்கள் உளம்என்ற உண்மைதனைக் கூறுகிருேம்.

உண்மை உளத்திருந்தால் ஒழுக்க வழியிருந்தால்
திண்மை யுடையபரன் தெரிவான் சிறுவிழியில்

எங்குமுள்ள ஈசனையே இந்த வழி கண்டால்
இங்கு குறையில்லை ஆனலும் இவ்வுலகில்
வாழுகின்ற ஏழையவன் வயிறு கொதிப்பதனுல்
நாளும் அழுகின்ருன், நாதனவன் கோவிலிலே
"பூசை முடிப்பதற்கு பூவோடு பால் பழத்தை
ஆசையுடன் கொண்டுசெல்வார் அரிய விழிகாண
தூசாய் அதை மதித்து தூய இறைவனளி
செல்வதிலே அர்த்தமது இல்லையென நேற்றுப்
பேசியுள்ளார் இங்குவந்த பெட்புப் பெருமையுள்ள
சீரார் சிதானந்த சாமிகளாம், உண்மையிதே;
நேரார் அவர் நெறியில் நின்ருல் உலகத்தில்
ஒன்ருகும் ஈசனருள் உண்டாம் உளத்திற்கே.

ஆசைப் பிடியினிலே அல்லல் மிகவுற்று
நேசப் பொருளென்று நினைப்பில் எழுந்தவற்றைக்
காசால் பெறமுனைவோர் கடவுள் அருளுக்காய்
கூசாமல் வேஷமிடும் கொள்கை தனைவிடுக!

நெற்றியிலே நீறிட்டு நித்தமுமே பொட்டிட்டு
பற்றையெல்லாம் காசினிலும் பாவையிலும்
வைத்துவிட்டு
சுற்றுகிருர் கோயிலினையே தூய சிவன்இவரின்
வேஷம் அறியானு? வேதாந்தப் பேச்சுகளின்
மோசம் தெரியாதா? முட்டாளா? நம்மீசன்?

கஞ்சிக்காய் நாட்டினிலே கண்ணீர் வடித்திலமுன்
கெஞ்சி அழுகின்ருர்; கேட்காதா? நம்செவிகள்.
ஈசன் உருவமதே ஏழை வடிவமென்றே
பேசுகிருர் தாகூராம் பேருடைய மாபுலவன்.
வேஷத்தை நீர்விடுவீர் மேன்மை அடைவதற்கு
நாசத்தைப் போக்கிவிட்டு நன்மை புரிந்திடுவீர்.

அண்டம் தனிலிருந்தே வேருகும் அண்டத்தில்
குண்டை எறிந்து வெற்றி கொள்ளவழி செய்கின்ற
விஞ்ஞானம் இவ்வுலகில் வேகமுடன் சென்றிடினும்
மெய்ஞானம் ஒன்றேதான் விலைமதிக்க ஒண்ணுத
மேலாம் பொருள்என்றே மேன்மை மிகவுடைய
நூலை அறிந்தவர்கள் நுணுகியறிந்துள்ளனராம்

சூரியனுர் திசை மாறித் தோன்றிச் சுழன்றிடலாம்
வாரி யுடன் யாவும் மறையவழி செய்திடலாம்
சிந்தை தனையடக்கும் திறனில்லை என்றுமுன்னுள்
நொந்தே அடியாரும் நெக்குருகிப் பாடுகிருர்.

சிந்தை தனையடக்கி சிவம்மீதே சித்தத்தை
இந்த உலகினிலே எவர்வைக்க ஆகிடுமோ?
இல்லை! இதுவொன்றே இந்த உலகத்தில்
வல்ல பெருஞ்சக்தி மாபெரிய ஈசனெனும்
உண்மைக் குதாரணமாம் உள்ளத்தால்யாமுணர்ந்தால்
திண்மை மிகவுறுவோம் சீரோடு வாழ்ந்திடுவோம்!

# சாதுக்களும் சந்நியாசிகளும்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகவிருக்குமோ? சங்கரா யார் கொலோ குருடர்!

0 0 0

இதர பல கோவில் திருவிழாக்களில் முக்கிய கவர்ச்சி அம்சமாக இடம் பெறும் சின்னமேளம் வாணவேடிக்கை என்பன மாவை முருகன் ஆலயத்தில் நிறுத்தப்பட்டு நெடுங்காலமாகிறது. அப்படியும் திருவிழா நடைபெறும் இருபத்தைந்து நாட்களும் கோவில் கோட்டம் ஜேஜே என்று முருகன் கோவிலுக்கே உரிய விழாச்சோபையுடனே திகழும். திருவிழாக்களின் போது பூஞ்சப்பறம், முத்துச் சப்பறம், தண்டிகை வாகனாதிகளில் முருகன் கானகலாதரராகப் பவனி வருவது கண்கொள்ளாக் காட்சி. கோவிலின் அகன்ற வீதி முழுக்கவும் நிறைந்து பொலிய அன்றன்றே உருவாக்கம் பெறும் முத்துச் சம்பறம் பூஞ்சப்பறம் என்பன தெற்கு வீதியில் நகர்வதே ஒரு தனி அழகு. இந்தத் தேரடியில் நின்று தெரிசித்தாலும் போதாதோ!

நல்லூர், கதிர்காமம், செல்வச்சந்நிதி. மாவிட்டபுரம்—இந்த நான்கு முருகன் கோவில்களும் ஈழத்து வசந்த மகோற்சவ காலமான ஆனி தொடக்கம் ஆவணிவரை முருகன் அடியார்கள் சிந்தைகுளிர வாய் இனிக்கப் பேசும் திருத்தலங்கள். சொல்லச் சொல்ல இனிக்குதடா முருகா என்று மனதாலும் வாயாலும் பாடிப்பரவி இக்கோவில்களின் உற்சவ காலங்களில் பாதயாத்திரை, அங்கப் பிரதிஷ்டை, காவடி, விரதம், நோன்பு, ஜெபம், தபம், காவி, கமண்டலம் என்றெல்லாம் வழிபாடியற்றி குமரக்கடவுளிடம ஓடி ஓடிப் போகும் மெய்யடியார் திருக்கூட்டம் ஒன்று ஊரெங்கிலும் உண்டு; ஒன்றுமுண்டு. நாளையும் உண்டு. எத்தனை சம்பவித்தாலும், வானம் துளங்கிலென், மண் கம்பமாகிலென் அவர்களது மனப்பான்மை மாருது; மன உறுதி தளராது, சமய பக்தி குன்ருது முருகனை அவர்கள் கண்முன்னே கண்டார்கள். தெய்வம் அவர்களிடத்தே பேசியது, குலவியது. நம்பினுர்கள், மலை போன்ற நம்பிக்கை அது.

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்... அரோகரா; அதோ காததூரம் பாய்ந்துவிட்டாரே அடியார்!

சாம்ராச்சியங்கள் வரும் போகும்; அரசகொற்றம் தோன்றும் மறையும். கங்கை என்றும்போல் பாய்ந்துகொண்டேயிருக்கும்'

"ஆச்சு. தீர்த்தத் திருவிழாவும் முடிஞ்சுது. மாவிட்டபுரம் முருகையன் விழாக்கோலம் கண்டாச்சு- அடுத்து செல்வச் சந்நிதியானிடமும் நல்லூரானிடமும் போகவேணும் வருகிறேன் தம்பி"...'எனையாள் சற்குமரேசா—கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே!' வாய் முணுமுணுக்க, யாத்திரைப் பொட்டணத்தைக்கட்டிக்கொண்டே சாது நல்லதம்பியிடம் விடைபெறுகிருர் வல்வெட்டித்துறை செல்லையாசாமி. தீவுப்பகுதி மருதனூர் சுப்பிரமணியசாமியும் அவரோடு கூடக் கிளம்பிவிட்டார். (அகத்திலும் புறத்திலும் துறவுபூண்டு பஞ்சாகப் பறந்த பழையநாள் சாதுசந்யாசிகளாக இவர்கள் இருப்பார்களென்று நாம் எதிர்பார்க்க முடியாதென்ருலும் அவர்களை ஞாபகப்படுத்தினுர்கள்)

ஊர் ஊராகத் தலம் தலமாக இவர்கள் போய்க்கொண்டேயிருப்பார்கள். 'வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன்மயூரமுமே'.

(தொடரும்)

# கேட்பவர் பெற்றிடுவர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தீயவழிகளிலிருந்து மீட்டு வானுலக ஆட்சியை- வானப்பர் ஆட்சியை இம்மண்ணுலகில் நிலைநாட்ட விழைந்தார். உலகெங்கணும் அன்பும் அருளும் அமையும் இன்பமும் இணைந்துவாழ அருள் மொழிகளை அறிவோடு குழைத்து உள்ளக் குழைவோடு மக்களுக்கு ஊட்டினர். ஆனல் அவர் தன் விவிலிய நூலில் ஓர் இடத்தில் "ஒரு தீர்க்கதரிசிக்கு உலகில் புகழ் உண்டு. ஆனல் தன் நாட்டில் மதிப்பில்லை என விளம்பிய தற்கமைய அவர் பிறந்த நாட்டிலேயே தான் தோன்றிய இனத்தவராலும் தன் நாட்டை ஆண்ட அரசனுலும் ஏதோ கூறத்தகாதவை கூறிய கொடுமையாளன் என்ற பேரில் சிலுவையில் அறைந்து சித்திரவதை செய்யப்பட்டார்

## பொறுமையின் பிறப்பிடம்

ஆனல் எம் ஏந்தல் இயேசுவோ 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல்தலை" என வள்ளுவர் வரைந்தமைக்கமைய இரக்கமற்ற அரக்கமனம் படைத்தோர் இவருக்கு இத்தகைய தாங்கொணுத் துயரை விளைவித்தபோதும் அவர் தன் நிலையில் இருந்து பிறழவில்லை மண்ணிலே மாந்தர் செய்யும் மாபாவம் போக்க வந்த இந்த மானிடத் தெய்வம் இறுதியில் மொழிந்த மொழிகள் கல்நெஞ்சையும் கசிந்துருகச் செய்யும் தன்மைவாய்ந்தன. இவரின் இந்த இரக்க சிந்தையை வண்ணத் தமிழில் வளமான கருத்தோடு உள்ளத்தை ஊடுருவும் முறையில் உணர்த்துகிருர் கிருஷ்ணபிள்ளை என்ற கிறிஸ்தவக் கவிஞர் இதோ அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்ச்சிப் பெருக்கு:

தன்னரிய திருமேனி
சதைப்புண்டு தவிப்
பெய்தி
பன்னரிய பலபாடுபடும்
போதும் "பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்
லாதார் செய்வதிப்
பிழையை
மன்னியும்" என றெழிற்
கனிவாய் மலர்ந்தார்
நம் அருள்வள்ளல்.

## கடவுளின் மீதும் வழக்கு

அமெரிக்காவைச் சேர்ந்த திருமதி பெட்டி பெண்ட்ரெளஸ் (ஃபோணிக்ஸ் மாகாணம்) கடவுளின்மீது ஒரு வழக்குத்தொடர்ந்தார். மின்னல்வீச்சு அவரது வீட்டைப் பாழாக்கிவிட்டதுஎன்பதுதான் அவரது வழக்கு. இதனை விசாரணைசெய்தநீதிபதி ரஸல் ஈடென்ஸி அந்த அம்மையாருக்கு நஷ்டஈடாக கடவுள் 100,000 டாலர்கள் தரவேண்டுமென தீர்ப்பு வழங்கினர். ஆச்சரியமடைந்த பத்திரிகையாளர்கள் நீதிபதியிடம் எப்படி இந்தப் பணத்தைக் கடவுள் கொடுப்பார் என்று கேட்டனர் 'அது மிகவும் எளிது, ஸ்தலமாதாகோவில் பொறுப்பாளர்கள் கொடுப்பர்; அவர்கள்தானே பூமியில் கடவுளர்களின் அமைச்சர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். பின் என்ன? அவர்கள்தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினர்.

## வானெலி

## 20-12-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 குரல் வகை, 7-45 இவ்வார பிரமுகர். 8-00 நிலைய ஒலிப்பதிவு. 8-15 பேச்சு 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.

9-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளர்களுடன். 10-30 திரை கானம், 11-15 மாணவர் நிகழ்ச்சி. 12-00 எமது அதிதி, 1-00 பெண்ணுலகம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 துதிப் பாடல்கள், 6-15 பாமாலை, 6-30 நாட்டுப் பாடல்கள். 7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30செய்தித் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### கல்வி

27-1-71ல் ஆரம்பமாகும் எங்கள் 10-வது பருவ மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி வகுப்புகளுக்கு விண்ணப்பப் படிவங்களை நேரிலோ கடித மூலமோ பெற்று 22-1-70 முன் விண்ணப்பிக்கவும். ஸ்ரீ ராஜ் ஓட்டோ மோபைல் என்ஜினியரிங் இன்ஸ்ரிரியூட், 11/B, ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 2572

### பயிற்சி

மோட்டார் றீ வைண்டிங் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். வகுப்புகள் ஆரம்பம் 1-1-1971. விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்ரிரியூட், 443/5, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2584

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சிடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட், 122, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2582

### காணவில்லை

வைத்தியர் என அழைக்கப்படும் முருகேசு பொன்னையா அவர்கள் கடந்த 4-12-70 தொடக்கம் காணாமல்போய்விட்டார். இவர் நெடுநாளாக மூளைக்கோளாறினால் பீடிக்கப்பட்டிருந்தார். இவர் கடைசியாக அழுக்கேறிய சேட்டும், பச்சை நிறச் சாரமும் அணிந்திருந்தார். இவர் அழுக்குகளை எடுத்து மடியில் கட்டும் சுபாவமுடையவர். வயது 60 ஆகும். இவரை யாராவது கண்டால் கீழ்க் கண்ட விலாசத்திற்கு உடனடியாக அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 6; ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-13, தொலைபேசி; 86468 2580

## வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்

எங்கள் சங்கத்திலிருக்கும் சுமார் 10,000 வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. உரிய விண்ணப்பப் பத்திரத்தை ரூபா 2/- கொடுத்துச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ரூபா 250/- வைப்புப்பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் வெற்றுச் சாக்குக் கேள்விப்பத்திரமெனத் தபால் உறையின் மேல் எழுதி 25-12-70 பகல் 12 மணிக்குப் பிந்தாது சங்கக் கந்தோரில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

க. கணபதிப்பிள்ளை,
பொதுமுகாமையாளர்,
அ. ப. நோ. கூ. சங்கம்,
2594 அளவெட்டி.

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக் காணியும் விலை ஐம்பதாயிரம். கடன் வசதி கிடைக்கும். வெஸ்ட்டன்றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 2562

காணி:
யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் காங்கேசன் துறை வீதியில் கடையும் கட்டிடமும் அமைந்துள்ள ஒரு பரப்பும் 15 குழியும் உள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. விளம்பர இல: 2429, மே/பா 'ஈழநாடு', த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 2429

நல்லூர் செட்டித் தெருவில் மூன்று பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க லான்ட் றேட்ஸ் (Land Trades), 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2566

லொறி;
24 ஸ்ரீ 2000 தொடர் இலக்கமுள்ள. பக்கம் மூடப்பட்ட டொஜ் லொறி மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. யத்துத்தொன் பாரம் ஏற்றக் கூடியதும் 23,000 மைல் செல்லக்கூடியதும், தனிப் பாவிப்பிலுமுள்ளது. பார்வையிட்டுப் பெறலாம். 17, அல்பிறெட் பிளேஸ், கொழும்பு-3. 2587

காணி
யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கண்டிவீதி, கச்சேரி, சுண்டிக்குளித் தபாற்கந்தோர், வேம்படி மகளிர் கல்லூரி, ஸ்ரான்லி, சென் ஜோன்ஸ் யாழ், மத்திய கல்லூரிகள், கந்தசாமிகோவில், கிறிஸ்துவ தேவாலயங்கள், புங்கங்குளம், புகையிரத நிலையம் ஆகியவற்றிற்கு அண்மையில் சிறந்த வசிப்பிடத்தில் அமைந்துள்ள காணி முழுவதுமாகவோ துண்டுகளாகவோ விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2583, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 2583

### திருமண நன்றி நவிலல்

7-12-70ல் நடைபெற்ற எமது இளவல் செல்வன் மகானந்தன்— திலகவதி திருமணத்தின்போது நேரில் வந்து வாழ்த்தியும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் அன்பளிப்புகள் செய்தும் எம்மையும் மணமக்களையும் கௌரவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். சிவ. கருணாநிதியும் துணைவியாரும், 'விடிவெள்ளி' இரத்மலானை. 2586

### தேவை

பனங்கிழங்கு
பனங்கிழங்கு தொகையாக தேவை. விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். வ. பி. பொன்னுத்துரை, புதிய காவல் நிலையமுன், நெல்லியடி, கரவெட்டி. 2581

### வாடகைக்கு

ஜனுவரியிலிருந்து நவீன வசதிகள் யாவும் கொண்ட புதியவீடு No 12 B. A. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். 2585

### உரும்பராய் பட்டினசபை தேர்தல் முடிவுகள்

உரும்பராய், சனி
நேற்று நடைபெற்ற உரும்பராய் பட்டினசபை தேர்தலில் முன்னாள் தலைவர் திரு. கே. பத்மராஜா பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றார். வெற்றி பெற்றோர் விபரம்வருமாறு:

1-ம் வட்டாரம்:- ந அரியரத்தினம். (போட்டியின்றித் தெரிவு)

2-ம் வட்டாரம்:- செ. இராசையா (போட்டியின்றித் தெரிவு)

3-ம்வட்டாரம்:- சி. செல்வராசா

4-ம் வட்டாரம்:- சி. செல்லத்துரை.

5-ம்வட்டாரம்:- கே. பத்மராசா.

6-ம் வட்டாரம்:- நா. பொன்னுத்துரை.

7-ம் வட்டாரம்:- செல்வரத்தினம்

8-ம் வட்டாரம்:- கே. சங்கரப்பிள்ளை.

### பஸ்ஸில் மோதிரம் கழற்றினாராம் ஒருபெண் பொலிசில்

மாவிட்டபுரம், சனி
ஓடும் பஸ்ஸில் பால்மணம் மாறாத சிசுவின் தங்கமோதிரத்தைத் திருடியதாக சந்தேகிக்கப்படும் பெண் பிரயாணி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### வரப்பெற்றோம்

'தீ'
மாத இதழ்
விலை சதம்: 15

மாணவர் பத்திரிகையான 'தீ' மாணவர்களின் உரிமைகளையும் உணர்ச்சியையும் வெளிக்காட்டும் சாதனமாக வெளிவந்துள்ளது. அநீதியை எதிர்த்து மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்' என்ற தலைப்பில் அண்மையில் மாணவர்கள் நடாத்திய உரிமைப் போராட்டத்தினைச் சித்தரிக்கும் முதற்பக்கக் கட்டுரையுடன் வேறு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. 'எச்சரிக்கிறது' என்ற தலையங்கத்தில் கல்வியமைச்சின் அண்மைக்கால நடவடிக்கைகள் அலசப்பட்டுள்ளன.


## காணி, வீடு, விற்பனை

1. யக்கச்சி கிழக்குத்தோட்டம், பத்து ஏக்கர் துண்டுகளாக, இன்னும் சில துண்டுகள். முந்திரிகை, தென்னை, சிறு பயிர்கள், பழவகைகள், பால் பண்ணை செய்வதற்கு உகந்தது.
2. பிறவுண் ரோட்டில் கட்டிப்பூர்த்தியாகாத வீடு. சுற்றுமதில், மலகூடம், மா, பலா, தென்னை, தற்பொழுது காய்க்கிறது. பாடசாலைகள் அண்மையில்.
3. செட்டித்தெருவில் 2 பரப்பில் சிறிய வீடும், வளவும்.
4. நாவற்குளி ஆலாத்தி வெளித் தோட்டத்தில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 8 பரப்புக் காணி.

The Land Investments, த லான்ட் இன்வெஸ்ற்மென்ற்ஸ்,
6, Main Street, 6, பிரதான வீதி,
Jaffna. Phone: 7453 யாழ்ப்பாணம்.
2592 போன்:- 7453

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா 4 காட்சிகள்
ஹாமினி — அனுலா
நடித்த
ருன கிரே
(சிங்களம்)

வெலிங்டன் சினிமா (வெஸ்லிசினிமா)
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி — சாவித்திரி
நடித்த
நவராத்திரி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
சிவாஜி — கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
David Niven
in
PRUDENCE & THE PILL
(Color)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

மனோஹரா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
★ என். டி. ராமராவ்
★ கே. ஆர். விஜயா
ஜோதிலட்சுமி ★ ராஜ்ஸ்ரீ
நடித்த
லக்ஷ்மி கடாட்ஷம்
(பாஸ்கள், சலுகைகள் ரத்து)

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ ராஜன் ★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
நடித்த
ஏன்?

யாழ். வின்ஸர், றீகல்
தியேட்டர்களில்
பரிசுத்த பாப்பரசர்
6-வது சின்னப்பரின்
இலங்கை விஜயம்
30 நிமிடங்களுக்கு எல்லாக் காட்சிகளிலும்
காண்பிக்கப்படுகின்றது

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்
கண்ணன் என் காதலன்
தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழிகள்



நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலவேண்டும்; பயில்வோமாகில், மேலே பெருந் துன்பங்களையும் சகிக்க வல்லவர் ஆவோம்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

கடன்படும் செல்வர்களிலும், கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

நம்மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

நாவலர்


## முக்கிய அறிவித்தல்

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு விளம்பரம் எது காரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

ஆர். வி. ஜி. பீடி

'உற்பத்தியாளர்'

47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.


# சட்டத்திற்கு முரணானது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் இறைமை அதனது அரசியல் அமைப்பிலேயே தங்கி உள்ளது எனச் சொல்லலாம்

நாடாளுமன்றமே மிக உயர்ந்ததாகும். இறைமை நிரம்பப் பெற்றதாகவும் முழுஉலகிலும் கருதப்படுவது ஐக்கியஇராச்சியத்தின் நாடாளுமன்றத்தில் மட்டுமே. ஏனெனின் ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமே அரசியல் அமைப்பு வரையப்படாதுள்ளது.

ஆயினும் மரபுவழிவந்த விதித்தொகுதிகள் பலவிதமான வழக்கங்கள், சம்பிரதாயங்கள் என்பனவற்றை எல்லாம் ஒன்றுதிரட்டி எழுதப்படாதஅரசியல்அமைப்பு விதிகள் எனப்படும், உலகின் எந்த ஒரு நாட்டினதும் அதிஉயர்ந்த சட்டமாக அரசியல் அமைப்பு இருக்கும் காரணத்தினால்தான் அதில் சிறிய விடயத்தில்தானும் மாற்றம் வேண்டப்பட்டவிடத்து ஒரு விசேட பெரும்பான்மை அல்லது பொதுசனவாக்கெடுப்புடன் கூடிய பொதுத்தேர்தல் போன்ற விசேட நடைமுறைக்கான தேவை ஏற்படுகின்றது. எனக்குத் தெரிந்த அளவில் உலகின் பல நாடுகளுள்ளும் சாதாரண அதிகப்படியான வாக்குகளின்மூலம் அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தக்கூடிய அதிகாரம் நியூசிலந்தின் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே உள்ளது.

மிகஅடிப்படையானதென நான் ஒரிருவிடயங்களை இவ் விடயத்தின் குறுகியகால எல்லைக்குள் குறிப்பிட விரும்புகின்றேன்.

அரசியல் அமைப்பினுள் அதன் விசேடபகுதியாக அமைந்து அரசியல் அமைப்பினுல் அரண்செய்யப்பட்டதான அடிப்படை உரிமைச் சாசனம் மிகக்கட்டாயமாக இடம்பெறுதல் அவசியமாகின்றது. இதில் மற்றெல்லாவற்றுள்ளும் தனிமனிதன் ஒவ்வொருவனும் சட்டத்தின் முன் சமமாக மதிக்கப்படுவான் என்ற உறுதிப்பாடு.

சாதி, சமயம், இனம், அல்லது மொழி சார்ந்த காரணத்தினுல் பேதங்களைத் தடுக்கும் உறுதிப்பாடு, அரசாங்கம் அதன் கீழுள்ள எந்தவொரு அலுவலகத்திலும் நியமனம் அல்லது தொழில் வழங்குவதில் எந்தவொரு குடிமகனுக்கும் பாகுபாடின்றிச் சமசந்தர்ப்பம் அளிக்கும் என்ற உறுதிப்பாடு. பேச்சுச்சுதந்திரம் அமைதியாகக் கூடுவதற்கான சுதந்திரம்போன்றவற்றிற்கும் பாதுகாப்பளிக்கும் உறுதிப்பாடு. பேச்சுச்சுதந்திரம், அமைதியாகக் கூடுவதற்கானசுதந்திரம் போன்றவற்றிற்கும் பாதுகாப்பு அளிக்கும் உறுதிப்பாடு; ஒவ்வொரு பிரஜைகளினதும் உயிருக்கும். சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு அளித்து பொறுப்பற்ற முறையில் கைதுசெய்வதற்கும் தடுப்புக்காவலில் வைப்பதற்கும் இயலாதபடி பாதுகாப்பு அளிக்கும் உறுதிப்பாடு. எந்த ஒரு மதத்தைப்பின்பற்றும் உரிமை, தனது தாய்மொழிமூலம் கல்விகற்கும் உரிமை. குற்றம் சாட்டப்பட்டு நீதி வேண்டி நிற்கும் ஒருவர் தாம் விரும்பும் மொழிமூலமே விசாரணை செய்யப்படுவதற்குப் பாதுகாப்பு; தனதுசொத்துக்களை வைத்திருக்கவும், தாம் விரும்பிய தொழிலைச்செய்யவும் உரிமை, ஆதியனவழங்கப்படவேண்டும். இவை மட்டும் எவ்வகையிலும் முழுமையானவை யல்ல. இவை யாவும் அடிப்படை உரிமை என்ற பிரிவினுள் வருகின்றன என நான் கருதுவதினுல் அதனை இங்கு குறிப்பிடுகின்றேன்.

அடிப்படை உரிமைகள் மீறுவதை மீறுவதாகப்பயமுறுத்தலை விசாரணைசெய்து தண்டனை அளிப்பதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட பீடம் ஒன்று இல்லாது போனுல் அர்த்தமற்றதாகவும், உபயோகமற்றதாகவும் போய்விடும்.

இங்கு மேலும் ஓர் அடிப்படை உரிமைகள் கவனத்திற்கு வருகின்றது. அதுதான் நீதிபரிபாலனச் சுதந்திரம். அடிப்படை உரிமைகள் பற்றி விசாரணைசெய்து தண்டனை வழங்கவல்ல அதிகாரபீடமொன்று இருந்து இவ்வுரிமைகளை மீறுதலுக்கு எதிராக வழக்குத் தொடருவதினுல் அதற்கு நீதிபரிபாலனம் சுதந்திரமாக இருந்தால்தான் முடியும். ஆகவே நாட்டின் நீதிபரிபாலனம், முழுமையான சுதந்திரம் கொண்டதாக இருத்தல் அவசியம்.

அதற்கான நியமனங்களைப் பொறுத்த மட்டிலோ அல்லது அதனது ஊதியங்களைப் பொறுத்தமட்டிலோ பிரதம மந்திரியாயினுஞ்சரி, அல்லது தனி மந்திரியாயினும்சரி எவரின் அதிகாரத்துக்குள்ளும் இது இருக்கக் கூடாது-

இதனை உறுதிப்படுத்துவதற்காகவே சட்டமன்றம் நிறைவேற்றல்துறை, நீதிபரிபாலனத்துறை என்பனவற்றிற்கு முற்றாகத் தனிப்படுத்தப்பட்ட தனித்தனி அதிகாரங்கள் வழங்குவது அவசியமாகின்றது.

### திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

அரசியல்நிர்ணயசபையை சட்டரீதியாக நோக்கினுல் அது சட்டத்திற்கு முரணானது. எங்கள் பாராளுமன்றத்தின் அரசியல் யாப்பைத் திருத்துவதற்கு என்று அதிலேயே வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனுல் இந்த அரசியல நிர்ணயசபை அதனை விடுத்து வேறுவழியில் தம்மை ஓர் அரசியல் நிர்ணயசபையாகக் கூடியிருக்கிறது. இவர்கள் இயற்றிய அரசியல் யாப்பை உயர்நீதிமன்றமும் பிரிவுக் கவுன்சிலும் ஏற்றுக்கொள்ளுமானுல் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதே. இவர்களின் யாப்பை பிரிவுக்கவுன்சில் ஏற்றுக் கொள்ளமாட்டாது.

சிறுபான்மையினருக்கு உரிமை கொடுக்க இந்த அரசாங்கத்தினர் ஒருவருக்கும் அபிப்பிராயமில்லை. அப்டிபடை உரிமைகள் என்று கூறுகிருர்கள். அவை என்ன என்று ஒருவருக்கும் தெரியாது.

தமிழ் பேசும் தேசிய இனத்திற்கு அவர்கள் மொழி உரிமை இல்லா விட்டால் வேறு எது அடிப்படை உரிமையாகும். எவ்வாருயினும் இப்போது இருக்கின்ற உரிமையைவிடக் கூடுதலாக ஒன்றும் தரப்படப் போவதில்லை.

### திரு. ஜி. பொன்னம்பலம்

ஒரு நாட்டின் தலைவிதியை மிக உயர்ந்த மட்டத்தில் அணுகி அதனை நிர்ணயிக்கத் தகுதி பெற்றவர்கள் இந்நாட்டு மக்களே.

இத்தகைய நிலையையே ஆதிபத்திய உரிமை அல்லது திறமையின் முழுமை எனக் கூறுகின்றோம். இந்திய நாட்டில் சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்ட இந்தியப் பாராளுமன்றமே ஒரே வேளையில் அதன் அரசியல் நிர்ணயசபையாகவும் செயற்பட்டு வந்தது. எமது நாட்டில இன்று நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினுல் எமது நாடு விடுதலை அடைவதற்கு முன்னமே அதற்குக் கடிவாளம் இடும் வகையில் உருவாக்கப்பட்டது.

கடந்த பொதுத் தேர்தலின்போது ஐக்கிய முன்னணியை அமைத்துக் கொண்ட ஸ்ரீலங்கா, சமசமாஜி, கம்யூனிஷ்ட் கட்சியினர் மக்களின் அங்கீகாரத்திற்காக முன்வைத்த திட்டத்தில் அரசியல் நிர்ணயசபையாக தெரிவு செய்யப்படும் பாராளுமன்றமே இயங்கி இலங்கைக்கு உரியாப்பை உருவாக்கும் உரிமையை மக்களிடம் கோரி நின்றது. இத்தேர்தல் திட்டத்தை ஏற்று வாக்களித்த பொதுமக்கள் பாராளுமன்றமே அரசியல் நிர்ணய சபை நடாத்தும் உரிமையை அங்கீகரித்துள்ளனர். நாட்டின் இளமை முதுமைபெற இப்புதிய அரசியல் திட்டம் வழிவகுக்கும் என்பது திண்ணம்.

இந்நாட்டில் வாழும் சகல இன மத மொழிப்பிரிவுகளையும் சார்ந்த பிரதிநிதிகள் இச்சபையில் மாத்திரமன்றி பாராளுமன்றத்தில் உள்ள ஆளும் கட்சியிலும் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்பேசும் மக்களின் நல உரிமைகளைப் பிரித்தானிய பேரரசின் உதவியுடனும் இந்நாட்டில் இயங்கி வருகின்ற அடிமை நாடுகளின் நீதிபரிபாலனத்திற்கென நியமிக்கப்பட்ட பிரிவிக் கவுன்சில் என்ற நீதிஸ்தாபனத்தின் மூலம் எம்மைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்கில்லை

தமிழர்கள் தனித்துநின்று போராடிஉரிமைகளைப் பெற முடியுமானுல் தமிழர் என்றோ உரிமை பெற்றிருக்கலாம். ஆனுல் இன்றும் பெருத முறையில் தனித்து நின்று சாதிக்கக் கூடியது ஒன்றுமில்லையென்ற காரணத்தினுல் தமிழினம் பின்பற்றிய அரசியலால் தமிழ் பேசும் மக்களுக்குப் பெரு ஏமாற்றமும், அதிருப்தியும் விளைந்துள்ளன.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ந் திகதி அச்சிடப்பட்டது.

## விமான விபத்தில் 17 பேர் பலி

புதுடில்லி, டிசம்பர் 19

சோவியத் விமானமொன்று இந்தியாவில் விபத்துக்குள்ளாகியதில் 17 பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

ப. கணபதிப்பிள்ளை

பொன்னம்மாவின் அருமைக் கணவரும் நாகரத்தினம், காசிலிங்கம் ஆகியோரின் தகப்பனுரும், செல்லப்பாவின் சகோதரரும் கந்தையாவின் மாமனுரும் கதிரவேலு, சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் மைத்துனரும் பரமநாதன், குருநாகல் நீர்ப்பாசன இலாகா தண்டாயுதபாணி திருமதி பரமேஸ்வரி தண்டாயுதபாணி ஆகியோரின் பேரனுமாவர். அன்னரது பூதவுடல் 'திருவேரகம்' இல்லத்திலிருந்து இன்று காலை 11 மணியளவில் ஈமைக் கிரியைகளுக்காக அராலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 2434

## மரண நினைவுதினம்

பண்டத்தரிப்பு கிராமசபை ஊழியர் மரியாம்பிள்ளை மனுவேற்பிள்ளையின் இரண்டாவது மரண நினைவு தினத்தை முன்னிட்டும் அவரது மனைவி திருமதி மனுவேற்பிள்ளையினதும் ஆன்மசாந்திக்காகசில்லாலை புனித கதிரை மாதா தேவாலயத்தில் இன்றுமாலை 6-30 மணிக்கு வண. கட்டளைக்குரவர் பயஸ் ஓ. எம். ஐ. அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்படும். இதைக் கண்ணுறும் அன்பவர்கள் இவர்களின் ஆன்ம சாந்திக்காக வேண்டுமாறு வேண்டுகிறோம். 243


ஈழநாடு

சாதாரண வருடம் மார்கழி மாதம் 5-ந் திகதி [20-12-70]

## அற நெறிகள்

தமது தந்தை அளித்த வாக்கை நிறைவேற்றுவதே தன் மேலாய கடமை என்று அயோத்தியைச் சேர்ந்த ஸ்ரீராமன், முடி இழந்து வனவாசம் சென்றுர்.

இன்றே, சமஸ்தான மன்னர்களுக்கு எழுத்துமூலம் அளித்திருந்த வாக்குறுதிகளை, தந்தை நேரு அளித்த உறுதி மொழிகளை புதல்வியான பிரதமர் இந்திரா மறுத்து பாரத நாட்டின் அறநெறிகளைக் குப்பைக் கூடையில் வீசப்பார்ப்பதாயும் நல்ல வேளையாகச் சுப்ரீம் கோர்ட்டார் அளித்த தீர்ப்பால், இந்தியாவின் மானம் காக்கப்பட்டதென்றும் கருத்துப்பட அரசியல் ஞானியும், பாரத நாட்டின் மனச்சாட்சியுமான ராஜாஜி இடித்துக் கூறுகின்றுர்.

சோஷலிஸ புரட்சிப் புயல் அடிக்கும் இக்காலத்திலே பழைய பண்புகளைப்பற்றிப் பேசுவது பொருத்தமற்றதாகத் தோன்றலாம். ஆனுல் முடியிழந்த மன்னர்களும், நாடிழந்த நவாபுகளும் நாட்டின் மக்களே. நாட்டுக்கும் சமூகத்துக்கும் நன்கு பயன்படும்படி அவர்கள் ஏதும் பணி செய்ய முன்வந்தால், அவர்களுக்கும் இந்த ஜனநாயக அமைப்பில் தக்க இடம் அளிப்பது சாத்தியமே.

பேச்சுவார்த்தை மூலம் விட்டுக்கொடுக்க அவர்களும் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. அப்படி சுமுகமான ஏற்பாட்டைச் செய்வதில்தான் இந்திராவின் ராஜதந்திர வெற்றி அடங்கி இருக்கிறது. பாரத நாட்டின் தேசியப் பண்பும் அறநெறியும் ஒற்றுமையும் பாதுகாக்கப்படவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org